# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 12 Issue - 10

அக்டோபர் 2019 - ஸஃபர் - ரபீஉல் அவ்வல் - 1441










தமிழகத்தில் பாகிஸ்தான் பிரிவினை எதிர்ப்பு மாநாடு!

بسم الله الرحمن الرحيم

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக் கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர் களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

அல்குர்ஆன்: 4:1


**04** கஷ்மீர் ஒரு சித்தரவதைக் கூடம்

**22** கஷ்மீரின் கடந்த மாத நிலை முழு தகவல்கள்

**28** பாஜகவின் பாலியல் பயங்கரவாதங்கள்

**32** இஸ்லாம் அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி

**34** சிலுவைப் போர் 2.0

**39** வருகின்றது மதமாற்ற தடை சட்டம்

**44** அன்றும், இன்றும் தொடரும் தீண்டாமை

**48** தமிழகத்தின் பாகிஸ்தான் பிரிவினை மாநாடு

**59** வீரமங்கை நீதியின் குரல் தகில் ரமணி



# வைகறை வெளிச்சம்

அக்டோபர் 2019 - ஸஃபர் - ரபீஉல் அவ்வல் 1440

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.


வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in

# கவர் ஸ்டோரி





காஷ்மீரில் ஆகஸ்ட் 5ம் தேதி காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்ட பிறகு காஷ்மீர் ராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் முடக்கப்பட்டு தகவல் தொடர்புகள் முழுவதும் துண்டிக்கப்பட்டன. செல்போன், இணையதளம் எதுவும் கிடையாது. கிட்டத்தட்ட இரண்டு மாதங்களை கடந்தும் காஷ்மீரின் அவல நிலை மாறவில்லை.

ஆனால், ஒவ்வொரு முறையும் அரசு தரப்பிலிருந்து காஷ்மீரில் இயல்பு நிலை நிலவுகிறது என அறிக்கை வெளியிடப்படுகிறது. ஆனால், காஷ்மீரின் உண்மையான நிலை மிக மோசமாக இருப்பதாக காஷ்மீர் சென்று வரும் தலைவர்கள் தெரிவிக்கிறார்கள்.

காஷ்மீருக்குள் எவரையும் தொடர்பு கொள்ள முடியாததால் தன் சொந்தங்கள் எங்கிருக்கிறார்கள்?..எப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாமல் காஷ்மீருக்கு வெளியே இருக்கும் அவரது உறவினர்கள் போராடி வருகிறார்கள்.

மகனை காணவில்லையென தந்தையும், தந்தையை காணவில்லை என மகன்களும் காவல் துறையினரிடம் எங்கே வைத்திருக்கிறீர்கள் என கேட்டு கையேந்தி நிற்கிறார்கள்.

**காஷ்மீரின் உண்மை நிலை என்ன?**

காஷ்மீரின் உண்மையான நிலையை அறிந்து கொள்ள BBC பெண் பத்திரிக்கையாளர் கீதா பாண்டே காஷ்மீரின் பகுதிக்கு செல்கிறார். காஷ்மீர் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

காஷ்மீரின் நிலையை கீதா பாண்டே விவரிக்கிறார், “ போட்டோ எடுப்பதற்காக நான் காரிலிருந்து கீழே இறங்கினேன். எங்களை பார்த்து பத்திரிக்கையாளர்கள் என்று அறிந்து கொண்ட வயதானவர்கள் சிலர், இதுபோல் மோசமான நிலையை நாங்கள் உணர்ந்ததில்லை. எங்களை முழுமையாக சிறை வைத்திருக்கிறது இந்திய அரசு என்றார்கள்.

அங்கே வந்த ராணுவம் அவர்களை மிரட்டி அனுப்பியது. ஆனால் நான் காரினுள் ஏறுவதற்கு முன்பு ஒரு காஷ்மீர் இளைஞன் தன் சிறு வயது மகனை கையில் ஏந்தியவாறு, நான் இந்தியாவிற்கு எதிராக ஆயுதம் ஏந்த தற்போது தயாராக இருக்கிறேன் என்றார்.” எனக்கு இது மிக அதிர்ச்சியாக இருந்தது என்கிறார் கீதா பாண்டே.

ஒரு நிமடம் யோசித்து பாருங்கள், அடக்குமுறைகள் அமைதியை என்றுமே உருவாக்காது. அவர்களின் கோபத்தை தான் அதிகப்படுத்தும். தன் சிறு வயது குழந்தையை கையில் ஏந்தியவாறு ஒரு இளைஞன் நான் துப்பாக்கியை ஏந்த தயார் என ஊடகத்திற்கு சொல்வாரானால் நான் உயிரையும் இழக்க தயார் என்பது தான் அர்த்தம். இது பயிற்சி பெற்ற போராளியின் வார்த்தையல்ல. பொது மனிதனின் வார்த்தை.

“நான் சென்ற இடமெல்லாம் காஷ்மீரிகளின் உணர்வுகள் இப்படியானதாக தான் இருந்தது. கடைகள், கல்லூரிகள், பள்ளிகள், அலுவலகங்கள் என எல்லாம் மூடப் பட்டிருக்கிறது. அரசு வாகனங்கள் ரோட்டில் தென்படவே இல்லை. பார்க்கும் இடமெல்லாம் ராணுவம் நிறுத்தப்பட்டிருக்கிறது. காஷ்மீரிகள் தங்கள் வீடுகளுக்குள் அடைக்கப் பட்டிருக்கிறார்கள்” என்கிறார் பத்திரிக்கையாளர் கீதா பாண்டே.

**இந்தியாவுக்கும் காஷ்மீருக்குமான பாலத்தை நீக்கிவிட்டீர்கள்**

காஷ்மீரிலிருந்து வெளியே வந்து டெல்லியில் பயின்று வரும் 25 வயது

# கஷ்மீர்

## ஒரு சித்ரவதைக் கூடம்



மாணவர் யாசீன் மாலிக், இந்தியாவின் பொருளாதாரத்தில் வெகுவாக ஈர்க்கப்பட்டவர். பிரிவினையில் நம்பிக்கை யில்லாதவர். காஷ்மீரில் நடக்கும் அடக்குமுறை பற்றி பேசுகிறார்," இதற்கு முன் நான் இப்படியொரு நிலையை சந்தித்தது இல்லை. எங்கே இருக்கிறார்கள், நலமாக இருக்கிறார்களா என்று கேட்டு கொள்வதற்கு கூட தொடர்பு கொள்ள முடியவில்லை.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு என எங்களை நம்பச் சொல்கிறீர்களா?.. நாங்கள் முட்டாள்கள் இல்லை. இந்தியாவுக்கும் காஷ்மீருக்குமான தொடர்பு நீண்ட காலமாகவே சரியில்லை. ஆனால் இந்தியாவையும் காஷ்மீரையும் இணைக்கும் பாலமாக காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து தான் இருந்தது. தற்போது அதையும் நீக்கி விட்டார்கள். இதனை எந்த ஒரு காஷ்மீரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

எத்தனை நாட்களாக வேண்டுமானால் இருக்கட்டும். இந்த ஊரடங்கு உத்தரவு எல்லாம் நீக்கப்பட்ட பிறகு காஷ்மீரிகள் ஒவ்வொருவரும் இதற்கெதிராக போராட வருவார்கள். இனி வீட்டிற்கு ஒரு பிரிவினைவாதியை உருவாக்க போகிறீர்கள் என்பது மட்டும் உண்மை."

**இப்படியொரு கோபத்தை நான் இதுவரை உணர்ந்ததில்லை**

பத்தாண்டுகளுக்கு மேலாக நான் காஷ்மீரில் சென்று செய்தி எடுத்திருக்கிறேன். போர் சமயத்தில் கூட இவ்வளவு பதற்றமும், கோபமும் காஷ்மீரிகளிடத்தில் இல்லை. ஆனால் இன்று ஒவ்வொரு காஷ்மீரிகளும் கொதித்து போய் இருக்கிறார்கள்.

சமீபத்தில் மோடி "இது ஒரு புது சகாப்தத்தின் ஆரம்பம் என்றார்" ஆனால் காஷ்மீரின் மாணவர் ஒருவர் சொன்னதை சொல்கிறேன், தற்போதைய காஷ்மீர் உங்களது அடக்குமுறையால் ஒடுங்கி இருக்கிறது "புயலுக்கு முன் அமைதியாகத் தான் இருக்கும்", "கடல் அமைதியாகத் தான் இருக்கும் ஆனால் பிறகு தான் சுனாமியை உணர முடியும்".



இதுதான் தற்போதைய காஷ்மீரின் நிலை என்கிறார் பத்திரிக்கையாளர் கீதா பாண்டே.

**காஷ்மீரில் கர்ப்பிணிகளின் நிலை**

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து காஷீரின் மருத்துவமனைகள் எந்த அடிப்படை வசதியும் இல்லாமல் முடங்கி போயிருக்கின்றன. கர்ப்பிணிகள் என்றால் கூட மருத்துவமனைக்கு நடந்து போகவே வேண்டியிருக்கிறது. பிரசவ வலியில் கூட ராணுவம் அனுமதிக்காமல் 5 கி.மீக்கு மேல் நடந்து சென்று நடுவீதியிலே மயங்கி விழுந்து குழந்தை பெற்றுக்கொண்ட அவல நிலை காஷ்மீரில் நிலவுகிறது. இதை சென்ற மாத இதழில் விரிவாக தந்திருக்கிறோம்..

ஒரு மாத காலம் ஆகியும் இந்நிலை மாறாமல் தொடர்கிறது. இதிலும் காஷ்மீரக பெண் ஐமானின் கதை வேதனையின் உச்சம். ஐமான் நிறைமாத கர்ப்பிணி. அவரை அவர் சகோதரன் தான் மருத்துவமனையில் அனுமதிக்கிறார். அவர் சகோதரன் ஒரு பத்திரிக்கையாளர். காலை முழுவதும் பத்திரிக்கை செய்திகளை கொடுத்துவிட்டு இரவு வந்து தங்கையை பார்த்துக்கொள்வார்.

ஐமானின் ஒட்டுமொத்த குடும்பமும் அவரது முதல் குழந்தையை வரவேற்பதற்காக தயார் நிலையில் இருந்தது. மருத்துவர்கள் பரிசோதனையில் குழந்தை சீராக இருக்கிறது கவலைப்பட ஒன்றுமில்லை என்று சொல்லி விட்டார்கள்.

அன்றைய தினம் ராணுவத்தின் கட்டுப்பாடுகள் அதிகமாக இருந்ததால், தான் தயாரித்த செய்திகளை கொடுத்து விட்டு இரவு 10.30 மணிக்கு மருத்துவ மனைக்கு வந்தார் ஐமான். ஆனால், அங்கே நிலைமை சரி இல்லை. எல்லோரும் மூலையில் அழுது கொண்டிருந்தார்கள்.

அவரசரமாக மருத்துவர் அறைக்கு ஓட, மருத்துவர்கள் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொன்ன வார்த்தையே என்ன நடந்திருக்கும் என அவருக்கு புரிய வைத்தது. மேலும் மருத்துவரிடம் விசாரிக்க, சிசுவின் இதய துடிப்பு குறைவான போது உயர் மருத்துவ நிபுணரை தொடர்பு கொள்ள முயற்சித்தோம். ஆனால், தற்போது அரசால் போடப்பட்டிருக்கும் தகவல் தொடர்பு தடையால் ஒன்னும் செய்ய முடியவில்லை.

ஒரு போன் கால் ஒரு உயிரை காப்பாற்றியிருக்கும். ஆனால் அந்த உயிரை இழந்து விட்டோம். இது ஐமானின் கதை மட்டுமல்ல. காஷ்மீரில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பலரின் கதை இதுதான்.

இறந்த சிசுவின் அடக்கம் எல்லாம் முடிந்து பத்திரிக்காளர் சந்திப்புக்கு செல்கிறார் ஐமானின் சகோதரன், அங்கு அரசு தரப்பு, காஷ்மீரின் நிலைமை சீராகி கொண்டிருக்கிறது யாரும் கவலடைய வேண்டாம் என்றனர்.

**காஷ்மீரிகள் கேள்வி கேட்டால் தேசத்துரோக வழக்கும், மிரட்டல்களும்**

இந்தியாவில் இருந்து வெளிநாட்டில் சென்று வசிக்கும் காஷ்மீர்கள் கூட காஷ்மீரின் நிலையை பற்றி பேசிட கூடாது என நினைக்கின்றன அரசுகள். அரசின் நடவடிக்கையை கேள்வி எழுப்பினால் உங்களது கடவுச்சீட்டையே(றிணீஉஜேஷீகூஷீமீ) ரத்து செய்து விடுவொம் என மிரட்டுகிறார்கள்.

காஷ்மீரின் நிலை மோசமாக இருக்கிறது. ராணுவ அடக்குமுறையால் காஷ்மீர் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ,மோடியின் ஆட்சிக்கு பிறகு தான் இத்தகைய சம்பவங்கள் நடந்திருக்கிறது என்ற ஊடகத்தின் செய்தியை பகிர்ந்து தன் கருத்தை சொன்ன வெளிநாட்டில் பணிபுரியும் ஐந்து பேருக்கு

பாஸ்போர்ட்டை நீக்கிவிடுவோம் என எச்சரிக்கை கடிதம் அனுப்பப்பட்டு இருக்கிறது.

பாஸ்போர்ட்டை நீக்குவதில் பல சட்டச்சிக்கல் இருந்தாலும் வெறும் சமூகவலைத்தளங்களில் கருத்து சொல்வதாலேயே இத்தகைய பெரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் கருத்து சுதந்திரம் அற்ற சர்வாதிகாரி நாடாக மாற்றப்படுகிறதா?..

**சமூக செயற்பாட்டாளர் செஹ்லா ரஷீத்துக்கு தேசத்துரோக வழக்கு**

காஷ்மீரின் சமூக செயற்பாட்டாளரான செஹ்லா ரஷீத் காஷ்மீரில் நிலவி வரும் அடக்குமுறையை இந்தியாவிற்கு தெரியும் படி தனது டிவிட்டர் பக்கத்தில் எழுதிக்கொண்டிருந்தார்.

ஆனால் இது மக்களிடையே வன்முறையை தூண்டுகிறது என்று கூறி அவர் மீது தேசத்துரோக வழக்கு போடப்பட்டிருக்கிறது.

ஆனால், காஷ்மீரில் நடக்கும் உண்மையான நிகழ்வுகளை தான் நான் பதிவு செய்திருக்கிறேன். என்னென்ன அடக்குமுறைகள் கையாளப்பட்டிருக்கிறது நான் சொல்கிறேன். வழக்கு போட்டு விசாரிப்பதற்கான தைரியம் இருக்கிறதா என கேட்கிறார் ரஷீத்.

எப்படியான அடக்குமுறைகளை கொண்டு எங்களை அமுக்கினாலும் காஷ்மீரின் உரிமையை காக்க கண்டிப்பாக குரல் கொடுத்து கொண்டே இருப்போம் என்கிறார்கள் காஷ்மீரிகள்.

**சர்வதேச அளவில் இந்தியாவின் நடவடிக்கைக்கு எதிர்ப்புகள் - ஐக்கிய நாடுகள் அறிக்கை**

பிரிவு 370 நீக்கப்பட்டதிலிருந்து காஷ்மீரில் மனித உரிமை மீறல் அதிகரித்திருக்கிறது அதனை இந்தியா கைவிட வேண்டும் ஐ.நா அறிவுறுத்தியிருக்கிறது.

ஜெர்மனியில் நடைபெற்ற ஐ,நாவுடைய 42வது பேரவைக்குழுவின் கூட்டத்தில் உயர் ஆணையாளர் மிக்கலே பெச்சாலட் பேசும் போது, இந்திய அரசு காஷ்மீரில் தொடர்ச்சியாக மனித உரிமை மீறலில் ஈடுபடுவதாக புகார்கள் வந்து கொண்டே இருக்கிறது. அத்தகைய மனித உரிமை மீறலை இந்தியா கைவிட வேண்டும்.

காஷ்மீரின் இணையதளம் முடக்கம், சமூக ஆர்வலர்களை சிறைப்படுத்துதல், அரசியல் தலைவர்களை சிறைப்படுத்துதல் என இந்தியாவின் நடவடிக்கைகள் கவலைக்கு உட்படுத்துகின்றன. காஷ்மீரின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்று இந்தியாவிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

**மோடிக்கு விருது: உலகெங்கும் குவியும் எதிர்ப்புகள்**

பில்கேட்ஸ் அவர்களுடைய நிறுவனத்தின் கேட்ஸ் அறக்கட்டளை மோடிக்கு "உலகளாவிய கோல்கீப்பர் விருது" ஒன்றை தூய்மை இந்தியா திட்டத்திற்காக அறிவித்திருக்கிறது. இதனை எதிர்த்து அந்நிறுவனத்திலிருந்து ராஜினாமா செய்வதாக அறிவித்திருக்கிறார் ஊழியர் ஒருவர்.

42 வயதான ஷாபாஹ் ஹமீத் தகவல் தொடர்பு துறையில் சிறந்து விளங்குபவர். காஷ்மீரை சேர்ந்தவர். "இந்தியாவில் காஷ்மீரிகள் 50 நாட்களாக முடக்கப்பட்டு சிறிய மருத்துவ வசதிக்கு கூட அனுமதிக்கப்படாமல் அரசியல் காரணங்களுக்காக அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆனால், அதற்கு காரணமானவருக்கு விருது வழங்கி சிறப்பிக்கும் நிகழ்வை எப்படி ஏற்பது? நான் காஷ்மீரை சார்ந்தவள் என்ற முறையில் குறைந்த பட்சம் இந்த விருதை தரும் நிறுவனத்திலிருந்து விலகி என் எதிர்ப்பை பதிவு செய்கிறேன்." என்கிறார் ஹமீத். கடந்த 3.5 வருடங்களாக இந்நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நோபல் பரிசு பெற்றவர்களான, ஈரானை சேர்ந்த ஷிரின் எபாடி, வடக்கு ஐரிஸ் பகுதியை சேர்ந்த மைரேட் மேகுயிர், யெமன் பத்திரிக்கையாளரான அப்துல் சலாம் கர்மான் ஆகியோர் கேட்ஸ் அறக்கட்டளையின் மோடிக்கு விருது வழங்கும் முடிவை மறுபரீசலனை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். விருதை ரத்துக்கோர சொல்லி இணையத்தில் மனு ஒன்று உருவாக்கப் பட்டிருக்கிறது. அதில் இதுவரை 1,00,000க்கும் மேற்பட்டோர் கையெழுதிட்டுள்ளார்கள்.

இதுபோல் இன்னும் உலகளாவிய பல பிரபலங்கள் விருதுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக் கிறார்கள். தி கார்டியன் பத்திரிக்கையின் இணை ஆசிரியர் அகீல் பில்காமி கடுமையாக எதிர்க்கிறார். அவர் குறிப்பிடும் போது, "மனித உரிமை மீறல்களை நிகழ்த்தி வரும் தலைவருக்கு இது போல் விருதுகள் கொடுத்து புனிதப்படுத்த முனைகிறதா கேட்ஸ் அறக்கட்டளை? தூய்மை இந்தியா திட்டத்திற்காக மட்டுமே இவ்விருது என்றால் கொடுங்கோலன் முசோலினிக்கு ரயிலை தயாரித்தற்காகவே விருது வழங்கலாமா?" என்று கேள்வி கேட்டிருக்கிறார்.

**ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வையுங்கள்: ஓட்டு போடுங்கள் என்று பிரச்சாரம் செய்த வழக்கறிஞர் தற்போது சிறையில்..**

காஷ்மீர் வழக்குரைஞரும் பார் கவுன்சிலின் முன்னாள் தலைவருமான நஷீர் அகமது பிரிவு 370 நீக்கப்பட்டதற்கு பிறகு கைது செய்யப் பட்டிருக்கிறார். காஷ்மீரின் அரசியல் கட்சிகள் கூட தேர்தலை புறக்கணித்த போது ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து வாக்களியுங்கள் என மக்களை திரட்டியவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

காஷ்மீரின் சர்ச்சைக்குள்ளான பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நஷீர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இந்த சட்டத்தின் கீழ் கைது செய்த யாவரையும் இரண்டு வருடத்திற்கு எந்த விசாரணையும் இன்றி சிறையில் வைக்கலாம்.

**பார் கவுன்சில் தலைவர் கைது**

காஷ்மீரின் தற்போதைய பார்கவுன்சிலின் தலைவரான அப்துல் கய்யும் அவர்களையும் பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்திருக்கிறார்கள். அவர்களை ஆக்ராவில் உள்ள சிறைக்கு மாற்றிவிட்டதாக கூறுகிறார்கள். அனால், அப்துல் கய்யுமின் மகள் தன் தந்தையை பார்க்க எவ்வளவு முயன்றும் அனுமதிக்கவில்லை. கய்யும் நீரிழிவு நோயால் அவதிப்பட்டு கொண்டிருந்தார். இந்த நிலையில் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறார்கள் என்கிறார்கள் அவரது பிள்ளைகள்.

**வழக்குரைஞர்களுக்கே இதுதான் நிலை**

இதுவரை எத்தனை பேர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் என தெரியவில்லை. ஆனால், நிறைய பேர் கைது செய்யப்பட்டிருக்கலாம். தகவல் தொடர்பு முடக்கப்பட்டு இருப்பதால் எண்ணிக்கையை கணக்கிட முடியவில்லை. எல்லோரும் பயத்துடன் வீட்டிலேயே பதுங்கியிருக்கிறார்கள். தகவல் தொடர்பு சீர்படுத்தப் பட்டால் தான் ஒட்டுமொத்த தகவலும் வெளிவரும் என்கிறார்கள் காஷ்மீரின் வழக்குரைஞர்கள்.

**இந்திய ஊடகங்களும் சர்வதேச ஊடகங்களும் காஷ்மீர் செய்திகளை கையாண்ட விதம்**

இந்திய ஊடகங்கள் எப்படி மோடி அரசிற்கு அடிபணிந்தும், உண்மைக்கு மாறாகவும் செயல்படுகின்றன என்பதற்கு காஷ்மீரின் செய்திகளை வழங்கிய விதமே பெரும் சாட்சி.

காஷ்மீருக்கான தனியுரிமை அரசியல் சாசன பிரிவு 370 நீக்கப்பட்ட பிறகு ஆகஸ்ட் 9ம் தேதி ஒரு பெரும் போராட்டம் காஷ்மீரில் நடத்தப்பட்டது. ஆனால் இதனை எந்த இந்திய ஊடகங்களும் வெளியிடவில்லை. மாறாக பிபிசி, ராய்ட்டர்ஸ், அல்ஜெசிரா போன்ற சர்வதேச ஊடகங்கள் தான் வெளிக்கொண்டு வந்தன.

ரிபப்ளிக் போன்ற பாஜகவின் செய்தி ஊடகங்கள் இது பொய்ச்செய்தி என்று கூட சொன்னார்கள்.

**வெளிவந்த செய்திகளை கூட வெளியிட மறுத்த ஊடகங்கள்**

நியூயார்க் டைம்ஸ், சர்வதேச செய்தி ஊடகம் காஷ்மீரில் இதுவரை 2000 மக்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் என்று செய்தி வெளியிடுகிறது. ஆனால், இந்தியாவின் Times Now ஊடகம் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தீவிரவாதிகள் என்று செய்தி வெளியிடுகிறது.

The independent என்ற சர்வதேச ஊடகத்தில் காஷ்மீரில் போராட்டங்களில் கொல்லப் பட்டவர்களுக்கு இறப்பு சான்றிதழ் வழங்குவதில்லை என்று செய்தி வெளியிடப்பட்டது. முக்கிய செய்தியாக இருப்பினும் எந்த இந்திய ஊடகமும் இச்செய்தியை வெளியிடவில்லை.

அமெரிக்க பத்திரிக்கை Foreign Policy இராணுவ வீரர்கள் காஷ்மீரிகளை வந்தே மாதரம் சொல்லசொல்லி அடித்து துன்புறுத்துகிறார்கள் என்று செய்தி வெளியிடுகிறது. ஆனால், இன்னொரு புறம் India Tv எனும் இந்திய ஊடகம் இராணுவ வீரர்கள் காஷ்மீரில் அமைதிக்காக போராடுகிறார்கள் என செய்தி வெளியிடுகிறது.

பிபிசி, காஷ்மீரின் மருத்துவமனைகளில் நிலைமை மோசமாக உள்ளது என்று கூறிய மருத்துவரை இராணுவத்தினர் இழுத்து சென்றது என வெளியிட்ட காணொளி செய்தியை எந்த இந்திய ஊடகமும் கையிலெடுக்கவில்லை.

**திசை திருப்பும் செய்திகளையும் வெளியிட்ட இந்திய ஊடகம்**

முஹம்மது அசாத் எனும் காஷ்மீரி, பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதை ஆதரித்து பேசும் காணொளியை சில ஊடகங்கள் திரும்ப திரும்ப பிரதிபலிப்பு செய்து காஷ்மீரிகள் ஏற்றுக் கொண்டார்கள் என்று கூறினார்கள். ஆனால் அசாத் பாஜகவை சேர்ந்தவர் என்று சொல்லவில்லை.

இந்தியாவின் பிரஸ் கவுன்சிலின் தலைவர் மந்த்ரா " சில செய்திகளை போடாமலே இருப்பது நல்லது" என்று மத்திய அரசின் நடவடிக்கைக்கு ஆதரவாக பேசினார். ஆனால் அதே நேரத்தில் தமிழகத்தில் இந்து பத்திரிக்கை ஆசிரியர் ராம் பத்திரிக்கை சந்திப்பு நடத்தி இது ஜனநாயக விதிமீறல் என்றார்.

- தகவல் The quint 31.08.19

**காஷ்மீரின் அரசியல் தலைவர்களின் நிலை**

காஷ்மீரில் நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரிகாமி

மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவர் சீதாராம் யெச்சூரி தன் கட்சியை சேர்ந்த தலைவர் திரிகாமி அவர்களை சந்திக்க உச்சநீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்து அவரது உடல்நிலையையும் காரணம் காட்டி மருத்துவ சிகிச்சைக்கான அனுமதியையும் உச்சநீதிமன்றத்தின் வாயிலாக பெற்றார்.

காஷ்மீரை விட்டு வெளியில் வந்த பிறகு பேட்டியளித்தவர், ஆகஸ்ட் 4ல் என் வீட்டில் நான் சிறை வைக்கப்பட்டேன். எந்த காரணமும் என்னிடம் சொல்லவில்லை. நாங்கள் காஷ்மீரிகள்

கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறோம்.

ஃபரூக் அப்துல்லா போன்ற காஷ்மீர் அரசியல்வாதிகளெல்லாம் தீவிரவாதிகள் இல்லை. இந்திய ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் அவர்களை ஏன் சிறையில் வைத்திருக்கிறீர்கள்?

காஷ்மீரை போல மற்ற மாநிலங்களில் செய்து பாருங்கள் வலி புரியும். டெல்லியை ஒரு மாதம் முடக்கிபோட்டு தகவல் தொடர்பு அனைத்தும் துண்டிக்கப்பட்டால் எப்படி இருக்கும்?.. அதை விட மோசம் தான் காஷ்மீரிகளின் நிலை.

காஷ்மீரிகள் சொர்க்கத்தில் வாழும் வாழ்க்கையை கேட்கவில்லை. மற்ற மாநிலங்களை போல் அமைதியான வாழ்க்கையை தான் கேட்கிறோம்" என உணர்வுபூர்வமாக கூறினார். The hindu 16.07.19

**காஷ்மீரின் முன்னாள் முதல்வர் ஃபரூக் அப்துல்லா**

காஷ்மீரின் முன்னாள் முதல்வரும், முக்கிய தலைவருமான ஃபரூக் அப்துல்லாஹ் தனி அறையில் குற்றவாளியை போல் அடைத்து வைக்கப் பட்டிருக்கிறார். அதுவும் "பொது பாதுகாப்பு சட்டத்தின் (PSA)" கீழ் அடைக்கப்பட்டிருக்கிறார். பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் யாரை வேண்டுமானாலும் இரண்டு வருடங்களுக்கு சிறை வைக்க முடியும்.



பல மாடிகள் கொண்ட ஃபரூக் அப்துல்லாஹ்வின் வீட்டில் ஒரு அறையில் அடைக்கப்பட்டு மற்ற எல்லா அறைகளும் காவல்துறையினரால் சீல் வைக்கப்பட்டிருக்கிறது. அவரை பார்ப்பதற்கு யாருக்கும் அனுமதி இல்லை. வேலைக்காக இருந்த ஒரு பணியாளரையும் இனி வேலைக்கு வரக்கூடாது என்று மிரட்டி அனுப்பிவிட்டனர். அப்துல்லாஹ்வின் மகள் பக்கத்து வீட்டில் இருந்தும் கூட பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

அப்துல்லாவின் மகள் சஃபியா கான், 83 வயதான என் தந்தை நோய்வாய்பட்டவர். அவருக்கு தொடர்ச்சியான மருத்துவ சிகிச்சை தேவை அதை நான் தான் செய்து வந்தேன். தற்போது 45 நாட்களுக்கு மேலாகியும் அவரை பார்ப்பதற்கு கூட அனுமதிக்கவில்லை. எதற்காக இவ்வளவு பெரிய அடக்குமுறை என புலம்புகிறார்.

ஃபரூக் அப்துல்லாவின் மீது எடுக்கப்பட்டிருக்கும் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்தும் மகளைக் கூட இன்னும் பார்ப்பதற்கு அனுமதிக்கவில்லை காவல்துறை அதிகாரிகள்.

- The Hindu 16.07.19

**தமிழ்நாட்டிலிருந்து ஒலிக்கப்பட்ட காஷ்மீரிகளுக்கான குரல்**

தொல்.திருமவளவன் அவர்களின் அறிக்கை.

இந்த நடவடிக்கையை எதிர்ப்பது தான் எங்கள் கட்சியின் நிலைப்பாடு. பாஜகவின் இந்த நடவடிக்கை அரசியலமைப்புக்கே எதிரானது. இந்தியாவின் இறையான்மைக்கு எதிரானது. பாஜகவின் இந்த செயல் கார்பரேட்டுகளுக்கானது. அவர்களுக்காக தான் அவர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்காகவே ஜம்மு காஷ்மீரின் கதவு திறந்துவிடப்பட்டிருக்கிறது.

இன்னும் சில காலங்களில் காஷ்மீரில் பெரு முதலாளிகள் முதலீடு செய்வார்கள், அங்கிருக்கும் வளங்களையெல்லாம் சுரண்டி காஷ்மீரின் வளத்தை நாசமாக்குவார்கள்.

இந்த நடவடிக்கையை ஜம்மு காஷ்மீருக்கு எதிரான நடவடிக்கையாக மட்டும் பார்க்க முடியாது. அனைத்து மாநிலங்களுக்கும் எதிராக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை. மாநிலங்களின் உரிமையை அடுத்தடுத்து பறித்து வருகிறது. என்,ஐ,ஏ



சட்டம், ஆர்.டி,ஐ சட்டம், அணை பராமரிப்பு சட்டம் என கொண்டு வரப்பட்டவை எல்லாம் மாநில உரிமைகளுக்கு எதிரானது.

அவர்களின் திட்டம் “ஒரே நாடு ஒரே பண்பாடு, ஒரே நாடு ஒரே தேர்வு, ஒரு நாடு ஒரே அட்டை” என இந்தியவை சனாதன இந்தியாவாக மாற்றுவதே. அவர்கள் போடக்கூடிய “புதிய இந்தியாவை” உருவாக்குவோம் என்ற கோசம் சனாதான இந்தியாவை உருவாக்குவது என்பதே.

தற்போது காஷ்மீரில் எடுத்து வரும் இராணுவ நடவடிக்கை மிக மோசமனது. ஒரு மாநிலத்தையே முடக்கி வைத்திருக்கிறார்கள். இவர்களின் அடுத்தடுத்த குறி பொது சிவில் சட்டம், ராமர் கோவில் என்று தான் இருக்கும். இறுதியாக கேரளா, தமிழ்நாட்டில் தங்கள் ஆட்சியை பிடித்து விட வேண்டும் என நினைக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் அது நடக்காது. இங்கே சாதியையும், மதத்தையும் கூறி பிரிவினையை உண்டாக்கிட முடியாது ஏனென்றால் தமிழகம் இந்தியாவிலிருந்து வேறுபட்டு நிற்க கூடியது.

- தகவல் The Caravan 02.09.19

**காஷ்மீர் பத்திரிக்கையாளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்**

காஷ்மீரில் உள்ள பத்திரிக்கையாளர்களுக்கு எப்போதுமே கஷ்டமான காலம் தான். ஆனால், பிரிவு 370 நீக்கப்பட்டு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின் அவர்களின் நிலை மோசமாக மாறியிருக்கிறது.

மாநிலமெங்கும் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் பத்திரிக்கையாளர்கள் ராணுவத்தினரின் அடக்குமுறையும் சேர்த்து சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஆண் பத்திரிக்கையாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதும், பெண் பத்திரிக்கையாளர்களை மிரட்டுவதும் என பல்வேறு சம்பவங்கள் நடந்து வருகிறது.

ஊரடங்கு உத்தரவு பிறக்கப்பட்டிருப்பதால் பத்திரிக்கையாளர்கள் காவல்துறையினரிடம் தனியாக உரிய அனுமதி சீட்டு பெற வேண்டும். ஆனால் அப்படி உரிமம் பெற்றும் ராணுவத்தினர் பத்திரிக்கையாளர்களை சுதந்திரமாக விடுவதில்லை.

**பத்திரிக்கையாளர் கையை உடைத்த ராணுவம்**

காஷ்மீரின் தினசரி நாளிதழ் ஒன்றில் பணிபுரியும் ஜாஹிர் கானும் அவரது நண்பர்களும் செய்தி சேகரித்து கொண்டிருந்த போது கொடூரமாக ராணுவத்தாரால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் ஜாஹிர்கானின் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது.

காஷ்மீரின் பெண் பத்திரிக்கையாளர் பட் மற்றும் அவரது கேமராமேனும் இணைந்து பெல்லட்டினால் இறந்த அஸ்ரார் வானியின் இறுதி சடங்கின் செய்தியை சேகரிக்கும் போது தடுத்து நிறுத்தப்பட்டு, ஆபாசமாக பேசி கேமராவை உடைத்து விடுவோம் என ராணுவத்தாரால் மிரட்டப்பட்டிருக்கிறார்கள்.

ராணுவத்தினரின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து கண்டன அறிக்கை வெளியிட்டிருக்கிறது “உழைக்கும் காஷ்மீர் பத்திரிக்கையாளர்கள் சங்கம் (KWJA)”

காஷ்மீரின் பெண் பத்திரிக்கையாளர் ரிஃபாத் மொஹைதீன் செய்தி சேகரிக்க சென்ற போது காவல்துறையினரால் கடுமையான ஆபாச பேச்சுகளுக்கு உள்ளாக்கப்பட்டு அவரது காரும் தாக்கப்பட்டது. இதனை தொடர்ந்து காஷ்மீரின் பெண்கள் பத்திரிக்கை சங்கமும் கண்டனம் வெளியிட்டிருக்கிறது.

இதுவரை இரண்டு பத்திரிக்கையாளர்கள் சிறைப் படுத்தப்பட்டிருக்கின்றனர். ஆனால், காஷ்மீரிகள் சுதந்திரமாக இருப்பதாக இந்திய வெகுஜன ஊடகங்கள் சொல்லி வருகின்றன.

**முக்கிய கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் தடுத்து நிறுத்தப்படும் காஷ்மீரிகள்**

ஹார்ட்வேர்ட் பல்கலைக்கழகத்தில் காஷ்மீரை சேர்ந்த முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி ஷா ஃபைசல் பங்கு கொள்ள அனுமதி மறுக்கப்பட்டு தற்போது வரை தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

அதுபோலவே, டியூட்ஸ்வ் வெல்லே எனும் ஜெர்மனி பத்திரிக்கையின் ஆசிரியராக பணிபுரியும் ஜீலானி அவர்களுக்கும் ஜெர்மனியில் நடைபெறும் கூட்டத்தில் பங்கு பெற தடை வியீக்கப் பட்டிருக்கிறது. விமான நிலையம் வரை சென்று எந்த வித அதிகாரப்பூர்வ அறிவிப்பும் இல்லாமல் காவல்துறையினரால் திருப்பி அனுப்பப்பட்டார்.

- தகவல்: இந்தியன் எக்ஸ்பிரஸ் 01.09.19

**திட்டமிட்டு மாணவர்களுக்குள் புகுத்தப்படும் காஷ்மீர் வெறுப்பு**

குஜராத்தில் உள்ள பள்ளிகளுக்கு மோடியின் பிறந்த நாளை பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதின் சாதனை நாளாக கொண்டாட வேண்டும் என்று அறிக்கை வெளியாயிருக்கிறது.

அந்த அறிக்கையில், மோடி அரசால் எடுக்கப்பட்ட, பிரிவு 370 மற்றும் பிரிவு 35A நீக்கப் பட்ட நடவடிக்கைக்கு நாடு முழுவதும் ஆதரவு அதிகரித்திருக்கிறது. காஷ்மீர் மக்களும் இதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நம் பிரதமர் மோடி அவர்களின் பிறந்த






நாளன்று பிரிவு 370 நீக்கப்பட்ட சாதனையின் நினைவாக இது தொடர்பான கட்டுரை போட்டி, பேச்சு போட்டி போன்றவற்றை பள்ளி நிர்வாம் நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இதனை அகமதபாத் மாவட்ட பள்ளி நிர்வாகம் தான் முன்னெடுத்திருக்கிறது. இதை பற்றி நிர்வாக தலைவரிடம் கேட்கும் போது, எப்படி முன்னாள் நேருவுக்கு பிறந்த நாளில் "குழந்தைகள் தினம்" கொண்டாடப்படுகிறதோ அதே போல் மோடியவர்களின் பிறந்த தினத்திற்கும் ஒரு தினம் அறிவிக்கப்பட வேண்டும் என்கிறார்.

காஷ்மீரை பற்றிய மனநிலையை எதிர்கால மாணவர்களிடம் தவறாக கொண்டு சேர்க்க முனைகின்றன இத்தகைய கல்வி நிலையங்கள். பாஜக ஆளும் மாநிலங்களில் கல்வி நிலையங்கள் பாஜகவின் தேர்தல் பரப்புரைகளாக மாற்றப்பட்டு வருகிறது. இந்துத்துவத்தை போதிக்கும் பள்ளிக் கூடங்கள் எப்படி நாளைய சிறப்பான எதிர்கால தலைவர்களை உருவாக்கும்?

குஜராத்தில் உள்ள 33 மாவட்டத்தில் மொத்தம் 11,958 பள்ளிகளில் 28,09,958 மாணவர்கள் படிக்கிறார்கள். இத்தனை லட்சம் மாணவர்களின் மனதில் பாஜகவின் சித்தாந்தை திணிக்க முயல்வது எத்தகைய கொடூரமான செயல்!

**முஸ்லிம்களுடன் இணைந்து நிற்கும் காஷ்மீர் பண்டிட்கள்**

காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்ததற்கான மத்திய அரசின் முடிவை எதிர்த்து அதனை திரும்ப பெறுமாறு உச்சநீதிமன்றத்தில் வழக்கை தொடுத்திருக்கிறார் முன்னாள் இந்திய விமான துணை படைத்தளதியும், காஷ்மீர் பண்டிட்டுமான கபில் காக் அவர்கள்.

காஷ்மீர் பண்டிட்கள் மத்திய அரசின் நடவடிக்கையை ஆதரிப்பது போல் வெளியில் காட்டப்பட்டாலும் பலர் எதிர்த்து தான் நிற்கின்றனர்.

கபில் காக் சொல்கிறார், "என்னுடைய காஷ்மீர் பண்டிட் அடையாளம் என்னுடைய காஷ்மீர் என்ற பெரிய அடையாளத்தை விட பெரிதில்லை. எனக்கு காஷ்மீர் தான் முக்கியம்.

தற்போது காஷ்மீர் பண்டிட்கள் பள்ளத்தாக்கில் உள்ள மற்ற காஷ்மீரிகளை அழிப்பதற்கான பெரும் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர். வெளியேறும் காஷ்மீர் பண்டிட்களை இந்தியாவில் உள்ள வலதுசாரி அமைப்புகள் பல சலுகைகளுடன் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றன. காஷ்மீரை விட்டு வந்த பண்டிட்களுக்கு பல பெரிய கல்வி நிறுவனங்களில் வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப் படுகிறது.

காஷ்மீர் எப்போதும் ஒரு மதச்சார்பற்ற தேசமாகவே இருந்தது, இதனை நேருவின் எழுத்துக்களில் இருந்தே அறியலாம், "இந்தியா பற்றிய யோசனை எனக்கு காஷ்மீரிலிருந்தே தோன்றியது. அங்கு பல்வேறு மதங்களை சார்ந்தவர்கள் பல நூற்றாண்டுகளாக ஒன்றிணைந்து வாழ்கின்றனர். ஆனாலும் பொதுவான கலாச்சார பண்புகளை பகிர்ந்து கொண்டனர்." என்கிறார் நேரு. இதுதான் காஷ்மீரின் அடையாளம். தற்போதும் சுமார் 9000 காஷ்மீர் பண்டிட்கள் தங்கள் முஸ்லிம் சகோதரர்களுடன் இணைந்து வாழ்கின்றனர். அவர்களுக்கு தனி பாதுகாப்பெல்லாம் இல்லை. ஆனால் அவர்களின் கதைகளை நீங்கள் ஊடகங்களில் படித்திட முடியாது. (ஏனெனில் முஸ்லிம்களுடன் இணக்கமாக இருப்பதை எழுத விரும்பமாட்டார்கள்). நான் அவர்களுடன் பேசியிருக்கிறேன். அவர்கள் இங்கு மகிழ்ச்சியை உணர்கிறார்கள். முஸ்லிம்களுடன் இணைந்து தான் வாழ்க்கை மேற்கொள்கிறார்கள். அவர்களுக்கு இதில் எந்த பிரச்சனையும் இல்லையென்று தான் சொல்கிறார்கள்.

தற்போதிருக்கும் இந்த அவல நிலை தொடர்ந்தால் காஷ்மீரில் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால் மோசமாக முடியும். " என்கிறார் காக்.

தங்கள் அரசியலுக்காக காஷ்மீர் பண்டிட்களை பயன்படுத்தி பண்டிட்களுக்கும் சொந்தமான காஷ்மீரை அழிக்கும் செயலை தான மத்திய அரசு தற்போது செய்து வருகிறது.

தகவல் - The caravan 17.09.19

**காஷ்மீருக்கு வெளியே இந்தியாவில் பாதிப்பை சந்திக்கும் காஷ்மீரிகள்**

படிப்பிற்காக, வேலைக்காக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் படித்து வரும் காஷ்மீரிகள் காஷ்மீரின் முடக்கத்தினால் பெரிதும் பாதிப்பை சந்தித்திருக்கிறார்கள். தங்கள் குடும்பத்தை பற்றிய தகவல் தெரியாமல், தங்கள் படிப்பிற்கான செலவை தொடர முடியாமல் அவதிப்படுகின்றனர்.

தங்கள் விடுதிக்கு, உணவுக்கு, படிப்பதற்கான புத்தகங்கள் வாங்குவதற்கு என அனைத்திற்கும் வீட்டை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு தற்போது வரை எந்த வழியும் கிடைக்கவில்லை. பலர் வாடகைப்பணம் கொடுக்க முடியாததால் வீட்டில் இருந்து வெளியேற்றப்படக்கூடிய நிலையில் உள்ளனர்.

காஷ்மீரில் நிலை மோசமாக இருப்பதால் வீட்டு சிறுவர்களை கூட ராணுவத்துக்கு பயந்து டெல்லியில் படிக்கும் மாணவர்களுடன் அனுப்பி விடுகின்றனர். (இரவு நேரங்களில் 11 வயது சிறுவர்களை கூட ராணுவம் இழுத்து செல்லும் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

கல்லூரிகளுக்குள் காஷ்மிரிகளை தீவிரவாதிகளை பார்ப்பது போல பார்க்கிறார்கள்.மிக சிலரை தவிர நண்பர்கள் யாரும் எங்களுக்கு உதவுவதில்லை என்கிறார்கள் காஷ்மீர் மாணவர்கள்.

- தகவல் scroll 13.09.19

**காஷ்மீரில் நடக்கும் அநியாயங்களை கண்டித்து IAS அதிகாரிகள் ராஜினாமா**

கேரள வெள்ளத்தின் போது பிரபலம் அடைந்த ஐஏஎஸ் அதிகாரி கோபினாத்: காஷ்மீருக்காக ராஜினாமா;

IAS வேலை கிடைத்த போது இனி மக்களின் குரலாய் பேச முடியும் என்று நினைத்தேன். ஆனால் என்னுடைய குரலையே பேச முடியாத சூழல் தான்



இங்கு இருக்கிறது என்கிறார் கோபினாத்.கேரளாவை சேர்ந்த கண்ணன் கோபினாத் 2012ல் சிவில் சர்விஸ் தேர்வில் வெற்றி பெற்று மிகிஷி அதிகாரியானார். கட்ந்த ஆண்டு கேரள வெள்ளத்தின் போது தனது அதிகமான பங்களிப்பினால் மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றவர் கோபினாத்.

தற்போது அரசின் அதிகாரபோக்கின் காரணமாக இம்முடிவை எடுத்திருப்பதாக கூறுகிறார். "காஷ்மீரில் இருந்து வந்த முதல் IAS அதிகாரி ஷா பைசல். அவர் எதற்காக தற்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்?. அரசு எடுக்கும் நடவடிக்கையை கேள்வி எழுப்பினால் சிறை தண்டனையா? அரசு ஒரு முடிவை எடுக்கிறது என்றால் மக்கள் யாருக்கும் கருத்து சுதந்திரமே இருக்கக் கூடாதா? என்னுடைய கருத்து சுதந்திரத்தை பாதுகாக்கவே இப்படியொரு முடிவை எடுத்திருக்கிறேன். இத்தகைய அரசின் ஒரு பகுதியாகவும் இருக்க நான் விரும்பவில்லை." என்று ஊடகங்களிடம் தெரிவித்திருக்கிறார் கோபிநாத்.

**கர்நாடகாவை சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரி சசிகாந்த் செந்தில் காஷ்மீருக்காக ராஜினாமா**

2009-ம் ஆண்டு ஐஏஎஸ் தேர்ச்சி பெற்றவரான சசிகாந்த் செந்தில், தமிழகத்தைச் சேர்ந்தவராவார். இவர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் பொறியியல் கல்லூரியில் பொறியியல்



படிப்பை முடித்தார். 2009-ம் ஆண்டு ஐஏஎஸ் தேர்வில் வெற்றி பெற்றார். 2009-2012 காலகட்டத்தில், பெல்லாரி மாவட்டத்தின் துணை ஆணையராக பதவி வகித்தார்.

சிவமோகா கிராம பஞ்சாயத்தின் தலைமை செயல் அதிகாரியாக இருமுறை பணி செய்துள்ளார். சித்ரதுர்கா, ராய்ச்சூர் மாவட்டங்களின் துணை ஆணையராகவும் அவர் இருந்துள்ளார். மேலும், நவம்பர் 2016 வரை தாது மற்றும் புவியியல் துறையின் இயக்குநராகவும் பதவி வகித்துள்ளார். இவர் 2017-ம் ஆண்டு, ஜூன் முதல் தட்சிண கன்னடா மாவட்டத்தின் துணை ஆணையராக பதவி வகித்து வந்தார். அம்மாவட்டத்தின் மிகவும் செயல்மிக்க துணை ஆணையர் என்ற பாராட்டை பெற்றவர் சசிகாந்த் செந்தில்.

இந்நிலையில், அவர் இன்று (செப்.6) தனது பதவியை திடீரென ராஜினாமா செய்தார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கடிதத்தில், "பன்முகத்தன்மை வாய்ந்த ஜனநாயகத்தின் அடிப்படை கூறுகள் சமரசம் செய்யப்படும் போது, அரசு அதிகாரியாக பணியை தொடர்வது நியாயமற்றது. வரவிருக்கும் நாட்கள், நாட்டின் அடிப்படையான கட்டமைப்பின் மீது மிகக் கடுமையான சவால்களை முன்வைக்கும். இம்மாதிரியான நிலையில், ஐஏஎஸ் அதிகாரியாக அல்லாமல், வெளியிலிருந்து நான் பணி செய்வதே அனைவருக்கும் சிறந்ததாக இருக்கும். காஷ்மீரில் நிகழ்த்தப்படும் வன்முறையை பார்க்கும் போது பாசிசத்தின் பிடியில் இருப்பது போல் உள்ளது", என தெரிவித்துள்ளார்.

13000 காஷ்மீர் இளைஞர்கள் இதுவரை இராணுவத்தாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் - உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கை

இந்திய பெண்கள் மற்றும் முஸ்லிம் பெண்கள் மன்றத்தின் தேசிய கூட்டமைப்பு சார்பாக நடத்தப்பட்ட உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கையில் பெரும் அதிர்ச்சியான தகவல் வெளியாகியிருக்கிறது.

காஷ்மீரில் 4000 பேர் காவலில் வைக்கப் பட்டிருப்பதாக அரசு தரப்பு கூறி வந்த நிலையில், பாதுகாப்பு படையினரால் இதுவரை 13000 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்கிறது அறிக்கை. இந்திய பெண்கள் கூட்டமைப்பை சார்ந்த அன்னி ராஜா, காவல்ஜித் கவுர், பங்குரி ஜாஹீர், முஸ்லிம் பெண்கள் அமைப்பிலிருந்து சைதா ஹமீத் மற்றும் பிரகதிஷீல் மகிளா அமைப்பிலிருந்து பூனம் கௌசிக் ஆகியோர் இணைந்து காஷ்மீரில் நிலவி வரும் பிரச்சனையின் உண்மை நிலை அறிய 17 செப்டம்பர் காஷ்மீர் சென்று செப்டம்பர் 21ல் திரும்பினார்கள்.

இவர்கள் கொடுத்துள்ள அறிக்கையின் படி, "காஷ்மீர் முடக்கப்பட்டு 43 நாட்கள் ஆன நிலையில் காஷ்மீர் மக்களின், அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் நிலை எப்படியிருக்கிறது என்றறியவே இதனை தொடங்கினோம் என்கிறார்கள்.

காஷ்மீரில் குவிக்கப்பட்டிருக்கும் ராணுவ படைகளை உடனடியாக திரும்ப பெற வேண்டும். பிரிவு 370 மற்றும் பிரிவு 35A மீண்டும் அமல் படுத்தப்பட்டு காஷ்மீரில் உள்ள மக்களை கொண்டே காஷ்மீரின் எதிர்கால முடிவுகள் எடுக்கப் படவேண்டும் என்றும் வலியுறுத்துகிறது அறிக்கை."

குழுவில் உள்ள அன்னி ராஜா அவர்கள் கூறும் போது, " நாங்கள் மருத்துவமனைகள், பள்ளிக் கூடங்கள், வீடுகள், சந்தை என காஷ்மீரின் எல்லா இடங்களுக்கும் சென்று கிராமப்புறத்திலிருந்து நகர்பகுதிகள் வரை பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், ஆண்கள் என பலதரப்பட்ட மக்களிடம் பேசினோம். 43 நாட்களாக அவர்கள் இரும்பு சிறைக்குள் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். இதை எங்கள் கண்களால் பார்க்க முடிந்தது."

"பாண்டிபோரா கிராமத்தில் இரவு 8 மணிக்கு மேல் விளக்கு வைத்து இளம்பெண் படித்து கொண்டிருந்ததால் வீடு புகுந்து அப்பாவையும், சகோதரனையும் கைது செய்திருக்கிறார்கள். கிராமங்களில் இரவு 8 மணிக்கு மேல் விளக்கு எரிய அனுமதியில்லை.

இதுவரை 13000 பேருக்கு மேல் ராணுவத்தால் இழுத்து செல்லப்பட்டிருக்கிறார்ககள். இதில் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும் இருக்கிறார்கள்.


பிடித்து செல்லப்பட்டவர்களை விடுவிப்பதற்கு பெற்றோர்களிடம் 60,000 ரூபாய் கேட்கப்படுகிறது. இழுத்து செல்லட்டவர்களை இராணுவ முகாம்களில் வைத்து சித்ரவதை செய்கிறார்கள். இப்படி சித்ரவதை செய்யப்பட்ட 15 வயது சிறுவன் தற்கொலைக்கு முயன்றுள்ளான். ஆகமொத்தம் காஷ்மீரிகளுக்கு அனைத்து வித மனித நேய உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கிறது" என்கிறது அறிக்கை.

அறிக்கையில் பாதுகாப்பு நலன் கருதி சம்பந்தப் பட்டவர்களின் பெயர்களை மாற்றியிருக்கிறோம் என்று கூறுகிறார்கள் குழுவினர்.

**காவல்துறையினர் கூறிய பொய்: சிறுவனை கொன்றது இராணுவம் தான் - மருத்துவ அறிக்கை**

காஷ்மீரில் பெல்லட் குண்டுகளால் கொல்லப்பட்ட அஸ்ரார் வானியின் மரணத்திற்கு காரணம் போராட்டக்காரர்களின் கல் எறிதல் தான் என்று காவல்துறை குற்றம் சாட்டிய நிலையில் அஸ்ராரின் இறப்பு சான்றிதழில் இறப்புக்கு காரணம் பெல்லட் குண்டுகள் தான் என்று மருத்துவ அறிக்கை தரப்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் காஷ்மீரில் 17 வயது சிறுவன் அஸ்ரார் வானி இராணுவத்தினரின் பெல்லட் குண்டுகளுக்கு பலியாக்கப்பட்டான் என்று நாடு


INSTITUTE OF MEDICAL SCIENCES
MEDICAL CERTIFICATE OF CAUSE OF DEATH
CAUSE OF DEATH
HOW DID INJURY OCCUR ?

முழுக்க சிந்தனையாளர்களால் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால், அது தவறான தகவல் காஷ்மீரில் சிறுவன் இறப்புக்கு காரணம் கல்லெறியும் போராட்டக்காரர்கள் தான் என்று காவல்துறை திசை திருப்பியது. ஆனால் தற்போது மருத்துவ அறிக்கை தெளிவற்றதாக இருக்கிறது விசாரணை மேற்கொள்ளப்படும் என அதே காவல்துறை தெரிவித்திருக்கிறது.

**அஸ்ரார் வானி**

17 வயது அஸ்ரார் வானி மருத்துவத்தை விரும்பும், பள்ளியில் முதல் மதிப்பெண் பெறும், கிரிக்கெட்டில் அப்பகுதியின் விராட் என பெருமையாக அழைக்கப்படும் மாணவர். கடந்த வாரம் ஷெர்-இ-காஷ்மீர் மருத்துவ அறிவியல் நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் உயிரிழந்தார். அஸ்ரார் அனுமதிக்கப்படும் போதும், இறந்த பிறகும் இறப்புக்கு காரணம் பெல்லட் குண்டுகளும், புகை குண்டுகளுமே என்று சொல்லப்பட்டது.

அஸ்ரார் அவரது உறவினர் ஆதிலுடன் மாணவர்களுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். 60க்கும் மேற்பட்ட சிறுவர்கள் மைதானத்தில் இருந்திருக்கிறார்கள். அப்போது விளையாட்டில் பந்து மைதானத்தை விட்டு வெளியே செல்ல அதை எடுக்க அஸ்ரார் செல்லும் போது அந்த பகுதியில் வந்த இராணுவ வாகனத்திலிருந்து மக்களை கலைந்து செல்லச் சொல்லி புகை குண்டுகள் வீசப்பட்டிருக்கிறது. அந்த குண்டுகள் அஸ்ராரை தாக்கியதும் கீழே விழுந்து விட்டான். தொடர்ச்சியாக அவன் முகத்தில் பெல்லட் குண்டுகளால்



சுட்டிருக்கிறார்கள். அருகிலிருந்த ஆதில் அவனை இழுத்து பைக்கில் அமர வைத்து மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள்.

அஸ்ரார் மீது பெல்லட் குண்டுகளில் சுட எந்த வித அவசியமும் இல்லை. அவன் பெயர் எந்த காவல் நிலையத்திலும் கல் எறியும் நபர்களின் பட்டியலிலும் கிடையாது. ஆனாலும் பெல்லட் குண்டுகளால் கொல்லப்பட்டிருக்கிறான்.

**அஸ்ராரின் குடும்பத்தினரின் கதறல்கள்**

அஸ்ராரின் தாயார் தன் மகனின் நிலையை நினைத்து கதறியவாறு சொல்கிறார், "அவன் பள்ளியில் முதல் மதிப்பெண் பெறும் மாணவன். 10ம் வகுப்பில் இரண்டு பாடங்களில் 100க்கு 100. அவனுக்கு எந்த அரசியலும் தெரியாது. அவனுக்கு படிப்பு, கிரிக்கெட் மட்டும் தான் தெரியும். பிரிவு 370 நீக்கப்பட்டது என்பதை பற்றியெல்லாம் அவனுக்கு எந்த கவலையும் இல்லை. காஷ்மீரின் ஹார்வார்ட் பள்ளியில் படிக்கிறான். படிப்பில் முதல் மதிப்பெண், கிரிக்கெட்டிலும். அவனை நினைத்து பெரிய கனவுகள் இருந்தது. அந்த பள்ளியில் படிக்க வைக்க எங்களுக்கு வசதி இல்லாத நிலையிலும் கஷ்டப்பட்டு அவனை படிக்க வைத்து அவனை பெரிய மனிதனாக மாற்றிட கனவு கண்டோம். அவனை ஏன் சுட்டீர்கள்?.. அவன் உங்களை என்ன செய்தான்?.. அப்படியே சுட வேண்டும் என்றாலும்



காலில் சுட வேண்டியது தானே! ஏன் தலையிலும் கண்ணிலும் குறி பார்த்து சுட்டீர்கள்?" என்று தன் மகனின் 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழை கையில் வைத்தவாறு அழுது புலம்புகிறார்.

அஸ்ராரின் 11 வயது தம்பி சொல்கிறார், " அவனது செல்போனின் முகப்பில் கிரிக்கெட்டர் விராத் கோலியின் படம் இருக்கும். மிகப்பெரிய விசிறி அவன். கிரிக்கெட் அருமையாக விளையாடுவான். இப்பகுதியின் விராட் என்று தான் அவனை எல்லோரும் அழைப்பார்கள். அவரை போலவே வரவேண்டும் என்பதே என் அண்ணனின் கனவு."

"என் மகனின் முகத்தை என்னால் பார்க்கவே முடியவில்லை. முகம் முழுக்க துளையாயிருந்தது. ஆனால், எவ்வித கூச்சமும் இல்லாமல் காரணம், பெல்லட் குண்டுகள் இல்லை என்கிறார்கள் காவல் துறையினர். அப்போது இந்த மருத்துவ அறிக்கை என்ன பொய்யா?" என்று மருத்துவ அறிக்கையை கையில் வைத்தவாறு கேள்வி கேட்கிறார் அஸ்ராரின் தந்தை அஹ்மத் கான்.

அஸ்ராரின் பள்ளி ஆசிரியர், அஸ்ரார் நல்ல மாணவன் எப்போதும் 90% மதிப்பெண் பெறக்கூடியவன். எங்கள் பள்ளியிலேயே முதல் மதிப்பெண் பெறும் மாணவன் என்று வருத்தப்பட்டு கூறுகிறார்.

**அஸ்ராரின் இறுதி நேரம்**

அஸ்ராரின் மாமா இர்ஃபான் கான் தான் அஸ்ராரை மருத்துவமனையில் அனுமதித்தவர், அவர் சொல்கிறார், "மருத்துவமனையில் சேர்க்கும் போது அவன் முகத்தில் முழுக்க ரத்தம் ஒழுகி கொண்டிருந்தது. அவனுக்கு குளுக்கோஸ் ஏற்றினார்கள். அவனிடம் பெல்லட் குண்டுகளில் சுடும் போது ஓடி சென்று மறைந்து கொள்ள வேண்டியது தானே என்று கேட்டேன், ஆனால் முதல் குண்டு பட்டு தன் கண்கள் எறிய ஆரம்பித்து விட்டதால் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை என்று சொன்னான்.

அவன் அந்த நிலையில் இருக்கும் போதும் என் முகம் எப்படி இருக்கிறது என்று கேட்டான், அதெல்லாம் ஒன்றுமில்லை எல்லாம் சரியாகிவிடும் என்று சொன்னேன். அஸ்ராருக்கு சி.டி ஸ்கேன் எடுக்கப்பட்ட போது மூளையில் பெல்லட் குண்டுகளால் பாதிப்பு ஏற்பட்டிருப்பதால் ஆபத்தான நிலையில் இருப்பதாக கூறினார்கள்.

இரண்டு முறை அறுவை சிகிச்சை செய்தும் எங்களால் அவனை காப்பாற்ற முடியவில்லை. என் கையை அழுத்தி பிடித்தபடியே அவன் உயிர் பிரிந்தது. அதை என்னால் மறக்கவே முடியாது" என்று புலம்புகிறார் இர்ஃபான் கான்.

காஷ்மீரிகளுக்கு என்ன செய்யப்போகிறோம் இதுவரையிலும் காஷ்மீரை நம்முடன் வற்புறுத்தி இணைத்து வைத்திருக்கிறோமே தவிர அம்மக்களை பற்றிய கவலையை எந்த அரசும் கொண்டதில்லை. அவர்களை முழுமையாக இந்தியாவுடன் இணைத்து கொண்டதாக பெருமிதம் கொள்கிறோம். ஆனால் காஷ்மீரிகளுக்கு அந்த பெருமிதம் இல்லை. காரணம், அவர்களின் நம்பிக்கையை நாம் பெறவில்லை. அவர்கள் பாதிக்கப்படும் போது அதற்கான நியாயத்தை நிலைநாட்டக்கூடிய பொறுப்பு அதிகாரத்தை கையில் கொண்டோருக்கு இருக்கிறது. ஆனால் அதற்கு மாறாக அவர்களையே குற்றவாளியாக நிறுத்துவதற்கு தான் அதிகார அமைப்பினர் முயல்கிறார்கள். இது எக்காலத்திலும் அம்மக்களை நம்முடன் ஒன்று சேர்க்காது.

- தகவல் The Print 12.09.2019

**காஷ்மீரிகளின் எதிர்ப்புகள்: இந்தியாவை விட்டு விலகும் காஷ்மீர்**

காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து பிரிவு மத்திய அரசால் நீக்கப்பட்ட பிறகு காஷ்மீர் முழுதும் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு காஷ்மீர் மக்கள் வீடுகளில் முடக்கப்பட்டனர். இதற்கெதிராக காஷ்மீர் முழுக்க எதிர்ப்பு இருந்தாலும், காஷ்மீர் முழுவதும் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் தான் இருந்து வருகிறது.

காஷ்மீரே இராணுவ அடக்குமுறைகளில் முடங்கியிருக்கும் போது ஆங்கர் என்ற காஷ்மீரின் சிறு பகுதி மட்டும் இராணுவத்தினரை தங்கள் பகுதிக்குள் அனுமதிக்காமல் போராடி வருகின்றனர். அதனால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலங்களாகவும், பெல்லட் குண்டுகளாவுமே நிரம்பி இருக்கிறது.

ஆங்கர் பகுதிவாழ் மனிதரான ஃபாசி இதை பற்றி கூறும் போது, “உலக முடிவு நாளை பற்றி மக்கள் கேள்விபட்டிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் அந்த முடிவு நாளில் தான் எங்கள் வாழ்க்கையை வாழ்கிறோம். எங்களிடம் ஆயுதங்கள் இல்லை. ஆனால்.கடவுள் எங்களுடன் இருக்கிறார். அதனால் உண்மை வெல்லும்” என்றார். ஃபாசியின் 22வயது பேரன் பிலாலுக்கு பெல்லட் குண்டு தாக்குதலால் பார்வை பறிபோயிருக்கிறது. மருத்துவர்கள் பார்வையை சரி செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள்.





இராணுவம் உள்ளே நுழைய முற்படும் போதெல்லாம் அப்பகுதி மக்கள் அனைவரும் முன்னின்று அவர்களை தடுக்கிறார்கள். இதில் முன்னனியில் செயல்படுவது அப்பகுதியின் பெண்கள் தான். கடந்த ஆண்டுகளில் இல்லாதவாறு தற்போது தான் முதன் முறையாக இப்பகுதி மக்கள் இராணுவம் உள்ளே நுழைய பெரும் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர். இராணுவத்தை தடுப்பதில் அப்பகுதியில் உள்ளவர்களின் குடும்பங்கள் நேரடியாக பங்கு பெறுகிறது. பெண்கள் தான் இதில் முன்னிற்கிறார்கள். போராட்டத்தில் பங்கு பெறும் ஒருவர் சொல்லும் போது,”நாங்கள் கல் எறிகிறோம். எங்கள் கற்கள் தீராமல் இருக்க கற்களை கொண்டு வந்து தந்து கொண்டிருக்கிறார்கள் எங்கள் பெண்கள்.”

ஆங்கரின் கடைகளெங்கும் அடைக்கப்பட்டு முகப்பில் போராட்டக்காரர்களின் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கிறது. அதில் “போராட்டக் காரர்களை பயங்கரவாதிகள் என்று சொல்லாதீர்கள் அவர்கள் நமது பிரச்சனைக்காக போராடும் போராளிகள் என்று சொல்லுங்கள்.” என்பதை போலான வாசகங்கள் ஒட்டியிருக்கிறது.

“இந்திய அரசு இங்கு இயல்பு நிலை நிலவுகிறது என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். என்ன இயல்பு நிலை இங்கு நீடிக்கிறது? எங்களது முக்கிய மசூதிகள் மூடப்பட்டிருக்கிறது. ஜாமியா மசூதி மூடப்பட்டிருக்கிறது. இது வெறும் தொடக்க மென்றும் அவர்கள் சொல்கிறார்கள்!. இதுவே தொடக்கம் என்றால் இன்னும் என்னென்ன நடக்க போகிறது என்று தெரியவில்லை” என்று



போராட்டக்காரர்களில் ஒருவர் கேட்கிறார்.

அப்பகுதியை சார்ந்த 50வயது முதியவரான முஹம்மது சுபான் சொல்லும் போது, நாங்கள் இதை மூன்று காரியங்களுக்காக செய்கிறோம். இது மூன்றும் இதுவரை நடக்கவில்லை. ஆனால் இராணுவம் உட்புகுந்தால் இது நடந்து விடும். முதலாவது, எங்கள் இளைஞர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை. இரண்டாவது, எங்கள் சொத்துகள் இன்னும் கொள்ளையடிக்கப் படவில்லை. மூன்றாவது, எங்கள் குழந்தைகளின், பெண்களின் மாணம் இன்னும் பாதிக்கப்பட வில்லை.

இந்த போராட்டங்களில் கலந்து கொள்ளும் ஒருவர் சொல்கிறார், பெண்கள் தான் இங்கு முக்கிய பங்கு வகிக்கிறார்கள். கற்களை கொண்டு வருகிறார்கள். தண்ணீரை கொண்டு வருகிறார்கள். உப்பை கொண்டு வருகிறார்கள் (உப்பு புகைக் குண்டுகளிலிருந்து தப்பித்து கொள்வதற்கு உதவுகிறது).

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவருமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 22 வயதான பெண் சைமா, அவரது இரண்டு சகோதரிகள் மயசாரா(14), குராத்(13) என ஒரு



குடும்பத்தில் மூவரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் மயசாராவின் கண்கள் பெல்லட் குண்டுகளால் குருடாக்கப்பட்டிருக்கிறது.

போராட்டத்தில் பங்கு பெறும் ஒரு இளைஞர் சொல்கிறார்," இராணுவத்தினர் வருகிறார்கள் என எச்சரிக்கை மணி அடித்ததும் நாங்கள் ஒன்றிணைந்து அவர்களை தடுக்கிறோம். நாங்கள் உண்மைக்காக போராடுகிறோம். எங்கள் சுதந்திரத்திற்காக போராடுகிறோம். அவர்கள் (மத்திய அரசு) எங்களை முழுமையாக அழிக்க நினைக்கிறார்கள். எங்கள் வரலாறுகளை அழிக்க நினைக்கிறார்கள். ஆனால் அதனை நடத்த நாங்கள் விடமாட்டோம்.

காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டதன் பிறகு, இனி காஷ்மீர் மக்கள் இந்திய அரசுடன் மிக நெருக்கமாக இருப்பார்கள் என பல்வேறு காரணம் சொல்லப்பட்டது. ஆனால் ஒருமாதம் கடந்துவிட்ட நிலையிலும், காஷ்மீரிகள் முன்னெப்போதும் இல்லாத அளவு அடக்குமுறைகளை அனுபவிக்கின்றனர். இந்தியாவை விட்டு விலகி இருப்பது போன்ற உணர்வுகளையும் காஷ்மீரிகளிடையே முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

- தகவல் The Caravan 11-09-2019

**காஷ்மீரில் வாழ்வது சுலபமல்ல**

இங்கிருக்கும் நவீன கால ஜமீன்தார்கள் காஷ்மீரில் ஒரு செண்ட் இடமாவது வாங்க வேண்டும் என்று பதிவிடுகிறார்கள். ஆனால் காஷ்மீரில் வாழ்வது ஒன்றும் சுலபமானது அல்ல. எப்போதும் துப்பாக்கிகளுக்கு பின்னால் பதற்றத்துடன் இயங்கும் நரக வாழ்க்கை காஷ்மீர்களுடையது. அதிலும் காஷ்மீரின் சிறப்பு பிரிவு எனப்படும் போலிச் சட்டம் எதேச்சதிகாரத்தால் நீக்கப்பட்ட பிறகு காஷ்மீர் முழுக்க அம்மக்கள் மீது அரச வன்முறைகள் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

**காஷ்மீர் கல்லூரி இளைஞனின் கதை**

முதாசீர் அஹ்மது கான் என்ற 24 வயது இளைஞனின் குடும்பத்தின் கதை எவரையும் கலங்கச் செய்யக் கூடியது. இராணுவத்தின் அத்துமீறல் இளைஞனின் குடும்பம், அருகிலிருப்பவர்களின் குடும்பம் என பலரின் வாழ்வை சிதைத்திருக்கிறது.

செப்டம்பர் 16ம் தேதி முதாசீரின் வீட்டை ராணுவ வீரர்கள் தட்டியிருக்கிறார்கள். முதாசீரின் 60 வயதான தாத்தா தார் கதவை திறந்திருக்கிறார். வீட்டில் உள்ள அனைவரும் வெளியே வாருங்கள் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அனைவரது அடையாள அட்டைகளை வாங்கி சோதித்த பின் முதாசீரையும், அவரது தம்பியையும், என் உறவினரையும் இராணுவ வாகனத்தில் அமரச் சொல்லியிருக்கிறார்கள்.

“எங்களை ராணுவ வாகனத்தில் ஏறச் சொன்னதும் எங்கள் வீட்டு பெண்கள் அவர்களை ஏன் அழைத்து செல்கிறீர்கள் என கேட்டது தான் தாமதம் அவர்களை அடிக்க ஆரம்பித்து விட்டார்கள். எனது தாத்தாவின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வடிந்தோடியது. அந்த நிலையிலும் விடாமல் அவரை முதியவர் என்றும் பாராமல் தாக்கினார்கள். என் குடும்பத்தாரை காப்பாற்ற முற்படும் போது என் உடல் முழுக்க பெல்லட் குண்டுகளால்



தாக்கினார்கள்." என்கிறார் முதாசீர்.

**பெண்களையும் விட்டுவைக்கவில்லை**

முதாசீரின் சகோதரி மெஹ்மூதா அக்தர் கூறுகிறார், முதாசீரை கொடூரமாக அடித்து இழுத்து சென்றார்கள். மீண்டும் மீண்டும் இரக்கமில்லாமல் அவர்களை அடித்தார்கள். ஏன் அவர்களை விட்டு விடுங்கள் என எவ்வளவோ கெஞ்சினோம். ஆனால் காதில் வாங்கவே இல்லை. பிறகு என்னையும் என்னையும் தொந்தரவு செய்தார்கள்.

முதாசீரின் உடலிலிருந்து இன்னும் பெல்லட் குண்டுகள் வெளியே எடுக்கப்படவில்லை. குண்டுகள் மிக ஆழமாக உள்ளிறங்கியிருப்பதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். என் தந்தைக்கு தலையில் ஏழு தையல்கள் போடப்பட்டுள்ளது. அவரால் ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை.

**எங்களை அடிக்க வேண்டாம் கொன்று விடுங்கள் - காஷ்மீரிகளின் குரல்**

ஆகஸ்ட் 5ம் தேதி காஷ்மீரின் சிறப்புரிமையான தனி அதிகாரத்தை ரத்து செய்ததிலிருந்து காஷ்மீர் முழுக்க ராணுவ கட்டுப்பாட்டினுள் இருக்கிறது. காஷ்மீரின் அரசியல் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், வியாபாரிகள் என 3000க்கும் அதிகமான மக்கள் சிறைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். காஷ்மீருக்கு வெளியேவும் காஷ்மீரை சார்ந்தவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

பிபிசி ஊடகத்திடம், இராணுவம் காஷ்மீரில் பெரும் அடக்குமுறைகளை நிகழ்த்தி வருவதாக அம்மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். குச்சிகள், கேபிள்கள் மற்றும் எலக்ரிக் ஷாக் கொடுப்பது என ராணுவ துன்புறுத்தலுக்கு தாங்கள் உள்ளாகி யிருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். அதனால் தங்களுக்கு உண்டான காயங்களையும் ஊடகத்திடம் காட்டியிருக்கிறார்கள்.

**காஷ்மீரின் நிலவரத்தை பத்திரிக்கையாளர் விவரிக்கிறார்**

காஷ்மீரில் உள்ள பல கிராமங்களுக்கு நான்



சென்றேன். இராணுவம் முழுக்க முழுக்க எல்லா இடத்திலும் குவிக்கப்பட்டிருக்கிறது. அப்பகுதிகளில் மக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி எங்களுக்கு கிடைத்தது.

மருத்துவர்களும், அதிகாரிகளும் எங்களிடம் பேசுவதற்கு முன்வரவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் கூட தங்கள் அடையாளத்தை வெளியில் சொல்ல பயப்படுகிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்கள் சொல்கிறார்கள், திடீரென எங்கள் கிராமத்திற்குள் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் நுழைந்தனர். எங்களோடு சேர்த்து சில இளைஞர்களை வெளியே அழைத்து வந்து அடிக்க தொடங்கினார்கள். எதற்காக அடிக்கிறீர்கள் என எல்லோரும் கேட்டோம்? ஆனால் அதையெல்லாம் காதில் வாங்கவே இல்லை.

எங்களை அழைத்து சென்று குச்சிகள், கேபிள்களால் எங்களை அடித்தார்கள். நாங்கள் முடியாமல் மயங்கி விழும் போதும் எலக்ட்ரிக் ஷாக் கொடுத்து மீண்டும் அடித்தார்கள். வலி தாங்க முடியாமல் நாங்கள் சத்தம் போட்டால் எங்கள் வாயில் மண்ணை வைத்து அடைத்தார்கள்.

நாங்கள் அப்பாவிகள், எதற்காக எங்களை அடிக்கிறீர்கள் என எவ்வளவோ முறை கேட்டோம். அவர்கள் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. ஒருகட்டத்தில் எங்களை தயவு செய்து சுட்டுக் கொன்று விடுங்கள் இப்படி அடிக்காதீர்கள் எங்களால் தாங்க முடியவில்லை என்று கூறினோம்.

கிராமத்தில் உள்ள மற்றொரு இளைஞன் சொல்லும் போது, என்னை அழைத்து இராணுவ அதிகாரிகள், கல் எறிபவர்களில் இங்கே யார் யார் இருக்கிறார்கள் என கேட்டார்கள். எனக்கு யாரையும் தெரியாது என்று சொன்னேன். என் கண்ணாடி, உடை எல்லாவற்றையும் கழட்ட சொன்னார்கள். கழட்டியதும் ராடுகளாலும், குச்சிகளாலும் இரக்கமில்லாமல் அடித்தார்கள். மயக்கமுற்று விழுகும் போதும் எலக்ட்ரிக் ஷாக் வைத்து கொடுமையாக அடித்தார்கள். இனியொரு முறை இதுபோல் எனக்கு நடந்தால் நான்



துப்பாக்கியை எடுப்பதை தவிர வேறு வழியில்லை. ஒவ்வொரு நாளும் எங்களால் இதை பொறுத்து கொள்ள முடியாது என்றார்.

இனி போராட்டம் நடத்த எல்லோரும் பயப்பட வேண்டும் என்ற காரணத்திற்காகவே அச்சுறுத்த இந்த கொடூரத்தை நிகழ்த்துவதாக கிராமத்தவர்கள் கூறுகிறார்கள்.

**சித்வரவதை முகாம்களா?**

காஷ்மீரில் இராணுவத்தினர் இப்படியான சித்ரவதைகளில் ஈடுபடுவதாக செய்திகள் வெளியாயிருக்கிறது. ஆனால் பிரிவு 370 நீக்கத்திற்கு பிறகு இச்சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக தெரிகிறது. தற்போது நிகழ்த்தப்படும் அடக்கு முறைகள் இளைஞர்களுக்கு என்ன பாதையை காட்டுகிறது?.. இளைஞர்களை வாழ்வியல் முன்னேற்றத்தின் பக்கம் நகர்த்தாமல் அவர்களை மறைமுகமாக வன்முறையின் பக்கம் திருப்புவதற்கு தான் இத்தகைய அடக்குமுறைகள் உதவும்.

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்ன எவ்வளவு உரிமை கொண்டாடுகிறோமோ அதே அளவு காஷ்மீர் மக்களும் நம் நாட்டு மக்கள் என்று நடத்தப்பட வேண்டும்.

நான் இந்த நாட்டுடன் ஒன்றிபோவதற்கு காரணம், இந்நாட்டில் எனக்கிருக்கும் உரிமையும் நான் அனுபவிக்கும் சுதந்திரமும், கருத்துரிமையும் தான். அது காஷ்மீரிகளுக்கு கிடைக்கும் போது அவர்களும் நம்முடன் இணைந்து நமது எதிரி களுடன் போரிடுவார்கள். ஆனால், அடக்கு முறையில் அதை என்றும் சாதிக்க முடியாது.

**கைது செய்யப்படும் காஷ்மீர் சிறுவர்கள்: எங்கே வைத்திருக்கிறார்கள் என கதறும் காஷ்மீர் பெற்றோர்கள்**

குல்சார் அகமது வானி தனது 11 வயது மகனை 22 நாட்களாக காணாமல் தொடர்ந்து காஷ்மீரின் சோபியன் நகரின் காவல்நிலைய வாசலில் காத்து கிடக்கிறார். குல்சார் மட்டுமலல் இதை போல நூற்றுக்கணக்கான பெற்றோர்கள் அதே காவல் நிலைய வளாகத்தில் ஏதாவது தகவல் கிடைத்து விடுமா என காத்துக்கிடக்கின்றனர்.

**11 வயது சிறுவனுக்கு என்ன தெரியும்?**

எங்கள் வீட்டில் இருந்த என் மகனை ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தின் ஓர் இரவில் இராணுவ வீரர்கள் வந்து இழுத்து சென்றார்கள். எதற்காக கைது செய்தார்கள் என்பது கூட எனக்கு தெரியாது. எந்த தகவலும் சொல்லவில்லை.

தினமும் காவல்நிலையத்திற்கு வந்து என் மகன் எங்கே என விசாரித்து செல்கிறேன். ஆனால், 22 நாட்கள் ஆகி விட்டது. எந்த தகவலும் இல்லை.



இப்போது தான் காவல் ஆய்வாளர் என் மகனை என்னிடம் பேச வைப்பதாக சொல்லியிருக்கிறார் என்று புலம்புகிறார்.

11 வயது சிறுவனை இரவில் வந்து இராணுவ வீரர்கள் அழைத்து செல்வதன் நோக்கம் என்னவாக இருக்க முடியும்? அச்சிறுவனை எதன் அடிப்படையில் தீவிரவாதி என்று சொல்ல முடியும்? இதை விட ஒரு கொடுமையான அடக்குமுறை இருக்க முடியுமா? ஆனால் இதெல்லாம் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக்கும் சூழலில் இயல்பு நிலை திரும்பிவிட்டது மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என எப்படி ஒரு அரசால் சொல்ல தோன்றுகிறது?

**கைது செய்யப்படுபவர்களின் நிலை என்ன?**

கைது செய்யப்படுபவர்களில் பலர் ஜம்மு காஷ்மீருக்கு வெளியில் சிறையில் அடைக்கப் படுகிறார்கள். ஆனால், அவர்கள் எங்கிருக்கிறார்கள் என குடும்பத்தாருக்கு சொல்லப்படுவதில்லை. அரசியலமைப்பு சட்டம் கொடுத்துள்ள் எந்த உரிமைகளையும் காஷ்மீரிகளுக்கு கொடுக்காமல் அவர்கள் இந்தியரகள். அந்த நிலம் இந்தியாவுடையது என சொல்வதில் என்ன அர்த்தம் இருந்துவிடப்போகிறது என தெரியவில்லை.

-தகவல் - The hindu 26.09.19

ஆக்ராவில் அடைக்கப்படும் காஷ்மீரிகள்: 50 நாட்களாகியும் சந்திக்க முடியாமல் தவிக்கும் பெற்றோர்கள்

காஷ்மீரில் கைது செய்யப்பட்டவர்களில் 300க்கும் அதிகமானோர் உத்திரபிரதேசத்தில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக உத்திரபிரதேச காவல்துறை அறிக்கை சமர்பித்திருக்கிறது.

20,000ரூபாய் செலவழித்தும் மகனை காண முடியாமல் தவிக்கும் பெற்றோர்கள்

புல்வாமாவை சேர்ந்த குலாம் ஆக்ராவின் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக பெற்றோருக்கு தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்கள் மகனைப் பார்ப்பதற்காக காஷ்மீரில் இருந்து ஆக்ராவிற்கு புறப்படுகிறார்கள். எல்லா ஏற்பாடுகளையும் செய்து காஷ்மீரில் இருந்து ஆக்ராவின் சிறைக்கு வருவதற்கே அவர்களுக்கு 20,000 ரூபாய்க்கு மேல் செலவாகிறது.

தங்கள் மகனை சந்திக்க வேண்டும் என்று இருக்கும் அடையாள ஆவணங்களை எல்லாம் கொடுத்து அனுமதி கேட்டால் காஷ்மீரின் காவல்நிலையத்திலிருந்து அனுமதி கடிதம் வாங்கி வந்தால் தான் சந்திக்க முடியும் என்று சொல்லி விட்டார்கள் ஆக்ராவின் காவல்துறையினர். என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார்கள் வயதான பெற்றோர்கள்.

இதுவரையிலுமே 20,000 ரூபாய் செலவு. இனி மீண்டும் காஷ்மீர் சென்று கடிதம் பெற்று திரும்ப ஆக்ரா திரும்புவதை பற்றி நினைக்க முடியவில்லை என புலம்புகிறார்கள் குலாமின் பெற்றோர்கள். தகவல் தொடர்பு இருந்தாலாவது உறவினர்களிடம் சொல்லி உதவ சொல்ல முடியும். ஆனால் அதுவும் முழுதாக முடக்கப்பட்டுள்ளது. நாங்கள் எங்கு சென்று எங்கள் பிரச்சனையை சொல்வது என தெரியவில்லை என்கின்றனர்.

**மாணவன் ஹுசைனின் பெற்றோறின் கதறல்**

காஷ்மீரின் மாணவன் ஹுசைனும் ஆக்ராவின் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரது பெற்றோர்களும் சிறைக்கு வெளியே காத்திருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் பார்க்க அனுமதிக்க முடியாது என்று கூறி வருகிறார்கள்.

எங்களிடம் ஆதார் கார்டு உட்பட அடையாள அட்டைகள் இருக்கிறது. ஆனால் அது போதாது என்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் எங்களுக்கு தெரியாது. எங்களுக்கு இங்கே எங்கள் மகன் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மட்டும் தான் சொன்னார்கள். ஆனால் எதையெல்லாம் எடுத்து செல்ல வேண்டும் என சொல்லவில்லை என புலம்புகிறார்கள் பெற்றோர்கள்.

**ஆக்ராவின் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் காஷ்மீரிகள்**

காஷ்மீரிலிருந்து சிறையில் அடைக்கப் பட்டவர்கள் 18 வயதிலிருந்து 40 வயது வரை உள்ளவர்கள் தான் என்கிறது காவல்துறை தரப்பு. அதுமட்டுமல்லாமல் ஆக்ராவின் சிறையில் மொத்தமே 1350 சிறைக்கைதிகளை வைத்திருக்க தான் இடவசதி இருக்கிறது. ஆனால், தற்போது 1933 கைதிகளை வைத்திருக்கிறார்கள். இதெல்லாம் மிகப்பெரும் அடக்குமுறை என்கிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

-தகவல் Indian Express 13.09.19

**- அபூ சித்திக்**



# கஷ்மீரின்

## கடந்த மாத நிலை முழு தகவல்

பிரிவு 370 நீக்கப்பட்டதற்கு பிறகு காஷ்மீரின் இயல்பு நிலை முழுதும் பாதிக்கப்பட்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இரண்டு மாதம் ஆகியும் நிலைமை இன்னும் சீர்படுத்தப்படவில்லை. தொடர்ந்து இணையதளம், செல்போன் இணைப்பு அனைத்தும் முடக்கப்பட்டிருக்கிறது.

பிரிவு 370 நீக்கப்பட்டதற்கு பிறகு காஷ்மீர் முடக்கப்பட்டது. அதன் பிறகு வெளியான காஷ்மீர் தொடர்பான செய்திகள் அனைத்தும் ஆவணப் படுத்தப் வேண்டியவை. அந்த வகையில் அம்மக்களின் முதல் ஒரு மாத நிலை,

**நாள் 1 : ஆகஸ்ட் 5**

பிரிவு 370 நீக்கம் மக்களவையில் நீக்கப்பட்டது. இதற்கு 351 பேர் ஆதரவளித்தும், 72 பேர் எதிராகவும் வாக்களித்தனர். சட்டம் நடைமுறைக்கு வந்தது.

இது அரசியலமைப்பு மீதான சதி என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. காஷ்மீரின் முன்னாள் முதல்வர்கள் மெஹ்பூபா முப்தி மற்றும் ஃபரூக் அப்துல்லாஹ் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டனர். இந்நடவடிக்கையை “நம்பிக்கை துரோகம்” என இருவரும் விமர்சனம் செய்தனர்.

17 வயதான அகில் தார், ராணுவத்தினர் முகத்திலேயே பெல்லட் குண்டுகளினால் சுடப் பட்டதால் பாதிக்கப்பட்டு ஸ்ரீநகர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டான். அவன் உடம்பிலிருந்து மொத்தம் 90 பெல்லட் குண்டுகள் எடுக்கப்பட்டது.

**நாள் 2 : ஆகஸ்ட் 6**

சிறுவன் உயிரிழப்பு: காஷ்மீரில் போடப்பட்டிருக்கும் ஊரடங்கு உத்தரவு பற்றி தெரியாமல் விளையாட வெளியில் வந்த சிறுவன் இராணுவத்துக்கு பயந்து ஜீலம் நதியில் குதித்ததால் உயிரிழந்தான்.

காஷ்மீர் சர்வதேச செய்தி தலைப்பாக மாறியது.

காஷ்மீர் மக்களால் பெரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் பயன்படுத்தப்பட்ட பெல்லட் குண்டுகளால் இளைஞர்கள் பலர் காயமடைந்தார்கள்.

**நாள் 3 : ஆகஸ்ட் 7**

SMHS மருத்துவமனையில் மட்டும் 21 பேர் பெல்லட் குண்டுகளால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனியில் சேர்க்கப்படனர்.

பாகிஸ்தான் தனது இந்தியாவுடனான அனைத்து வித உறவையும் முறித்து கொண்டது.

உத்திரபிரதேசத்தின் பாஜக எம்.எல்.ஏ ஒருவர், பாஜக உறுப்பினர்கள் அழகான காஷ்மீர்

பெண்களை திருமணம் செய்து கொள்ள தயாராக இருக்கிறார்கள் என்றார்.

**நாள்4 : ஆகஸ்ட் 8**

காஷ்மீரின் அரசியல் தலைவர்கள், வழக்கறிஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என 500க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்படனர்.

ஐ.நா அறிக்கை: இந்தியாவின் காஷ்மீரில் மனித உரிமை மீறல் நடக்கிறது. இந்திய அரசு இதனை கைவிட வேண்டும் என ஐ.நா கேட்டுக்கொண்டது.

மோடி உரை: மக்கள் முன்னால் உரையாற்றிய மோடி, காஷ்மீர் மக்கள் இந்த நடவடிக்கையால் மகிழ்ச்சியாக இருக்கின்றனர் என்றார்.

**நாள் 5 : ஆக்ஸ்ட் 9**

சர்வதேச ஊடகங்கள் (பிபிசி, அல்ஜெசீரா) காஷ்மீரில் 10,000க்கும் அதிகமான மக்கள் திரண்டு போராட்டம் நடத்தினர் என செய்தி வெளியிட்டார்கள்.

இதில் போராட்டக்காரர்களை கலைக்க ராணுவத்தாரல் பயன்படுத்தப்பட்ட புகை குண்டில் வீட்டில் இருந்த ஒரு பெண்மணி பலியானார் என்ற செய்தியை நியூயார்க் டைம்ஸ் என்ற ஊடகம் வெளியிட்டது.

ஆப்கானிஸ்தானின் தாலிபான் அமைப்பு போரின் விளைவை நாங்கள் அறிந்திருக்கிறோம். அது மிக மோசமானது. இந்தியாவும் பாகிஸ்தானும் அமைதியை நோக்கி திரும்ப வேண்டும் என அறிக்கை வெளியிட்டது.

ஐ.நாவின் செயலாளர் காஷ்மீரின் மீது போடப்பட்டுள்ள கட்டுப்பாட்டை தளர்த்த கேட்டுக் கொண்டார்.

**நாள் 6: ஆகஸ்ட் 10**

காஷ்மீரில் இயல்பு நிலை திரும்பியது என தவறான அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. ஆனால். காஷ்மீரின் கள நிலவரம் மிக மோசமானதாக இருந்தது

இந்தியாவின் பத்திரிக்கை ஆசிரியர் குழுமம் காஷ்மீரில் பத்திரிக்கை சுதந்திரம் பாதிக்கப் பட்டிருக்கிறது என்று கண்டன அறிக்கை வெளியிட்டார்கள்.

காஷ்மீர் பண்டிட்கள், தோராக்கள், சீக்குகள் மத்திய அரசின் பிரிவு 370 நடவடிக்கை என்பது ஒருதலைப்பட்சமானது அதனால் அதை ஏற்கமுடியாது என விமர்சித்து மனு அளித்தார்கள்.

ஹரியானாவின் பாஜக முதல்வர் காஷ்மீரக பெண்களை திருமணம் செய்துகொள்ள இனி ஹரியானிற்கு கொண்டுவருவோம் என பேசினார்.

**நாள் 7: ஆகஸ்ட் 11**

முஸ்லிம்களின் பக்ரீத் பெருநாள் பண்டிக்கைக்கு முதல் நாளிலிருந்து ஏடிஎம் இயந்திரங்களில் பணம் இல்லை. விநியோகிப்பாளர்களிடமும் இருந்த பொருட்கள் தீர்ந்து விட்டன. அடிப்படைத் தேவைக்கான பொருள்களின் தேக்கம் ஏற்பட்டது.

ஆட்டு வியாபாரிகள் அரசின் இந்நடவடிக்கையால் குர்பானி கொடுப்பதற்கான ஆடுகளின் விற்பனை சுத்மாக இல்லாமல் போனதாக தெரிவித்தனர்.

மருந்துகள் தேக்கத்தின் ஆரம்பநிலை தொடங்கியது.

காஷ்மீரின் சௌரா பகுதியில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டம் ரியூட்டர்ஸ் நிறுவனம் பதிவு செய்தது அப்போராட்டத்தில், "நமக்கு என்ன வேண்டும்?.. சுதந்திரம் வேண்டும். எப்போது வேண்டும்? இப்போதே வேண்டும்." என்ற கோசங்கள் எழுப்பப்பட்டன.

**PTI** செய்தி நிறுவனம் பிரிவு 370 நீக்கப்பட்டு காஷ்மீர் முடக்கப்பட்டதனால் ஒருவாரத்தில் மட்டும் 1000 கோடி நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக செய்தி வெளியிட்டது.

லக்னோவில் மக்சாட செய் (Magsaysay) விருது வாங்கிய சந்தீப் பாண்டே மத்திய அரசின் நடவடிக்கையை விமர்சித்து போராட்டம் நடத்த முயன்றதால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

**நாள் 8 : ஆகஸ்ட் 12(காஷ்மீரில் பக்ரீத் பெருநாள்)**

பெருநாள் அதுவுமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் தெருக்கள் முழுவதும் ஆட்கள் இல்லாமல் காலியாக இருந்தது.

ஆகஸ்ட் 11 மற்றும் 12, இந்த இரண்டு தேதிகளில் மட்டும் மத்திய பாதுகாப்பு படையினரின் தொடர்பு எண்ணுக்கு (14411) 870 அழைப்புகள் வந்திருக்கின்றன. அவற்றில் 55% அழைப்புகள் தங்கள் குடும்பத்தை சார்ந்தவர்களை எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று விசாரிக்கும் அழைப்புகள்.

டெல்லியில் உள்ள காஷ்மீரிகள் ஜந்தர் மந்தரில் ஒன்றிணைந்தார்கள். பக்ரீத் பெருநாளாக இருக்கும் நிலையில் கூட காஷ்மீரில் நடத்தப்படும் அடக்கு முறையால் தாங்கள் பெருநாளை கொண்டாட வில்லை என ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

அரசு வாகனமும் இல்லாமல் தனியார் வாகனத்தையும் ராணுவம் அனுமதிக்காததால் 12 நேரமாக காத்திருந்ததால் கருவுற்றிருந்த காஷ்மீரக

பெண்ணின் குழந்தை கலைந்தது.

**நாள் 9 : ஆகஸ்ட் 13**

காஷ்மீர் செயற்பாட்டாளர் தெஹ்சீன் பூனாவாலா, காஷ்மீரின் தகவல் தொடர்பு முடக்கப்பட்டதை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

பத்திரிக்கையாளர் ஜுபைர் சோபி, காஷ்மீரில் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதால் மருத்துவமனைகளில் இருந்து வெளியேற முடியாமல் முடங்கி கிடக்கின்றனர். பணம் கிடைப்பதற்கு வழியின்றி இருப்பதால் மருத்துவமனைகளில் மக்கள் உணவுக்காக பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர் என்கிறார்.

காஷ்மீர் சத்யபால் மாலிக் ராகுல் காந்தியின் விமர்சனத்தின் காரணமாக காஷ்மீருக்கு அழைப்பு விடுத்தார். (ஆனால், ராகுல் காந்தி விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்)

**நாள் 10 : ஆகஸ்ட் 14**

முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி ஷா ஃபைசல் டெல்லி விமான நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டு பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

கவிதா கிருஷ்ணன் மற்றும் ஜான் ட்ரேஷ் அடங்கிய உண்மை கண்டறியும் குழு காஷ்மீருக்கு சென்று வந்து அறிக்கை கொடுத்தது. அதில், காஷ்மீர் மக்கள் பெரும் கோபத்துடனும், வேதனையிலும் இருக்கிறார்கள். இளைஞர்களை எந்த காரணமும் சொல்லாமல் சட்டவிரோதமாக கைது செய்து துன்புறுத்துகிறார்கள்.

காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தின் மனிதர் ஒருவர் சொல்லும் போது, எங்கள் பகுதியின் வீடுகளில் ஒவ்வொரு நாளும் சோதனை செய்யப்படுகின்றன. எங்கள் பகுதியின் இளைஞர்கள் இழுத்து செல்லபட்டுகிறார்கள். இவை இல்லாமல் எங்கள் நாட்கள் கடப்பதில்லை. முழு இருளில் தான் நாங்கள் வாழ்கிறோம் என்றார்.

**நாள் 11 : ஆகஸ்ட் 15**

இந்தியாவின் சுதந்திர தினத்தை பாகிஸ்தான் கருப்பு தினமாக கொண்டாடியது.

சீனா, ஐக்கிய நாடுகள் சபையில் காஷ்மீர் பிரச்சனையில் முறைசாரா விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என கோரியது.

கல்வியாளர்களின் குழு ஒன்று ஒன்றிணைந்து பிரிவு 370 நீக்கத்தை கடுமையாக எதிர்த்து அறிக்கை வெளியிட்டது.

முன்னாள் மெஹ்பூபா முஃப்தியின் மகள் இல்திஜா முஃப்தி தடுப்புக்காவலில் இருந்த போது உள்துறை அமைச்சரான அமித் ஷாவிற்கு கடிதம் எழுதினார், இந்தியா முழுக்க சுதந்திர தினம் கொண்டாடு கிறார்கள் ஆனால் நாங்கள் (காஷ்மீரிகள்) மிருகங்களை போல் அடைக்கப்பட்டிருக்கிறோம் என குறிப்பிட்டார்.

**நாள் 12 : ஆகஸ்ட் 16**

பொதுநலத்துறையில் பணிபுரியும் 130 நபர்கள் இணைந்து மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில், காஷ்மீரின் ஆரோக்கிய நிலையை கருத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் அது அம்மக்களை ஆபத்தில் ஆழ்த்தும் அபாயம் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

காஷ்மீர் முழுவதும் வேதியலாளர்களின் சோதனை கூடமும் முழுதாக அடைத்திருக்கிறது என்று பத்திரிக்கையாளர்கள் விவரித்தனர்.

காஷ்மீரில் துப்புறவு நிலையும் மிக மோசமான நிலையில் உள்ளது. எங்கும் குப்பைகள், இறந்து போன நாய் சடலங்கள் எல்லாம் அப்புறப்படுத்தப் படாமல் இருக்கின்றன. இது தொற்று நோய்க்கான அபாயத்தை ஏற்படுத்துகிறது.

காஷ்மீரின் சௌரா பகுதியில் பெரிய போராட்டம் நடத்தப்பட்டது. இதில் ஆசாத் காஷ்மீரின் கொடி பயன்படுத்தப்பட்டது. காஷ்மீருக்கு சுதந்திரம் வேண்டும் என்ற கோசம் போடப்பட்டது.

உச்சநீதிமன்றம், பிரிவு 370 நீக்கப்பட்டதை எதிர்த்து தொடங்கப்பட வழக்கு குறைபாடுள்ள மனுவாக இருக்கிறது என வேதனை தெரிவித்தது.

**நாள் 13 : ஆகஸ்ட் 17**

கிரேட்டர் காஷ்மீர் பத்திரிக்கையாளர் இர்ஃபான் அமீன் மாலிக் ராணுவத்தாரால் கைது செய்யப் பட்டார். ஆனால் அவர் எங்கே வைக்கப் படிருக்கிறார் என்று இன்னும் தெரிவிக்கப் படவில்லை.

ராணுவத்தினர் சோதனைகளில் ஈடுபடுவதுடன் அந்த வீடுகளில் உள்ள பொருட்களையும், ஜன்னல்களையும் உடைப்பதாக ராய்ட்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டது.

அரசு தரப்பில், காஷ்மீரில் இயல்பு நிலை திரும்புவதாக அறிவித்தது.

**நாள் 14 : ஆகஸ்ட் 18**

4000 பேர் பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காஷ்மீரக சிறைகளில் இடம்

இல்லாததால் காஷ்மீருக்கு வெளியே அடைக்கப்பட்டுள்ளனர்.

செஹ்லா ரஷீத், காஷ்மீரின் சமூக செயற் பாட்டாளர். தனது ட்விட்டர் பக்கத்தில்," இந்திய ராணுவம், இரவுகளில் வீடுகளில் புகுந்து கைது செய்கிறார்கள், வீட்டை உடைக்கிறார்கள், வீட்டில் உள்ள உணவுப்பொருளில் குப்பையை கலந்து செல்கிறார்கள்" என எழுதியிருந்தார். இதனை அதிகாரிகள் மறுத்திருக்கிறார்கள்.

காஷ்மீரின் சோபோரின் பழ வியாபார மண்டியில், வியாபாரிகள் எல்லாம் தங்கள் பொருட்களை எடுத்துக் கொண்டு இடத்தை காலி செய்ய வேண்டும் என ராணுவத்தினர் உத்தரவு பிறப்பித்தார்கள்.

**நாள் 15 : ஆகஸ்ட் 19**

ஜெர்மனியை எப்படி நாஜிக்கள் பிடித்து வைத்திருந்தார்களோ அதே போல் இந்தியா காஷ்மீரை பிடித்து வைத்திருக்கிறது என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார். நாஜிக்களுக்கும் ஆர்.எஸ்.எஸ் சித்தாந்ததிற்குமான நெருங்கிய தொடர்பையும் குறிப்பிட்டிருந்தார்.

**நாள் 16 :ஆகஸ்ட் 20**

அமெரிக்க அதிபர் இந்தியா மற்றும் பாகிஸ்தான் தலைவர்களை அழைத்து காஷீமீர் விசயத்தை பற்றி பேசினார்.

காஷ்மீரில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டது. இருப்பினும் மாணவர்கள் யாரும் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை.

வீட்டிற்கு வெளியே இருக்கும் ராணுவ முகாம்களையும், தடுப்புகளையும் பார்க்கும் போது எல்லையில் இருப்பது போன்ற பயத்தை தருகிறது என ராய்ட்டர்ஸ் பத்திரிக்கையாளரிடம் ஒரு இளைஞர் கூறினார்.

**நாள் 17 : ஆகஸ்ட் 21**

மீண்டும் அமெரிக்க அதிபர் காஷ்மீர் பிரச்சனைக்கு தீர்வு காண முயலுங்கள் என்று தெரிவித்தார்.

இந்தியா டுடே பத்திரிக்கை, பாஜக நாடு முழுவதும் 2000க்கும் அதிகமான இடங்களில் பிரிவு 370 பெரிய வெற்றி என்று பிரச்சாரப்படுத்துவதற்கு முடிவெடுத்துள்ளதாக செய்தி வெளியிட்டது.

**நாள் 18 : ஆகஸ்ட் 22**

ஆறு நபர்கள் இணைந்து மத்திய அரசின் பிரிவு 370 நீக்கத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

மத்திய அரசு, காஷ்மீரில் போடப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை நீக்க தற்போதைக்கு எந்த திட்டமும் இல்லை என்று சொல்லியிருக்கிறது.

காஷ்மீர் மருந்தகங்களில் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக ஊடகங்களில் செய்தி வெளியானது.

ஈரான் அதிபர் கொமைனி காஷ்மீர் மக்களின் நிலை எனக்கு மிக வருத்தத்தை தருகிறது. இந்திய அரசு அவர்களின் மீதான அடக்குமுறையை நிறுத்த வேண்டும் என்றும் அறிக்கை வெளியிட்டார்.

மனித உரிமை ஆர்வலர்கள், இது காஷ்மீர் மக்கள் மீது சுமத்தப்பட்ட கூட்டு தண்டனை போல தெரிகிறது. அதனை உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டார்கள்.

**நாள் 19 : ஆகஸ்ட்**

நியூயார்க் டைம்ஸ் ஊடகம், காஷ்மீரில் நடந்த பெரிய போராட்டம் ஒன்றை வெளியிட்டது. அதில் கோபத்தில் இருந்த இளைஞர்கள், இனி ஒரே தீர்வு தான் அது துப்பாக்கியினால் கிடைக்கும் தீர்வு மட்டும் தான் என்றார்கள்.

பத்திரிக்கை சங்கங்கள், காஷ்மீர் மீதான அடக்குமுறைகளை திரும்ப பெற வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள்.

**நாள் 20 : ஆகஸ்ட் 24**

அரசியல் தலைவர்கள் காஷ்மீருக்கு வரவேண்டாம் என்று தடுக்கப்பட்டனர். ராகுல் காந்தி விமான நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பபட்டார்.

**நாள் 21 : ஆகஸ்ட் 25**

ஐ.ஏ.எஸ் அதிகாரி கண்ணன் கோபிநாத் காஷ்மீரில் நடக்கும் அடக்குமுறைகள் காரணமாக தன் பதவியை ராஜினாம செய்தார்.

ஜம்மு காஷ்மீரி தலைமைச் செயலகத்திலிருந்து காஷ்மீரின் கொடி நீக்கப்பட்டு தேசிய கொடி பறக்கவிடப்பட்டது.

இதுவரை காஷ்மீரில் எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை காஷ்மீர் கவர்னர் மாலிக் பேட்டியளித்தார்..

(இதன் தொடர்ச்சி அடுத்த மாதம் இதழில் வெளிவரும்.)

**- அபூ சித்திக்**

# நலிவடையும் நமது பொருளாதாரம் சீர் பெற!

தலையங்கம்

இந்தியாவின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கின்றது. பணமதிப்பு நீக்கம் செய்த நாளில் இருந்தே இந்தியப்பொருளாதாரம் தலைகுப்புற விழுந்து வருகிறது. பணமதிப்பு நீக்கத்தை தொடர்ந்து ஜி.எஸ்.டி என்ற பொது வரிவிதிப்பு இந்தியாவின் பொருளாதாரத்தை எழுந்திட இயலாத நிலைக்கு கொண்டு சென்றுவிட்டது. மின்னணு வாக்கு எந்திரத்தை மாற்றியது போல் பொருளாதாரத்தை மாற்ற இயலவில்லை. திண்டாடுகின்றது மத்திய அரசு. கோடிக்கணக்கான மக்கள் வேலைகளை இழந்து விட்டார்கள். பீகார் போன்ற மாநிலங்களில் போதிய சத்துள்ள உணவு கிடைக்காததால், குழந்தைகள் ஆயிரக்கணக்கில் மடிந்து கொண்டிருக்கின்றனர். விவசாயிகள் நாளுக்கு மூன்று பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

மோடியின் பண மதிப்பு நீக்க நடவடிக்கையின் போது பலநூறு பேர் வங்கிகளின் வாசல்களில் உயிரை இழந்தார்கள். ஜிஎஸ்டி என்ற பொது வரி விதிப்பால் செய்துகொண்டிருந்த தொழிலை கோட்டை விட்டவர்கள் எண்ணிக்கை சொல்லி மாளாது. இதனால் தற்கொலை செய்து கொண்டவர்கள் ஏராளம்.

**GDP** என்ற மொத்த உற்பத்தி 3 விழுக்காடுகளுக்கு கீழே போய்விட்டது. மக்களின் வாங்கும் திறன் பெருமளவில் விழுந்துவிட்டது. பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் போது, இந்த நடவடிக்கை எதிர்காலத்தில் பெரிய பயன்களை தரும் என்றார்கள். அப்போது நாம் (வைகறை வெளிச்சம்) "எதிர்காலத்தில் மக்கள் இறந்து போவார்கள் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால்" என்றோம். இது உலகின் மிகப்பெரிய பொருளாதார மேதை ஜான் மேனாட் கீன்ஸ் என்பவர் சொன்னதாகும். அதுவே இன்று நடந்து கொண்டிருக்கின்றது. பணமதிப்பு நீக்கம், பொது வரிவிதிப்பு இவற்றில் வந்த இழப்புகளை எல்லாம் மறந்துவிட்டு, உலக நாடுகளில் கும்மாளம் போடுகின்றார் மோடி.

### மத்திய வங்கியின் அறிக்கை

இன்றைக்கு நம் இந்தியா எதிர்நோக்கும் மிகப்பெரிய பொருளாதார பிரச்சனை மக்களிடம் பொருள்களை வாங்கிட பணம் இல்லை. அதற்குக் காரணம் சிறு சிறு தொழில் நிறுவனங்கள், நடுத்தர தொழில் நிறுவனங்கள் இவற்றின் வருவாய் வெகுவாக குறைந்து போனதுதான். **(Small and Medium Scale Enterprise SMES)** இதற்கு காரணம் பணமதிப்பு நீக்க நடவடிக்கைதான் என்கிறது மத்திய வங்கியின் அதாவது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் அறிக்கை.(ஆதாரம்: **DHNS Sep 17, 2019)**

இதனை 14-வது நிதி ஆணையத்தின் தலைவர் கோவிந்த ராவ் அவர்களும் உறுதி செய்திருக்கின்றார்கள். ஆக இப்போது பிரச்சனை மக்களிடம் பொருள்களை வாங்கிட பணம் இல்லை என்பதுதான். வாங்குவோர் இல்லாததால் உற்பத்திகள் முடக்கப்படுகின்றன. ஆலைகள் மூடப்படுகின்றன. வேலையில்லா திண்டாட்டம் பெருக்கெடுத்து ஓடுகின்றது.

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பொருளாதார சரிவை சரி செய்வதற்கு பதிலாக நேரெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அவர் மேற்கொண்ட நடவடிக்கை, ரூபாய் 14,000 கோடி வரியை விலக்கியிருக்கிறார். இது பெரும் பண முதலைகள் அரசுக்கு தர வேண்டிய பணத்தை இரத்து செய்யும். ஆனால் அது நிச்சயமாக வாங்கும் திறனை அதிகரிக்க செய்யாது. அதனால் உற்பத்திகள் பெருகாது. இது முட்டாள்தனமான ஒரு முடிவு என்பதை "அவாள் ஆத்து" சுப்பிரமணிய சாமியே சொல்கிறார்.

நிர்மலா சீதாராமனுக்கு தான் பொருளாதாரம் தெரியாது என்று இல்லை. அதற்கு முன்னால் 5 ஆண்டுகள் நிதி அமைச்சராக இருந்த அருண்ஜெட்லிக்கும் தெரியாது. அவரது துணை நிதி அமைச்சருக்கும் பொருளாதாரம் தெரியாது.இவையெல்லாம் இந்திய குடிமக்களையும், இந்தியாவையும் சீரழித்து சின்னாபின்னமாகி வருகின்றன.

இப்படி இந்திய பொருளாதாரம் சின்னாபின்னமாகி கொண்டிருக்கும்போது நமது அண்டை நாடான வங்காளதேசம் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வருகின்றது. வங்காளதேசத்தில் GDP என்ற மொத்த பொருளாதார வளர்ச்சி 8 விழுக்காடுகளைத் தாண்டி மேலே சென்று கொண்டிருக்கிறது. இந்த உண்மைகளையெல்லாம் டாக்டர் அப்துல் அவ்வால் சர்கார் என்பவர் குறிப்பிட்டார். இவர் இன்டர்நேஷனல் மானிட்டரி ஃபண்ட் **(IMF)** – உலக கடன் வழங்கும் வங்கி பற்றி புதுடில்லியில் ஆற்றிய உரையில் இந்த தகவலை தெரிவித்தார். (இவர் வங்காள தேசத்தின் மத்திய வங்கியின் தலைவர்) வங்காளதேசத்தில் இந்த வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு அங்கு செயல்படும் இஸ்லாமிய வங்கிகளே காரணம் எனவும் கூறினார்.

இஸ்லாமிய வங்கிகள் என்ற உடன், அது முஸ்லிம்களுக்கு தான் என்ற எண்ணம் வந்து விட வேண்டாம். வங்காளதேசத்தில் இஸ்லாமிய வங்கியில் முதல் கணக்கை திறந்தவர் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர் தான். இஸ்லாமிய வங்கிகளில் இருந்து வட்டியில்லா கடன் பெறுபவர்கள் பெரும்பகுதியினர் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களே! இஸ்லாமிய வங்கிகளில் தான் மக்கள் அனைத்து தரப்பாரும் தங்கள் பணத்தை வைப்புத் தொகையாக வைத்திருக்கின்றார்கள். இஸ்லாமிய வங்கிகள் அல்லாமல் இன்னும் 60 வங்கிகள் பங்களாதேஷில் இருக்கின்றன. ஆனால் மக்களின் மொத்த வைப்புத் தொகையில் 24 விழுக்காடு இஸ்லாமிய வங்கிகளில் தான் இருக்கின்றன. காரணம் இஸ்லாமிய வங்கிகளை தான் மக்கள் அதிகமாக நம்புகின்றார்கள்.

அதேபோல் வெளிநாடுகளில் இருந்து வங்காளதேசத்திற்கு வரும் பணங்களில் 43% பணம் இஸ்லாமிய வங்கிகள் வழியாகத்தான் வருகின்றது. இதற்கு என்ன காரணமென்றால் இஸ்லாமிய வங்கிகள் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் எந்த பாதிப்புக்கும் ஆளாவதில்லை. 2008 ஆம் ஆண்டு உலகில் பொருளாதாரம் ஒரு பெரிய வீழ்ச்சிக்கும், அதிர்ச்சிக்கும் ஆளானது. அமெரிக்காவில் 14 வங்கிகள் திவாலாகி மூடப்பட்டன. உலகின் இதர பகுதிகளிலும் பல வங்கிகள் விழுந்தன. ஆனால் உலகெங்கிலும் இயங்கி வந்த இஸ்லாமிய வங்கிகள் எந்த சலனமுமின்றி இயங்கின. இதனை இஸ்லாமிய வங்கிகளின் அதிர்வுகளைத் தாங்கும் சக்தி என்கின்றார்கள். **(Shock Absorption Capacity of Islamic Banks)** வங்காள தேசத்தின் மொத்த முதலீட்டில் 24 சதவிகிதம் இஸ்லாமிய வங்கிகளின் வழியாக வருபவைதான். அதனால் பொருளாதாரம் வளருகின்றது.

### விவசாயக் கடன்களும் இஸ்லாமிய வங்கிகளும்

இந்தியாவும் வங்காள தேசமும் விவசாயத்தை மையமாகக் கொண்ட நாடுகள்தான். ஆனால் இந்தியாவில் விவசாயிகள் அதிகமாக தற்கொலை செய்து கொள்கின்றார்கள். வங்காளதேசத்தில் ஒரு விவசாயி கூட தற்கொலை செய்து கொள்வதில்லை.காரணம் இஸ்லாமிய வங்கிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தான்.

வங்காளதேசத்தில் விவசாயத்திற்கான ஒரு தனிக் கொள்கையை இஸ்லாமிய வங்கிகள் மேற்கொண்டன. அதனை **Bai Al Salam** – பை அல் சலாம் என்று அழைக்கின்றார்கள். இது ஓர் இஸ்லாமிய ஒப்பந்தம். இதன் கீழ் விவசாய பொருட்களை ஒரு நியாயமான விலையில் இஸ்லாமிய வங்கிகள் வாங்கிட விவசாயிகளோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கின்றது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு தேவையான பணத்தை முன்கூட்டியே இஸ்லாமிய வங்கிகள் கொடுத்துவிடுகின்றன. (இதற்கு வட்டி கிடையாது.)

இதனால் விலை வீழ்ச்சிகளிலிருந்தும், அதனால் வரும் நஷ்டங்களிலிருந்தும் விவசாயிகள் பாதுகாக்கப்படுகிறார்கள்.

இப்படி இன்னும் பல்வேறு விதங்களில் விவசாயிகள் இஸ்லாமிய வங்கிகளால் பாதுகாக்கப்படுகின்றனர்! இதனால் “விவசாயிகள் தற்கொலை” என்ற பேச்சுக்கே இடமில்லை.

வங்காளதேசத்தில் இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் 60 வங்கிகளும் இஸ்லாமிய வங்கிகளாக, வட்டியில்லா வங்கிகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. அதன் மேலாளர்களுக்கும், உரிமையாளர்களுக்கும் இஸ்லாமிய வங்கிகள் எப்படி செயல்படுகின்றன என்பது பற்றி பயிற்சிகள் தந்து வருகிறோம் என்றார் அப்துல் அவ்வால் சர்கார்.

நம் நாட்டில் – இந்தியாவில் மொத்த பொருளாதாரம் மட்டுமல்ல, வங்கிகளும் விழும் நிலைக்கு வந்துவிட்டன. இதிலிருந்து வங்கிகளை காப்பாற்றிட நன்றாக இயங்கும் இதர வங்கிகளுடன் அவை இணைக்கப்படுகின்றன – **Bank Mergers.**

ஆனால் அண்டை நாடான வங்காள தேசம் எந்த குளறுபடியும் இன்றி பொருளாதாரத்தில் முன்னேறிக்கொண்டே இருக்கின்றது. வட்டி இல்லாத இஸ்லாமிய வங்கிகளால்.

அந்த இஸ்லாமிய வங்கிகளின் பக்கம் திரும்புவதன் மூலம், வட்டியை ஒழிப்பதன் மூலமே இந்தியாவால் இன்றைய பொருளாதார நெருக்கடிகளில் இருந்து வெளியே வந்து விட இயலும்.

இதற்கு வங்காள தேசமும் அதன் இஸ்லாமிய வங்கிகளும் வழிகாட்டுகின்றன.

.இந்தப் பொருளாதார முறையை பின்பற்றியதால் தான் அவுரங்கசீப் காலத்தில் இந்தியா பொருளாதார வல்லரசாக மாறியது. இந்த உண்மையை நாம் உணர வேண்டிய காலம் இது.







# பாஜகவும் பாலியல் குற்றங்களும்

இந்தியாவின் மிகப்பெரும் பிரச்சனைகளில் முக்கியமானது பாலியல் குற்ற வழக்குகளும், அதன் நடைமுறைகளில் உள்ள தேக்கமும். இதனை இந்தியாவின் அரசியல் கட்சிகள் சரி செய்ய வேண்டுமே தவிர ஆதரவளிக்கும் அதிசயம் எங்காவது நடக்குமா?.. ஆனால் இந்தியாவை ஆளும் பாஜக இச்சாதனையை நிகழ்த்தி வருகிறது.

### பாஜகவின் துறவி சின்மயனந்த் மீதான குற்றச்சாட்டு

ஆகஸ்ட் 24ம் தேதி உத்திரபிரதேசத்தில் சட்டக் கல்லூரி மாணவி ஒருவர் பாஜக முன்னாள் அமைச்சர் சின்மயானந்த் தன்னையும் தன்னுடன் பயிலும் மாணவிகள் சிலரையும் பாலியல் துன்புறுத்துதலுக்கு ஆளாக்குவதாக கூறி சமூக வலைத்தளத்தில் காணொளி ஒன்றை பகிர்ந்தார். பிறகு உயிருக்கு பயந்து மறைந்திருந்த இவரை காவல்துறை கண்டுபிடித்தது.

பிறகு “மோடி ஜி எனக்கு உதவுங்கள். காவலர்கள், மாவட்ட நீதிபதி என எல்லாம் தன் பக்கம் இருப்பதாக என்னை மிரட்டுகிறார். எல்லோரும் அவர் பக்கம் நிற்கிறார்கள். அவரை யாரும் இதுவரை விசாரிக்கவில்லை.” என்று மாணவி வீடியோ ஒன்றை பகிர அது வைரலாகி பரவலாக்கப்பட்ட பிறகே சின்மயானந்து எனும் துறவியை கைது செய்தனர்.

சன்மயனந்த் கைது செய்யப்பட்ட பிறகு மாணவியையும் மிரட்டி பணம் பறித்தல் பிரிவின் கீழ் கைது செய்திருக்கிறார்கள் சிறப்பு புலனாய்வு பிரிவினர். ஆனால், இத்தனைக்கும் மாணவியின் இடைக்கால ஜாமீன் மனு நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு விசாரணைக்கு வரும் நிலையில் அதற்கு முதல் நாள் கைது செய்திருக்கிறார்கள்.

### 2014 தேர்தல் பிரச்சாரத்தின் போதான வாக்குறுதி

2014ல் தேர்தலை சந்தித்த பாஜக நாட்டில் நிலவும் பெண்களுக்கெதிரான பாலியல் குற்றங்களுக்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என பிரச்சாரம் செய்தார்கள். ஆட்சிக்கு வந்த பிறகும் “பேட்டி பச்சாஓ பேட்டி படாஓ” (பெண்களை பாதுகாருங்கள், பெண்களை படிக்க வையுங்கள்) என்ற திட்டமெல்லாம் உருவாக்கினார்கள்.

ஆனால் பாலியல் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் தரும் புகலிடமாக மாறியிருக்கிறது பாஜக. பாலியல் வன்புணர்வுக்கு ஆதரவான கருத்து களை கூட வெளியிட்டிருக்கிறார்கள் பாஜகவில் சிலர்.

### பாலியல் குற்றவாளிகளை பாதுகாக்கும் பாஜக

உபியின் சட்டகல்லூரி மாணவி என்றல்ல. பாஜக ஆட்சி பொறுப்பில் உள்ள பல மாநிலங்களில் இதே நிலை தான். ஜனவரி 2018ல் ஜம்மு & காஷ்மீரில் உள்ல கதுவா பகுதியில் 8 வயது பெண் குழந்தை கோவிலுக்குள் பாலியல் பலாத்காரத்துக்கு

உட்படுத்தப்பட்டு கொன்று வீசப்பட்ட வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக நடந்த போராட்டத்தில் அப்போது பாஜக அமைச்சர்களாக இருந்த இருவர் கலந்து கொண்டனர்.

உத்திரபிரதேசத்தை சேர்ந்த பாஜக தலைவர் குல்திப் சிங் செங்கார் அவரது நண்பர்களுடன் இணைந்து 17 வயது இளம்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தார். இதனை இப்பெண் வெளிக் கொண்டு வந்த பிறகு சாலை விபத்து ஒன்றை நடத்தி கொல்ல முயன்றார்கள். குல்திப் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட உடன் பெண்ணின் தந்தை மீது காவல் துறை வழக்கு பதிவு செய்து காவல்நிலையத்திலேயே கொல்லப்பட்டார்.

**பாஜகவில் பாலியல் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களின் சில வழக்குகள்**

**மார்ச்** 2009

பாஜகவின் தலைவர் அசோக் தனேஜா தன் மகளை 8 வருடம் பாலியல் பலாத்காரம் செய்து கொடுமைப்படுத்தியதற்காக கைது செய்யப்பட்டார். மருத்துவ அறிக்கையும் இதனை உறுதி செய்தது.

**மே** 2010

கர்நாடகாவின் முன்னாள் உணவு விநியொக துறையின் அமைச்சராக இருந்த பாஜக தலைவர் ஹலாலப்பா நண்பணின் மனைவியை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் கைது செய்யப் பட்டார்.

**நவம்பர்** 2012

மத்திய பிரதேசத்தில் பாலாகாட் மாவட்டத்தின் பாஜக அலுவலகத்தில் தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாக 21 வயது பெண் புகார் அளித்தார்.

**மே** 2013

மூத்த பாஜக தலைவர் மது சாவன் தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாக பெண் ஒருவர் புகார் அளித்து, அதன் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டது,.

**ஜுலை** 2013

மத்தியபிரதேசை சேர்ந்த பாஜகவின் முன்னாள் அமைச்சர் 79 வயதான ராகவ் ஜி மீது ஒரு பெண் பாலியல் ரீதியாக துன்புறுத்தலுக்கு ஆளானதாக புகார் அளித்தார்.இதை தொடர்ந்து தன் பதவியை ராஜினாமா செய்தார் ராகவ் ஜீ.

**செப்டம்பர்** 2013

பாஜக தலைவர் பிரமோத் குப்தாவிற்கு பாலியல் பலாத்கார வழக்கில் ஆயுள் தண்டனை கிடைத்தது.

**நவம்பர்** 2013

கர்நாடகாவின் ஸ்ரீனகிரி மாவட்டத்தின் பாஜக தலைவர் ஜீவராஜ் 23 வயது பெண்ணை கடத்தி பாலியல் பலாத்காரம் செய்ததாக பெண் கொடுத்த் பெயரில் வழக்கு பதியப்பட்டது.

பின்னர் சில காலங்களில் குற்றச்சாட்டை கூறிய பெண் மர்மமான முறையில் எரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

**ஆகஸ்ட்** 2014

மத்திய பிரதேச பாஜக தலைவர் ஹமீத் சர்தாருடன் ஐந்து பேர் அஸ்ஸாமில் சிறுமியை கடத்தி பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கியதாக கைது செய்யப்பட்டனர்.

**செப்டம்பர்** 2015

குர்கௌன் மாவட்ட பாஜக தலைவரும் உடன் இருவரும் மது அருந்தி விட்டு தனியார் விடுதியில் இருந்த 30 வயது பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாக டெல்லி காவல்துறை வழக்கு பதிவு செய்தது.

**ஜுலை** 2016

32 வயதான பெண் ஒருவரை பாஜக தலைவர் ஹரக் சிங் ராவத் பாலியல் துன்றுத்துதலுக்கு உள்ளாக்கியதாக உத்தரகாண்ட் காவல்துறை வழக்கு பதிவு செய்தது.

**அக்டோபர்** 2016

பாஜக தலைவர் வெங்கடேஷ் மௌரியா மீது 38 வயதான பெண்மணி ஒருவர் பாலியல் பலாத்கார பிரிவில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப் பட்டது.

**நவம்பர்** 2016

குஜராத்தின் உட்கட்ட பாஜக தலைவர் அசோக் மக்வானா 13 வயது பெண்ணை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

**டிசம்பர்** 2016

மத்திய பிரதேசத்தில் உள்ள பைத்துல் மாவட்டத்தில் பழங்குடி பெண்ணை தன் மீது போடப்பட்ட வழக்கை வாபஸ் வாங்கச் சொல்லி மிரட்டி அப்பகுதியின் பாஜக தலைவரும் அவரது கூட்டாளிகளும் பாலியால் பலாத்காரம் செய்தனர்.

**ஜனவரி** 2017

திருமணமான 44 வயது கொண்ட பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாக பாஜக தலைவர் அனில் போஷாலே மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

**பிப்ரவரி 2017**

*1. 66 வயதான ஜெய்ஷ் பட்டேல் எனும் குஜராத்தை சேர்ந்த பாஜக தலைவர் மீது 22 வயது நர்சிங் படிக்கும் பெண் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்ததாக புகார் அளித்தார்.*

*2. குஜராத்தில் உள்ள கட்ச் மாவட்டத்தில் 24 வயது பெண் ஒருவர் 10 பேர் கொண்ட கும்பலாம பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். அதில் 4 பேர் பாஜகவின் அப்பகுதியின் தலைவர்கள்.*

*3. டெல்லியின் முன்னாள் எம்.எல்.ஏ பாஜகவை சேர்ந்த விஜய் ஜாலியின் மீது ஒரு பெண் மது அருந்தி விட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாக புகார் அளித்தார்.*

**மார்ச் 2017**

*பாஜக தலைவர் போஜ்பால் சிங்கும் அவரது கூட்டாளிகள் இருவரும் இணைந்து தலித் பெண் ஒருவருக்கு அழகி பட்டம் வாங்கி தருவதாக வாக்குறுதி கொடுத்து வரச்சொல்லி பாலியல் பலாத்காரம் செய்ததாக வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது.*

*(மார்ச் 2017 வரைக்குமான தகவல்கள் தான் இதுவரை இருப்பது. இதற்கு மேலும் நிறைய வழக்குகள் பாஜகவினர் மீது இருக்கிறது.)*

**பாதிக்கப்பட்டவர்களையே குற்றவாளியாக்க முனையும் பாஜக**

*உத்திரபிரதேசத்தில் உள்ள பாஜக அமைச்சர் ஒருவர் கடவுள் ராமரினால் கூட பாலியல் பலாத்காரத்தை தடுக்க முடியாது என கூறினார். ஆனால், இதற்கு பாஜக பெண் அமைச்சர்கள் கூட எதிராக கேள்வி எழுப்பவில்லை.*

*சத்தீஸ்கரில் உள்ள பாஜகவின் சட்டமன்ற உறுப்பினர் கிரோன் கெஹர், பாலியல் பலாத் காரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் எச்சரிக்கையாக இருந்திருந்தால் இதுபோல் சம்பவங்கள் நடக்காது என்றார்.*

*பாஜகவின் தாய் கழகமாக அறிவிக்கப்படும் ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத், மேற்கத்திய ஊடுருவலால் தான் பாலியல் குற்றங்கள் நடைபெறுகிறது. இந்திய பெண்கள் நல்ல மனைவிகளாக நடந்து கொண்டால் இக்குற்றங்கள் குறையும் என்றார்.*

**குற்றவாளிகளின் கைகளில் அதிகாரம்**

*இத்தகைய குற்றவாளிகளின் கைகளில் அதிகாரங்கள் தற்போது கிடைத்திருப்பதால் இந்தியா தனது அனைத்து முன்னேற்ற துறைகளிலும் பினதங்கி சீரழிவை சந்தித்து வருகிறது.*

**- அபூ சித்திக்**


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ மலேஷியா டிராவல் சர்வீஸ்

பதிவு எண் : 2015/33/018/10098/ANSP

அரசு அங்கீகாரம் பெற்றது



உரிமை: S.B.S. பஷீர்

•பாஸ்போர்ட் ஆன்லைன்
•விமான டிக்கெட்
•விசா சர்வீஸ்
•ECNR & PCC
•எம்பஸி அட்டெஸ்டட்
•GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:

12, கலைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைப்பேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789



# மோடியின் ஆட்சியில் கையால் மலம் அள்ளுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

2018ம் ஆண்டு மத்திய அரசு மேற்கொண்ட ஆய்வில் இந்தியாவில் 40000க்கும் மேற்பட்ட கையால் மலம் அள்ளும் தொழிலாளிகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மொத்தம் 14 மாநிலங்களில் உள்ள 84 நகரங்களில் நடத்திய ஆய்வில் இது கண்டறியப்பட்டது. இந்த எண்ணிக்கை 2013ஐ காட்டிலும் மும்மடங்கு அதிகரித்து இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. 2013ல் இதே போல் நடத்தப்பட்ட ஆய்வில் 14505 நபர்கள் தான் இந்த தொழிலை செய்வதாக கணக்கிடப் பட்டது. ஆனால் தற்போது மும்மடங்கு அதிகரித்திருக்கிறது. துப்புரவு பணிகளில் ஈடுபடுவதில் 70% பெண்கள் என்கிறது ஆய்வு அறிக்கை.

கையால் மலம் அள்ளும் தொழிலை ஒழிப்பதற்கான தேசிய பிரச்சாரக் குழுவின் உறுப்பினர் ஆசிஃப் ஷெய்க் கூறும் போது, இந்த ஆய்வும் நேர்மையாக நடத்தப்படுவதில்லை. எந்த அரசும் தொழிலாளிகளின் விவரங்களை வெளியிடு வதில்லை. கிடைக்கப்பெற்ற தகவலில் இருந்து தான் தற்போதைய ஆய்வின் முடிவும் வெளியாயிருக்கிறது. இதனை விட எண்ணிக்கை பன்மடங்கு இருப்பதற்கு தான் வாய்ப்பு அதிகம் என கூறுகிறார்.

இந்தியா சுதந்திரம் பெற்று 1993ம் ஆண்டு தான் கையால் மலம் அள்ளும் தொழில் சட்ட ரீதியாக தடை செய்யப்பட்டது. அதை தொடர்ந்து 2013ல் இந்த தொழிலில் ஈடுபடுவதையும் இந்த வேலையை செய்யச் சொல்லி யாரேனும் நியமித்தால் அவருக்கும் தண்டனை வழங்கவும் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்தியாவில் இன்று வரை இந்த சட்டத்தின் கீழ் எவரும் தண்டிக்கப் பட்டதில்லை.

இதுவரை, 2019ம் ஆண்டு ஆரம்பித்து, முதல் ஆறு மாதங்களில் 50பேர் சாக்கடை சுத்தம் செய்யும் போது உயிரிழந்திருக்கிறார்கள். இந்த கணக்கெடுப்பும் வெறும் 8 மாநிலங்களில் எடுக்கப் பட்டது மட்டுமே. ஆனால் 2013ல் ஏற்படுத்தப்பட்ட சட்டம் இப்படி சாக்கடைகளை கையால் சுத்தம் செய்வதற்கு ஆட்களை நியமித்தால் தண்டனை வழங்கச் சொல்கிறது. உயிரிழக்கும் ஒவ்வொருவரும் கூலிகளுக்கு நியமிக்கப்படுவர்கள் தான். ஆனால் ஒருமுறை கூட இச்சட்டம் பயன்படுத்தப் பட்டதில்லை.

தனி மனிதர்கள் மட்டுமல்ல அரசே இதனை தான் செய்கிறது. சமீபத்தில் உத்திரபிரதேசத்தில் நடைபெற்ற கும்பமேளா நிகழ்வில் துப்புரவு பணியாளர்களின் பாதங்களை கழுவி விட்டார் பிரதமர் மோடி. கும்பமேளா திருவிழா முடியும் போது தங்களுக்கு அறிவிக்கப்பட்ட சம்பளமும் தரவில்லை, பாதுகாப்பு உபகரணங்களும் தரவில்லை என போராடினார்கள் துப்புரவு பணியில் ஈடுபட்ட பணியாளர்கள்.

இந்தியாவின் கழிவை ஒரு சமூகத்தின் மேல் தொடர்ந்து போடுகிறோம். அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் கூட நம்மை ஒன்றும் செய்வதில்லை. கடந்த காலத்தின் தவறுகளை நிகழ்காலத்திலாவது சரிப்படுத்த வேண்டும். ஆனால், தொடர்ந்து எதிர்காலத்திற்கும் நகர்த்தும் முனைப்போடு தான் அரசு இயந்திரங்கள் நகர்கிறது. இது தொழில் வர்க்க போராட்டம் மட்டுமல்ல. சாதிய ஒடுக்குமுறை.

**- அபூ சித்திக்**

(தகவல் : wire 24.08.19 and 18.08.19)



தொடர் 17

# இஸ்லாம்

## அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி

நாட்டில் உச்சபட்ச நிறுவனமாக அதுவரை செயல்பட்டுக் கொண்டிருந்த ராணுவத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் வருகை அதிர்ச்சியை தந்தது. அரசின் எந்த அறிவுரையையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தில் ராணுவம் இல்லை. பழைய எதேச்சதிகார அமைப்பின் தன்மைகளையும் அதன் சலுகைகளையும் தங்களால் முடிந்த அளவுக்கு பாதுகாக்கவே இராணுவம் முயற்சி செய்தது. இராணுவத்தின் கொட்டகையிலிருந்து இந்த அச்சுறுத்தல் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது.

நாட்டின் அரசியலில் இராணுவம் தலையிடலாம் என்ற சிறப்பு உரிமையை விட்டுத் தரவும் அது தயாராக இல்லை. அதுவரை அனுபவித்து வந்த பொருளாதார சலுகைகளையும் அத்தோடு அரசின் சட்டங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சட்ட விலக்குகளையும் அப்படியே மாற்றாமல் இருக்க வேண்டும் என்று இராணுவம் விரும்பியது. இஸ்ரேல் உடனான உறவிலும் தேசப் பாதுகாப்பிலும் தங்களுக்கு வீட்டோ அதிகாரம் வேண்டுமென்பதில் ஆர்வமுடன் இருந்தது ராணுவம்.

இராணுவத்திற்கும் காவல்துறைக்கும் இடையே நிலவிவந்த இணக்கம் இல்லாத போக்கு நாட்டில் பிரச்சனையை அதிகரிக்க செய்தது. ஆயுதப்படைகள், இராணுவம், காவல்துறை இவற்றை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் கட்டுப்படுத்தும் என்பதும் ராணுவத்திற்கு பட்ஜெட் ஒதுக்கீடு செய்வதில் வெளிப்படைத்தன்மை வேண்டுமென்ற கோரிக்கையும் அவர்களுக்கு புதுமையாக இருந்தது. இதை ஏற்றுக்கொள்ள ராணுவம் மறுத்தது.

30 மில்லியன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கலைப்பதில் சற்று நிதானத்துடன் நடந்துகொள்ளவேண்டும் என்றுகூட யோசிக்கவில்லை ஆயுதப்படைகளின் சுப்ரீம் கவுன்சில் (SCAF). ஜூலை 2012இல் புதிய அதிபர் அலுவலகத்தில் இணைந்திடுவார் என்ற நிலையில் இருக்கும்பொழுது அதற்கு ஒரு நாள் முன்னதாக அவையை கலைத்து அதிகாரத்தை தன்னிடமே வைத்துக்கொண்டது ஆயுதப்படைகளின் சுப்ரீம் கவுன்சில்.

அதிகாரமில்லாத பலவீனமான, இராணுவத்திற்கு பணிந்து போகின்ற நாடாளுமன்றத்தையே இராணுவம் விரும்பியது.

போக்குவரத்துக்கு இடையூறு செய்தல், இராணுவத்தை அவமதித்தல் போன்ற சிறிய குற்றங்களுக்கு கூட பொதுமக்களை கைது செய்யும் அதிகாரத்தை வைத்திருந்தனர் இராணுவ அதிகாரிகளும் அதன் உளவுப் பிரிவு அதிகாரிகளும். நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் வீழ்ந்து கிடந்தபோது கூட, இராணுவத்திற்கு சிறப்பு சலுகைகளை அளிக்கும் கொள்கைகளில் மாற்றங்களை கொண்டுவந்து, ராணுவத்திடம் இருக்கும் பொதுச்சொத்துக்களை மீட்க கூட அரசாங்கத்தால் இயலவில்லை. சுங்கவரி, அயல் நாட்டு நாணய பரிமாற்ற விகிதம், வரிவிலக்கு, நிலவுடைமை, பறிமுதல் செய்யும் அதிகாரம் ஆகியவற்றில் தங்களுக்கு இருந்த சலுகைகளை அனுபவித்து வந்தது ராணுவம்.

சில ஜனநாயக முடிவுகளை ஆயுதப்படைகளின் சுப்ரீம் கவுன்சில் எடுத்தது என்பதில் சந்தேகமில்லை. புரட்சியினால் உருவான அழுத்தமே அதற்கு காரணம். அவர்கள் அந்த முடிவுகளை தொடர்ந்து கடைப்பிடிக்கவும் இல்லை.

**முர்சியின் வீழ்ச்சி:**

புரட்சிக்குப் பின் முபாரக்கின் ஆட்சி எப்படி வீழ்த்தப்பட்டதோ அப்படியொரு நிலைமை முர்சிக்கும் ஏற்பட்டது. இஸ்லாமிய அரசாங்கத்திற்கு எதிராக 17 மில்லியன் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். இராணுவத்தின் தலையீட்டிற்கு பின் இது முடிவுக்கு வந்தது. புரட்சியின் மூலமாக இஸ்லாமிய அரசாங்கத்தை வீழ்த்துவது வரலாற்றில் இதுவே முதல் முறை. நகர்ப்புறம், கிராமப்புறம் என எல்லாத் தரப்பு மக்களும் இப்புரட்சியில் பங்கெடுத்தனர்.

முர்சியை பதவிநீக்கம் செய்கின்றேன், நாடாளுமன்றத்தைக் கலைக்கின்றேன் என தொலைக்காட்சியில் தோன்றி அறிவிப்பு செய்தார் சிசி. இடைக்கால அதிபராக மன்சூர் செயல்படுவார் என்றும் அறிவித்தார் சிசி. அதன்பின்பு 3 இஸ்லாமிய சேனல்கள் மூடப்பட்டன. முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை கலைக்க வேண்டும் என்று கூறி அதன் உறுப்பினர்கள் 300 பேருக்கு கைது ஆணை பிறப்பிக்கப்பட்டது. இராணுவத்தின் இந்த செயலை சவுதி அரேபியாவும் யுனைட்டட் அரபு எமிரேட்சும் வரவேற்றன. அதேவேளையில் துருக்கி இச்செயலை விமர்சித்தது. இருள் மடிந்த பாதையிலிருந்து இக்கட்டான தருணத்தில் எகிப்தை பாதுகாத்து விட்டவர்கள் என்று இராணுவத்தை போற்றியது சவுதி அரேபியா.

**முர்சி அரசின் வீழ்ச்சிக்கு காரணமானவர்கள்:**

ஜூன் 2013 இல் முர்சி அரசுக்கு எதிராக ஒரு துடிப்பான பிரச்சாரத்தை முன்னோக்கி எடுத்தது தமருத் (கிளர்ச்சி, கலகம்) என்ற இயக்கம். மாற்றத்திற்கான எகிப்தியர்களின் இயக்கம் 2004 என்ற இயக்கத்தை சார்ந்தவர்களே இப்புதிய இயக்கத்தை ஆரம்பித்தனர். முன்பு கிஃப்பாயா இயக்கத்தில் இருந்தவர்களே இந்த தமருத் இயக்கத்தில் உறுப்பினராக சேர்ந்தனர். ஜூனில் ஒரு கையெழுத்து பிரச்சாரத்தை நாடு முழுவதும் ஆரம்பித்தது இவ்வியக்கம். முர்சியை நீக்கக்கோரி 22 மில்லியன் மக்களின் கையொப்பங்களை பெறப்போவதாகவும் அவர்கள் அறிவித்தனர். முர்சி பெற்ற மொத்த ஓட்டின் எண்ணிக்கையை (13.23 மில்லியன்) விட அதிகமான கையொப்பங்களை பெறவேண்டும் என்று ஆரம்பத்தில் 15 மில்லியன் கையொப்பங்களை இலக்காக நியமித்தனர்.

முர்சி அரசாங்கத்தை எதிர்த்து வீதிகளில் போராடியவர்களுக்கு எதிராக ஒரு குழுவை ஆரம்பித்தனர் இஸ்லாமியவாதிகளை ஆதரிப்போர். சட்டமுறைமைக்கு ஆதரவான தேசிய கூட்டணி என்று இக்குழு அழைக்கப்பட்டது. ரபா அல் அதவியா பள்ளிவாசல், நஹ்தா சதுரங்கத்தின் முன்நின்று கொண்டு அவர்கள் போராட ஆரம்பித்தனர். 28 ஜூன் 2013 –இல் இவர்கள் தங்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். அரசிற்கும் இராணுவத்திற்கும் இடையே பிளவு ஏற்பட இது காரணமாக அமைந்தது. இந்த இடர்மிகுந்த சூழ்நிலையில், “மக்களின் விருப்பத்திற்கு அரசு இணங்க வேண்டும்” என்று 48 மணி நேர கேடு விதித்தார் இராணுவத்தின் தலைமை அதிகாரி.


முர்சிக்கு ஆதரவாக ஆறு வாரங்கள் ரபா அல் அதவியா பள்ளிவாசலிலும், நஹ்தா சதுரங்கத்தை சுற்றியும் தொடர்ந்து நின்று போராடி கொண்டிருந்த அவரின் ஆதரவாளர்களை கலைக்க பாதுகாப்பு படை உட்புகுந்தது. இந்த சண்டையில் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்திற்கு எதிராக இருந்த மனநிலையால் இராணுவத்திற்கே ஆதரவு பெருகியது. முர்சியின் நீக்கத்திற்கு பின் தஹ்ரிர் சதுரங்கத்தில் இராணுவத்திற்கு ஆதரவாக முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**இன்ஷா அல்லாஹ் தொடரும்**

**அபூஹாசின்**

# சிலுவைப் போர் 2.0

## CRUSADE 2.0 BY JOHN FEFFER







**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

இன்றைய நாள்களில் மேலை நாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095இல் தொடங்கி 1274இல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது. சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991இல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

# ஜான் பெஃபர் கூறுகின்றார்




திருக்குர்ஆன் போர்க்களத்தில் எப்படி நடந்திட வேண்டும் என்பதை விரித்துரைக்கிறது. அதில் உள்ள நிபந்தனைகள் போர்க்களங்களில் ஏற்படும் உயிர் சேதங்களை வெகுவாகக் குறைத்து விடுகின்றன.

அங்கே போர்களின் நோக்கம் மனித இனத்தின் மீட்சி, ஈடேற்றம் என்பதே அல்லாமல் அழிக்க வேண்டும் என்பதல்ல. (அடிக்குறிப்பு 1)

ஆனால் நாங்கள் இந்த விஷயங்களை பற்றி சிந்தித்து கவலைப்படுவதில்லை. நாங்கள் இஸ்லாம் வாளின் மார்க்கம் என்றே பிரச்சாரம் செய்தோம். போர் செய்ய சொல்லும் வசனங்கள் யூதர்களின் வேதத்திலும் இருக்கின்றன என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம். கிறிஸ்தவத்தின் வேத நூல்களிலும் இவை இல்லாமல் இல்லை.

புதிய ஏற்பாடு, பொதுவாக ஈஸாவின் சொற்களாக பைபிளில் வரும் வசனங்கள் அமைதி, சாந்தம், சமாதானம் இவற்றின் செய்தியாகும்.

"உன்னுடைய ஒரு கன்னத்தில் அறைந்தால்; மறு கன்னத்தைக் காட்டு" என்பது போல் அமைந்திருக்கும். ஆனால் புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகத்தில் அதன் பேச்சும் போக்கும் பெரிய அளவில் மாறிவிடுகின்றது.

வேத வழிபாட்டு நூல்கள் படி - The Book of Revelation - யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்;

கடைசி போரின் முதல் கட்டத்தில், வானத்திலிருந்து ஒரு வெள்ளைக் குதிரையில் ஒரு பெரும் வீரன் வருவான். அவன் வாயிலிருந்து ஒரு பெரிய வாள் வெளிப்படும். அந்த வாள் நம்பிக்கை கொள்ளாதவர்களை கொன்றொழிக்கும்.

(ஆதாரம்: The Jeruselam Bible :336 (Revelation 19:11)

இது யூதர்களின் வேதங்களில் வருவதைப் போல், அந்த காலத்தில் இடம்பெற்ற ஒரு வன்முறை வசனம் என ஒதுக்கித் தள்ளிவிடுவது இல்லை. மாறாக வேத வெளிப்பாட்டு புத்தகம் / நூல் எதிர்கால உலகம் ஓர் இரத்த வெள்ளத்தில் மூழ்கும் என்பதை தெளிவாக குறிப்பிடுகின்றது. இந்த வன்முறை நடந்தே தீரும் என்கின்றது. இதுபோன்ற வசனங்களை வைத்துக்கொண்டு அல்லது இது போன்ற வசனங்களால் ஊட்டம் பெற்று இப்போதே ரத்த ஆறுகள் ஓட்டப் படுகின்றன உலகமெங்கும். (பார்க்க அடிக்குறிப்பு 2)

ஆனால் நாங்கள் கிறிஸ்துவம், அன்பின் மார்க்கம் என்றும், இஸ்லாம் வாளின் மார்க்கம் என்று தான் பிரச்சாரம் செய்தோம். முதல் சிலுவைப்போர்கள், தொற்று நோய்கள் வேகமாக பரவிக் கொண்டிருந்த காலத்திலும், பேரழிவுகள் நிகழப் போகின்றன என்ற அறிவிப்பு வந்து கொண்டிருந்த காலத்திலும் நடந்தவை.

வரலாற்றின் மத்திய காலகட்டத்தில் ஒரு நம்பிக்கை மக்களிடையே புழக்கத்தில் இருந்தது. அது இயேசு கிறிஸ்து இறந்து ஆயிரம் - 1000 ஆண்டுகளுக்கு பின் பெரும் நிகழ்வுகள் நிகழும் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்த கால கட்டத்தில் தான் முதல் சிலுவைப் போர்கள் நடந்தன. இதேபோல் இயேசு கிறிஸ்து இறந்து 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு பின் ரத்த பிரளயம் ஒன்று நிகழும் என்பதும் ஓர் அருள்வாக்கு எனக் கருதப்பட்டது. இதனால் மக்களிடையே ஒரு பெரும் எதிர்பார்ப்பும் இருந்தது. இதனால் முதல் சிலுவைப் போர்கள் (1095 - 1274) எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவே இருந்தது. (பார்க்க அடிக்குறிப்பு 3)

*முதல் சிலுவைப்போர் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று மட்டுமல்ல, அது அடுத்தடுத்து வெற்றி களையும் கிறிஸ்தவர்களுக்கு தந்தது. போப் அர்பன் 2 முதல் சிலுவை போருக்கான அழைப்பு விடுத்த மூன்றாவது ஆண்டில் (1098இல்) ஆட்டினோக் என்ற (இஸ்லாமிய உலகின் தலை வாயிலை) நகரை முஸ்லிம் ஆட்சியாளர்களிடமிருந்து கைப்பற்றினார்கள். தொடர்ந்து சிலுவைப்போர் வீரர்கள் ஜெருசலத்தை நோக்கிப் பாய்ந்தார்கள். அங்கே தான் இயேசுவின் மீட்பின் ஆலயம் இருந்தது.* (Holy Sepulcher of Jesus)

*அங்கே சிலுவைப்போர் வீரர்கள் அந்த மக்கள் மேல் கொடூரம் நிறைந்த கொடுமைகளையும் கட்டவிழ்த்திட்டார்கள். முஸ்லிம்களில் 40,000 பேரைக் கொலை செய்தார்கள். இறந்தவர்களின் பிணக்குவியல் அவர்களுக்கு ஒரு பெரும் பிரச்சினையானது. அந்தப் பிணங்களை ஜெருசலத்திற்கு வெளியே கொண்டு வந்து விட அரும்பாடு பட்டார்கள். இதற்காக எஞ்சியிருந்த முஸ்லிம்களையே பயன்படுத்தினார்கள். அந்த முஸ்லிம்களை கொண்டே அந்தப் பிணங்களை ஜெருசலத்திற்கு வெளியே கொண்டு வரச் செய்தார்கள். பின்னர் அந்தப் பிணங்களை நெருப்பிட்டு கொளுத்தினார்கள். முடிவில் அந்த பிணங்களை சுமந்து வந்த முஸ்லிம்களையும் அந்த நெருப்பிலே போட்டு கொளுத்தினார்கள். இவற்றையெல்லாம் வரலாற்றாசிரியர் கிறிஸ்டோபர் டயர்ஸ் என்பவர்* Gods War - *கடவுளின் யுத்தம் என்ற நூலில் விரித்துரைக்கின்றார்.*

*ஜெருசலேத்தில் வாழ்ந்த யூதர்களும் இதுபோன்ற ஒரு நிலைக்கு ஆளானார்கள். அவர்கள் சிலுவை யுத்த கிறிஸ்துவ வீரர்களின் வாளுக்கு பயந்து அவர்களின் தேவாலயமான சைனாகாக்கில் புகுந்தார்கள். சிலுவைப்போர் வீரர்கள் அந்த ஆலயத்தை சுற்றி விறகுகளை போட்டார்கள். நெருப்பிட்டு ஆலயத்தில் இருந்த அத்தனை யூதர்களையும் எரித்து சாம்பலாக்கினார். அதிலிருந்து தப்பி ஓடிய யூதர்களை வெட்டிக் கொலை செய்தார்கள்.*

**இன்ஷா அல்லாஹ் தொடரும்.**

### அடிக்குறிப்பு 1

*இஸ்லாம் போர்களின் போது மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகளையும், நிபந்தனை களையும் ஜான் பெஃபர் தன்னுடைய நூலில் அடி குறிப்பாக தந்திருக்கின்றார். அதனை அப்படியே இங்கே தருகின்றோம்;*

*“முஸ்லிம் சட்டங்கள் பெண்கள், குழந்தைகள், சன்னியாசிகள், யூத கிறிஸ்தவ பாதிரிகள், வயோதிகர்கள் ஆயுதம் தாங்கிப் போராடாத வர்கள் இவர்களை கொலை செய்வதை தடுக்கின்றது. சிறைபிடிக்கப்பட்ட போர் கைதிகளை சித்திரவதை செய்வதையும் தடை செய்கின்றது, முஸ்லிம்களின் சட்டம்! போரில் இறந்தவர்களின் உடல்களை சிதைப்பதையும் தடை செய்கின்றது. பெண்களை கற்பழிப்பது, மானபங்க படுத்துவது இவற்றையும் இஸ்லாமிய சட்டங்கள் தடை செய்கின்றன.*

*போரின் போது எந்தவிதமான பாலியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது. பிறநாட்டு தூதர்களை கொலை செய்யக் கூடாது வேண்டு மென்றே சொத்துக்களை, பழம் தரும் மரங்களை, பயன்தரும் தாவரங்களை, கழனிகளை சேதப்படுத்திடக்கூடாது. மதக் கேந்திரங்களை அழிப்பதும் சுகாதார மையங்களை அழிப்பதும் கூடாது. இந்த விழுமியங்கள் அனைத்தையும் இன்றைய சர்வதேசிய போர்களின் விதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.* (Riza aslan : No God but God 84 as Quoted by John Feffer in Crusade 2.0 Page 197)

### அடிக்குறிப்பு 2

*இந்தப் பகுதி* Book of Revelations *“திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்” என இடம்பெறுகின்றது. இது பைபிளின் கடைசி பகுதி. இதில் ஜான் பெஃபர் குறிப்பிட்ட பகுதிகள் தமிழ் மொழி பெயர்ப்புகளில் இப்படி இடம் பெறுகின்றது;*

*11. பின்பு பரலோகம் திறக்க கண்டேன். இதோ ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது. அதன்மேல் ஏறி இருந்தவர் உண்மையும், சத்தியமுள்ளவரெனப்பட்டவர். அவர் நீதியாய் நியாயம் தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்.*

*12. அவருடைய கண்கள் அக்னி ஜுவாலை போலிருந்தன. அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன. அவருக்கேயன்றி வேறொருவருக்கும் தெரியாத நாமமும் எழுதியிருந்தது.*

*13. ரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார். அவருடைய நாமமும் தேவனுடைய வார்த்தை என்பதே.*

*14. பரலோகத்தில் உள்ள சேனைகள் வெண்மையும், சுத்தமுமான மெல்லிய வஸ்திரம்*

தரித்தவர்களாய், வெள்ளை குதிரைகளின் மேல் ஏறி அவர்களுக்குப் பின் சென்றார்கள்.

15.புறஜாதிளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகின்றது. இரும்பு கோலால் அவர்களை அரசாளுவார். அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மது ஆலையை மிதிக்கிறார். (வெளிப்பாடு: 19;11-15 பழைய ஏற்பாடும், புதிய ஏற்படும் அடங்கிய பரிசுத்த வேதாகமம்)

ஜான் பெஃபர் அவர்களின் கூற்றுப்படி இது போன்ற வசனங்களை காரணம் காட்டி இன்றும் கொலைகளும் ரத்தத்தை ஓட்டுவதும் நடக்கின்றன.


ஆப்கானிஸ்தானில் மேற்கொண்ட தாக்குதலின்போது லட்சக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஆப்கானிஸ் தானில் தாங்கள் மேற்கொண்ட தாக்குதலை Modern Crusade - நவீன சிலுவைப்போர் என்றார் அமெரிக்காவின் அன்றைய அதிபர் ஜார்ஜ் புஷ். (2001 செப்டம்பர் 13 அறிவிப்பு)

இந்த தாக்குதலை கிறிஸ்தவத்தோடு இணைத்து பேசிட அவர் சற்றும் தயங்கவில்லை. அது சிலுவைப்போர் 2.0 இன் ஒரு பகுதிதான் என்பதை ஜான் பெஃபர் அவர்களும் ஒத்துக் கொள்கிறார்கள் என்பதை நாம் இந்தத் தொடரில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

இந்தப் போர் இன்னும் 60 அல்லது 70 ஆண்டுகள் தொடரும் என (State of the Union Address) தான் 2004 இல் மீண்டும் பதவி யேற்றவுடன் ஜார்ஜ் புஷ் அறிவித்தார்.

அந்த நிலையில் 2004இல் அமெரிக்க அதிபர் புஷ் ஈராக் மீது ஆக்கிரமிப்பை தொடுத்திருந்தார். அதே ஆக்கிரமிப்பிற்கு ஒரு பெரும் பொய்யை காரணமாக சொன்னார். அந்தப் பொய்; ஈராக்கின் அதிபர் சதாம் ஹுசைன் ஏராளமான பேரழிவு ஆயுதங்கள், அணு ஆயுதங்களை தன்வசம் வைத்து இருக்கின்றார். அவர் 40 நிமிடங்களுக்குள் அமெரிக்காவை தாக்கி விடுவார் என்றார்.

இந்தப் பொய்யின் பின்னணியில் அவர் ஈராக்-ஐ ஆக்கிரமித்து ஈராக்கின் ஆட்சியாளர் சதாம் ஹுசேனை கொலை செய்தார். பின்னர் தான் தெரிந்தது சதாம் ஹுசேனிடம் அப்படி எந்த ஆயுதமும் இல்லை என்று தெரிய வந்தது. அந்த



நிலையில் அமெரிக்க அதிபர் புஷ் பொய்யை தான் சொன்னார் என்பது வெட்ட வெளிச்சமானது. சிக்கலுக்குள் சிக்கிக் கொண்ட புஷ் இப்படி அறிவித்தார்; "எனக்கு போர் தொடுப்பதற்கான உத்தரவு கடவுளிடமிருந்து வந்தது - The Command is from Heaven".

அத்தோடு முஸ்லிம் நாடுகளோடு தொடர்ந்து போர் பிரகடனங்களை செய்தார். அதற்கு உலக நாடுகளை அணி சேர்த்தார். அப்படி அணி சேர்க்கும் போது, "நீங்கள் எங்களோடு இல்லை என்றால், எங்கள் எதிரிகளோடு இருக்கின்றீர்கள் என்றார். If you are not with us You are Against us". இதுவும் பைபிளில் உள்ள ஒரு வசனமாகும். அது; "என்னோட இராதவன் எனக்கு விரோதியாய் இருக்கின்றான்." (மத்தேயு 12;30)

இதுபோன்ற வசனங்களால் ஊட்டம் பெற்ற அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இணைந்து பிணமாக்கிய முஸ்லிம் குழந்தைகள், பெண்கள், வயோதிகர்கள், அப்பாவி குடிமக்கள் பல நூறு கோடிகள். ஆம் முஸ்லிம் நாடுகளில் ஓரிரு நாடுகளை தவிர, மீதமுள்ள நாடுகளிலும் குண்டு மழை பொழிந்தார்கள். ஆக்கிரமித்தார்கள். பிணங்களை குவித்தார்கள்.



இயற்கை வளங்களை கொள்ளையடித்தார்கள். இவர்களால் அகதிகளாக ஆக்கப்பட்டவர்கள், அனாதைகளாக ஆக்கப் பட்டவர்கள் ஏராளம். ஏராளம்..

அதேபோல் முஸ்லிம் நாடுகளில் இவர்கள் வளர்த்து ஊடுருவவிட்ட தீவிரவாத அமைப்புகள் ஐ.எஸ்.ஐ.எஸ். போன்றவை ஏராளம். இதனை ஒரு கொள்கையாகவே கொண்டு செயல்பட்டு வருகின்றனர். தாங்கள் வளர்த்து ஆயுதமும் தந்து ஊடுருவவிட்ட தீவிரவாத அமைப்புகளை கொண்டு நடத்தும் உள்நாட்டுப் போருக்கு (Default Wars) மேலைநாடுகள் இல்லாமல் நடக்கும் போர்கள் என்று பெயர். (Daniel Pipes) என்கிறார்கள்.

**அடிக்குறிப்பு 3**

சிலுவைப் போர்கள் கி.பி. 1095 ஆம் ஆண்டில் தொடங்கின. இஸ்லாத்தின் வரலாற்றை எழுதும் ஆசிரியர்கள் அது 152 ஆண்டுகள் நடந்தன. 1095 + 152 =1147ல் முடிந்தது என்கிறார்கள். ஆனால் ஜான் பெஃபர் போன்றவர்கள் அது 1274 இல் தான் முடிந்தது என்கிறார்கள். இதிலிருந்து பெறப்படும் உண்மை என்னவெனில், முஸ்லிம்கள், வரலாற்று ஆசிரியர்கள் முடிந்தது என கருதிய காலத்திற்குப் பின்னும் சிலுவைப்போர்களை தொடர்ந்திருக்கிறார்கள். தோற்றிருக்கின்றார்கள். நமது வரலாற்று ஆய்வாளர்கள் அவை தேவையில்லை என விட்டுவிட்டார்கள் எனலாம்.

ஆனால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு இஸ்லாமிய பிரச்சாரத்தை செய்து வந்த லியோபால்ட் அஸத் என்ற முஹம்மது அஸத் அவர்கள் இவற்றை எல்லாம் நமக்கு 1990கள் முதலே சொல்லி வருகின்றார்கள். முஹம்மத் அஸத் அவர்கள் எழுதிய வரலாற்றுச் சிறப்புமிக்க Islam at the Cross Roads என்ற நூலில் இப்படிக் குறிப்பிட்டார்கள்;

"Is a Tragic development both from the view point of the Christian. Church and from that of Islam. Tragic for the Church, because it lost after such a startling beginning it lost, it hold over the minds of Europe. and tragic for Islam because it had to bear the fire of the Crusades in many forms and disguises through long Centuries afterwards"

இதன் பொருள்

முதல் சிலுவைப்போர் ஒரு பெரிய துக்ககரமான நிகழ்வு கிறிஸ்துவ ஆலயங்களுக்கும், இஸ்லாத்திற்கும். கிறிஸ்துவ ஆலயங்களுக்கு அது ஒரு சோக நிகழ்வு. காரணம் அவர்களுக்கு தொடக்கத்தில் கிடைத்த மகத்தான வெற்றிகளுக்குப் பின் படுதோல்வியை சந்திக்க நேரிட்டு விட்டது. இஸ்லாத்திற்கும் சோகமான நிகழ்வு காரணம், சிலுவைப் போர்களின் அக்கினிப் பிழம்பை அவர்கள் நீண்ட நெடிய நூற்றாண்டுக்காலம் தாங்கிட வேண்டியதாயிற்று. இந்த அக்னிகளை பல உருவங்களிலும், பல மாறுவேடங்களில் சந்திக்க வேண்டியதாயிற்று.

Source: Islam at the Cross Roads - Page 69 - 1994 Edition

**MGM**

# வருகின்றது மதமாற்ற தடை சட்டம்

எதிர்வரும் குளிர்கால நாடாளுமன்ற கூட்டத்தொடரில் மதமாற்ற தடை சட்டத்தை கொண்டு வர இருக்கின்றார்கள் இந்தியாவை இன்று ஆண்டு கொண்டிருக்கும் (பாசிஸ்டுகள்) பாசிசத்தை பாதையாக கொண்டவர்கள்.

இதற்காக அவர்கள் தங்கள் வழக்கமான வழி ஒன்றை கையாண்டு இருக்கின்றார்கள். நமது அண்டை மாநிலமான கேரளாவில் கட்டாய மதமாற்றம் நடப்பதை போல் ஒரு பிரம்மையை உருவாக்கி இருக்கின்றார்கள். அந்த மத மாற்றங்கள் இந்து மதத்தில் இருந்து இஸ்லாத்தையோ, கிருஸ்தவத்தையோ ஏற்றுக் கொள்வதைப் போன்றது அல்ல.

மாறாக கிறிஸ்துவத்தில் இருந்து இஸ்லாத்திற்கு மதமாற்றங்கள் நடக்கின்றனவாம். அதுவும் கொள்கை வழி பிரச்சாரம் அல்ல. மாறாக காதலித்து திருமணம் செய்கின்றார்களாம். ஆமாம் அதான் லவ் ஜிகாத் (Love Jihad) ஆம்.

இப்படி கிறிஸ்தவ பெண்கள் காதலிக்கப்பட்டு இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்யப் படுவதால் கிறிஸ்துவம் பட்டுப் போகின்றதாம். அண்மையில் கேரளாவின் கோழிக்கோட்டில் இப்படி ஒரு சம்பவம் நடந்ததாம்.

அது கிறிஸ்துவத்தை நிலைகுலைய செய்து விட்டதாம். அதனால் மதமாற்ற தடை சட்டம் வேண்டுமாம். இப்படி கேட்டு இருப்பவர் நமது தேசிய சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் ஜார்ஜி கொரியன் என்பவர்தான்.

ஜார்ஜி கொரியன் என்றவுடன் அவரை ஒரு கிறிஸ்தவர் என்றுதான் எண்ணிடத் தோன்றும். அவர் கிறிஸ்துவ பெயர் தாங்கிய பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.

இவரை விட்டு நாம் மேலே சொன்னவாறு ஒரு கடிதத்தை தனக்கு எழுத சொல்லியிருக்கின்றார் ஆயிரம் தலை வெட்டி அமித்ஷா. இந்தக் கடிதத்தில் தீவிரவாதத்தையும் உடன் இணைத்து இருக்கின்றார். கிறிஸ்துவ பெண்களை காதலித்து இஸ்லாத்தில் சேர்த்து தீவிரவாதச் செயல்களுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்களாம்.

இப்படி ஒரு புகாரை டெல்லியில் உள்ள பெற்றோர்கள் நமது தேசிய சிறுபான்மையினர் நல ஆணையத்திடம் தந்தார்களாம். அவர்களுடைய மகள் மேற்கு ஆசிய நாடுகளில் தீவிரவாத செயல்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கலாம் என கற்பனையில் தோன்றுகிறதாம்.

அவர் தன் கடிதத்தில் அதாவது, தேசிய சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் தன் கடிதத்தில், "2005 முதல் 2012 வரை 4000 பெண்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருப்பதாக" கமிஷன் அறிக்கை ஒன்று கூறியிருப்பதாக கூறியிருக்கின்றார்.

(செய்தி: தி இந்து ஆங்கிலம் செப்டம்பர் 26, 2019)

இப்படி எல்லாம் ஓர் அறிக்கையை தன் கட்சிக்காரர்களிடமே பெற்று மதமாற்ற தடை சட்டத்தை கொண்டு வந்திட குட்டி கரணம் போடுகின்றார் அமித்ஷா.

இந்த நாடகம் இல்லாமலே மின்னணு வாக்கு இயந்திரங்கள் தந்த மிருக பலம் இருக்கின்றது. அதை வைத்துக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டு ஒரு சட்டத்தை கொண்டு வந்து விடலாம். ஆனால் இங்கு உள்ள கிறிஸ்துவ ஆலயங்கள் அவற்றை எதிர்க்கும். கிறிஸ்தவ ஆலயங்களின் எதிரொலியாக அமெரிக்கா இந்தியாவில் மத சுதந்திரம் இல்லை என அறிக்கை விட்டு உலக அரங்கில் இந்தியாவை அசிங்கப்படுத்தும்.

இதனால், கிறிஸ்துவத்தை காப்பாற்றிட தான் மதமாற்ற சட்டம் கொண்டு வரப்படுகின்றது என்ற ஒரு பம்மாத்தை உருவாக்குகிறார். அத்தோடு இஸ்லாத்தைப் பொது எதிரியாக காட்டிடும் ஒரு பெரும் நாடகத்தை அரங்கேற்றுகிறார். இனி வரும் நாட்களில் மக்களின் கவனத்தை, வீழ்ந்து கொண்டிருக்கும் பொருளாதார தோல்விகளை மறைக்க இந்த பிரச்சனையை பயன்படுத்துவார்கள்.

ஆயிரம் சட்டங்கள் வந்தாலும் இஸ்லாத்தில் மக்கள் இணைவதை தடுத்திட முடியாது. ஏனெனில் அது மனிதனின் இயல்புக்கும் இயற்கைக்கும் ஏற்ற மார்க்கம். அன்று அரேபியாவில் மட்டும் அறிமுகமான மார்க்கம் இன்று ஐரோப்பாவில் மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் மார்க்கம். பிரபல பத்திரிக்கையாளர் ரம்ஸ் பரோடி அவர்களின் கருத்துப்படி, "உலகில் மக்கள்தொகை எவ்வளவு வேகமாக வருகின்றதோ, அதை விட வேகமாக வளரும் மார்க்கம் இஸ்லாம்".

இறைவனின் இறுதி தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் சொன்னார்கள்;

"நாகரீகமடைந்த (மதர்) நாகரீகம் அடையாத (வபர்) எல்லா பிரதேசங்களிலும், அல்லாஹ் இஸ்லாத்தை நுழைவிப்பான்." (ஆதாரம்: முஸ்னத் அஹ்மத் - பாகம் 6 - ஹதீஸ் 4, தப்ரானி 20:601, இப்னி ஹிப்பான் 6099, 67)

ஆயிரம் அமித்ஷாக்கள் வந்தாலும் இதனைத் தடுத்திட இயலாது.

**MGM**




# பர்தா எனும் இஸ்லாமிய ஆடை

## மகளிர் மன்றம்

செப்டம்பர் 11, 2001 அன்று நியூயார்க்கின் உலக வர்த்தக மையத்தின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பிறகு இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் மீது உலக மக்களின் பார்வை திரும்பியது.

முஸ்லிம்கள் "தீவிரவாதிகள்" என்ற மீடியாவின் சித்தரிப்பை மீறி முஸ்லிம்களின் வாழ்க்கை முறையை அறியும் ஆர்வம் ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக உலக ரவுடி அமெரிக்கா, ஆஃப்கான் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு ஆஃப்கானுக்கு விடுதலை வாங்கித் தந்ததாகப் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது.

அந்த நேரத்திலும் ஆஃப்கானிஸ்தான் பெண்கள் தங்களது பாரம்பரிய உடையைத் தரித்து பர்தாவைக் கடைபிடித்தது உலகுக்கு அதிர்ச்சியூட்டியது.

பர்தா குறித்து உண்மையிலேயே முஸ்லிம் பெண்மணிகள் என்ன நினைக்கிறார்கள் என்ற ஓர் ஆய்வை Savvy என்ற ஆங்கில இதழ் பிப்ரவரி, 2002இல் நடத்தியது. அதன் தமிழாக்கமே இது.

பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் அதிலும் குறிப்பாக படித்த இளம் பெண்கள், வேலை பார்க்கும் பெண்கள், குடும்பத் தலைவிகள் இவர்கள் எல்லாம் பர்தா அணிவதை ஒரு கண்ணியமான - மரியாதைக்குறிய செயலாகத்தான் கருதுகிறார்கள்.

**இர்யம் அன்சாரி(40)**

மும்பை பந்தாரா புறநகர் பகுதியிலிருக்கும் புகழ் பெற்ற உருது பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார். இவர் கடந்த 18 ஆண்டுகளாக பர்தா அணிகிறார். "என் வீட்டில் யாருக்கும் பர்தா அணியும் பழக்கம் இல்லை. நானும் பர்தா அணிவேன் என்று நினைத்துக் கூட

பார்த்ததில்லை. ஒரு நாள் தோழி ஒருத்தி என் வீட்டுக்கு வந்தாள். அவள் பர்தா அணிந்திருந்தாள். அவள் தான் எனக்கு பர்தா பற்றி சொன்னாள்.

இது சம்பந்தமான திருக்குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் (நபிகளாரின் போதனைகள்) விரிவாக எடுத்துரைத்தாள். அந்த வார்த்தைகள் என் மனதில் ஆழமாகப் பதிந்தன. அன்றிலிருந்து நானும் பர்தா அணிய ஆரம்பித்தேன்."

-தனக்கு புர்கா அறிவூட்டிய தோழியை நன்றியோடு நினைவு கூர்கிறார் இர்யம்.

**ஸமீரா ஹஸன்(25)**

கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் துறையைச் சேர்ந்தவர் இவர். புர்கா அணிவதில்லை. ஆனால் அணிபவர்கள் மீது ஒரு தனி மரியாதை வைத்திருக்கிறார். அவருடைய கருத்து இது:

பர்தா அணிவது அவரவர் விருப்பத்தைப் பொருத்த விஷயம். (ஆனால் இஸ்லாம் பெண்கள் பர்தா அணிவதை கடமையாக்கி இருக்கின்றது.) அவர்களாகவே விரும்பி அணிந்தால் அதன் பெருமையும், புனிதத் தன்மையும், அதை அணிவதால் பெண்ணுக்குக் கிடைக்கும் மரியாதையையும் புரிந்து கொள்ள முடியும். திணிப்பு சுமையாகிவிடும். அதே நேரத்தில் எனக்கு ஒரு விஷயம் மட்டும் விளங்கவில்லை.

முஸ்லிம் பெண்கள் பர்தாவை விரும்பி ஏற்பதை மக்கள் ஏன் ஒப்புக்கொள்வதில்லை? என்பது தான் அது.

ஆனால் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதை மிகவும் வசதியானதாகவும், மகிழ்ச்சியானதாகவுமே கருதுகிறார்கள்.

என்கிறார் அவர் தொடர்ந்து,

இன்று எல்லோருக்கும் பர்தா (இஸ்லாமிய ஆடை) மேல் ஏற்பட்டு இருக்கும் வெறுப்புக்குக் காரணம் மீடியாதான் என்பதை நான் உணர்கிறேன். அண்மையில் நமது மீடியா ஆஃப்கானிஸ்தானில் பெண்கள் பர்தாவை (இஸ்லாமிய ஆடைகளைத்) தூக்கி வீசி விட்டார்கள் என்றொரு செய்தியைப் பரப்பின.

ஏனெனில் இப்போது (வெளிப்படையாகச் சொன்னால் தாலிபானின் ஆட்சிக்குப்பின்னால்) பர்தா அணிவது கட்டாயக் கடமை இல்லையே என்று காரணமும் சொல்லி இருக்கிறது.

இது ஆஃப்கானிஸ்தானில் கட்டாயப்படுத்தப்பட்டதால் தான் பெண்கள் இஸ்லாமிய ஆடையை அணிகின்றார்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது. இது உண்மையல்ல.

(முஸ்லிம் பெண்கள் தாங்களாக விரும்பித்தான் இஸ்லாமிய ஆடைகளை அணிகின்றார்கள் என்கிறார் ஸமீரா விரிவாக.)

**சீமா அனீஸ் அக்தர்(25)**

இந்தப் பெண்மணி டாக்டர் பாபா சாஹிப் அம்பேத்கர் மாநகர மத்திய இரயில்வே மருத்துவமனையில் பயின்று வருகின்றார். காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் ,முதுநிலைப் பட்டப் படிப்பைப் படித்துக் கொண்டிருக்கிறார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னாள் சீமா தன்னுடைய சக மாணவிகளுக்கு ஓர் அதிர்ச்சியைத் தந்தாள். அது அவள் இஸ்லாமிய ஆடையை அணிந்து மருத்துவமனைப் பயிற்சியைத் தொடங்கியது தான்.

மருத்துவத்திற்கு படிக்கும் ஒரு மாணவிக்கு அவள் மருத்துவமனைக்குள் புகுந்து மருத்துவத்தில் நேரடிப் பயிற்சி எடுப்பது வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்குவது தான்.

நான் என் வாழ்க்கையின் இந்தப் புதிய அத்தியாத்தை இஸ்லாமிய ஆடையை அணிந்து தொடங்கினேன். இன்று சமுதாயச் சூழலில் இது மிகவும் கடினமான ஒரு முடிவாகத்தான் தெரிந்தது. எனினும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிவது என்று முடிவு எடுத்திருந்தேன்.

நான் என் பள்ளி நாட்களிலிருந்தே இப்படியொரு எண்ணத்தை வளர்த்து வந்தேன். என் குடும்பத்தைச் சார்ந்த எல்லாப் பெண்களும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிகின்றார்கள். அவர்களை யாரும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணியச் சொல்லி கட்டாயப்படுத்தியதில்லை. நாங்கள் எங்கள் விருப்பப்படி முடிவு செய்து கொள்ளலாம் என விட்டு விட்டார்கள்.

என்கிறார் சீமா.

இஸ்லாமிய ஆடைகளை அணிவதற்கு முன்னால் சீமா தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினார். இஸ்லாமிய ஆடை அணிவது என்பது, எடுத்தேன் கவிழ்த்தேன் எனத் திடீரென எடுத்துக் கொள்வது. பின்னர் விட்டு விடுவது என்ற அடிப்படையில் உள்ள விவகாரமல்ல. அது அணியத் தொடங்கினால் வாழும் நாள் முழுவதும் அணிந்திட வேண்டிய ஒன்று. எப்போதும் கைவிட்டிட இயலாது.

இன்று நான் நம்பிக்கையோடு இருக்கிறேன். நான் எடுத்த முடிவைப் பற்றி நான் எள்ளளவும் கவலைப் படவில்லை. உண்மையைச் சொல்வ தானால் நான் அணிந்தருக்கும் ஆடையால் நான் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறேன். குறிப்பாக இரவு நேரங்களில் அது என்னுள் அலாதியான பாதுகாப்புணர்வை ஊட்டுகின்றது.

இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிந்திருக்கும் பெண்களை யாரும் கண்டு கொள்வதில்லை. இது எனக்கு மிகவும் வசதியாகப் போய் விட்டது.

என்கிறார் தெளிவாக.

பர்தா அணிந்திருக்கும் பெண்களைப் பற்றி ஏற்படுத்தி இருக்கும் தவறான எண்ணங்களைப் பொருத்தவரை சீமா இப்படிக் குறிப்பிடுகின்றார்:

மிகவும் குறைவாக ஆடை அணிந்திருக்கும் பெண்களை மலிவானவர்கள், இழிவானவர்கள் என்று முத்திரை குத்தி விடுவது அநியாயமானது. அதேப்போல பர்தா அணிந்த பெண்களைப் பரிதாபத்திற்குரியவர்கள் என எண்ணுவதும் தவறு. ஒரு புத்தகத்தை அதன் அட்டையை மட்டுமே கொண்டு மதிப்பிடுவது முட்டாள் தனமானது.

சீமாவைப் பொருத்தவரை ஒருவர் அணிந்திடும் ஆடை என்பது அவருடைய விருப்பத்தைப் பொருத்தது. அது பொது மக்களின் விவாதத்திற்குரிய ஒன்றல்ல.

பல பெண்களுக்கு இஸ்லாமிய ஆடை அணிவது என்பது மதத்திற்கு அப்பாற்பட்ட விஷயம். (இது Savvy) பத்திரிக்கையில் தனிப்பட்டக் கருத்து).

**ருத்தார் அக்பர்(29)**

இந்த பெண்மணி இஸ்லாமிய முறைப்படி ஆடைகளை அணிவதில் மகிழ்ச்சி அடைகின்றாள். காரணம் அது அவருடைய கணவனை மகிழ்ச்சியடையச் செய்கின்றது. நான் என் கணவனை மகிழ்விக்க புர்கா அணிந்தால் அது ஏன் அவ்வளவு பெரிய விவாதமாக மாற வேண்டும்? சாதாரணமாக பெண்கள் தங்கள் கணவர்கள் விரும்புவது போல் தங்கள் வனப்பை வடிவமைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அது யாரையும் தொந்தரவு செய்யவில்லை!

என்கிறார் ருத்தார்.

**ராபியா ஷேக்(32)**

இவர் பர்தா அணிவது குறித்து முற்றிலும் மாறுபட்டதொரு காரணத்தைச் சொல்கின்றார்:

நான் நீண்ட கோட் வடிவிலான மேற்கத்திய பர்தா உடையால் மிகவும் கவரப்பட்டேன். என்னுடைய வகுப்பில் படித்த தோழிகள் அதை அணிந்து வரும்போதெல்லாம் நான் அதை அணியத் தொடங்கினேன். நான் இதில் மிகுவும் புதுமையாக ஈரானிய பர்தாவைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

என்னுடைய நண்பர்கள் எல்லோரும் நான் அந்த பர்தாவில் அழகாக இருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய பெற்றோர்களும் அதனை விரும்பினார்கள். என்னுடைய மார்க்கம் சொன்னதையும் செய்த திருப்தி எனக்கு.

குழந்தை வளர்ப்பிலும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிவது மிகவும் அழகியதோர் பங்காற்றுகின்றது. குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிவதைப் பார்த்து வளர்கின்றார்கள். அவர்கள் ஆளாகும் போது, அவர்கள் அதைத் தவிர வேறு வகையான ஆடைகளை விரும்புவதில்லை.

இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால் பர்தா என்பது பெண்கள் மீது திணிக்கப்படுகின்ற ஒன்றல்ல. மாறாக அது பெண்களின் விருப்பம். அவர்களின் சிறப்பம்சம்.

**MGM**





Fig. 1

# மின்னணு வாக்கு இயந்திரத்தில் மோசடி செய்ய முடியும்!

Evm - Vvpat இயந்திரத்தில் மோசடி செய்ய முடியும்.

கண்ணன் கோபிநாத் ஐ.ஏ.எஸ். ராஜினாமா செய்தவர். மேற்ண்ட அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

இவர் இந்த ஈ.வி.எம். இயந்திரத்தில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். அதன் அடிப்படையில் சொல்கிறார்.

நாம் ஓட்டு போடும் இயந்திரம் பாலேட் யூனிட். இது ஓட்டு போட்டால் அடுத்தவர் போட சரி செய்யும் அதிகாரியிடம் கண்ட்ரோல் யூனீட் இருக்கும். அதனுடன் இது கனெக்ட் (இணையவில்லை) ஆகவில்லை.

ஓட்டு போடும் இயந்திரம் பாலேட் யூனிட் Vvpat இயந்திரத்தில் இணைந்துள்ளது.

Vvpat இயந்திரமே கண்ட்ரோல் யூனிட் இடம் இணைகிறது.

நாம் ஓட்டு போட்டால் 7 செகண்ட் மட்டும் Vvpat காட்டும். ஆனால் ஓட்டு சேகரிக்கும் இயந்திரம் கண்ட்ரோல் யூனிட்ல் வேறு சின்னம் பதிவாகும்.

இங்கு ஓட்டு போடும் இயந்திரம் பாலேட் யூனிட் உடன் கண்ட்ரோல் யூனிட் கனெக்ட் ஆகவில்லை என்றால் நாம் ஓட்டு போடும் புளு பட்டன் எதற்கு? என கோபிநாத் வினா எழுப்பியுள்ளார்.

Vvpat இயந்திரம் எதை கண்ட்ரோல் யூனிட்ல் சேமிக்கிறது? எனவும் கேட்டுள்ளார்.

Vvpat™ தவறு செய்ய முடியுமா?

அவர் பதில்;

முடியும் Vvpat இயந்திரத்தில் பிராசசர், பிரிண்டர், மெமரி உள்ளது.

இந்த பிராசசர் - ல் மோசடி செய்ய முடியும்.

எப்படியென்றால்

மால்வேர் மூலம் ஒரு சிக்னல் பிரிண்டர் யூனிட்க்கும், வேறு சிக்னல் கண்ட்ரோல் யூனிட் (ஓட்டு சேமிக்கும் ) அனுப்ப முடியும்.

Vvpat™ இன்ஜினியர்கள் சின்னத்தை சாப்ட்வேர் மூலம் பதிவேற்றுவர் அப்போது வேட்பாளர் வரிசை எண் தெரிந்தால் போதும் நாம் மோசடி செய்யலாம்.

வேட்பாளர் A சின்னம் போட்டால் அது Vvpat™ காட்டும். ஆனால் வேட்பாளர் B க்கு கண்ட்ரோல் யூனிட் ல் ஸ்டோர் ஆகும்.

இனி விளங்கவில்லையெனில் அடுத்த தலைமுறைக்கும் மோடியே!

**- முகமது இக்பால்**

# 2

# அன்றும், இன்றும் தொடரும்

# தீண்டாமை!

பரியேறும் பெருமாள் பி.ஏ.பி.எல். மேல ஒரு கோடு. தலித் சமூதாய மக்களின் வாழ்வியலை, அந்த மக்களுக்கு இழைக்கப்படும் அநியாயங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டிய மிக முக்கியத் திரைப்படமாக இந்த படம் பார்க்கப்படுகிறது. சரியாக இந்த படம் வெளி வந்து ஒரு வருடம் கடந்தோடி விட்டது. ஆனாலும் இன்றும் அந்த திரைப்படத்தின் தாக்கத்தை மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் காணலாம்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பழைமையான நாகரிகம் என பெருமை பேசும் செந்தமிழ் நாட்டின் சாதீயச் செருக்கு என்னவெல்லாம் செய்யும் என்பதை நம் கண் முன் கொண்டு வந்து நிருத்திய திரைப்படம் “பரியேறும் பெருமாள்”.

“உண்டியல் திருட்டிற்காக தாழ்த்தப்பட்ட சமூகத்து இளைஞனை சந்தேகிப்பது, கல்லூரியில் சாதியின் பெயரால் இழிவுபடுத்தப்படுவது, உயர் சாதிப் பெண்களுடன் நட்பு ரீதியாகக் கூட பழகுதல் கூடாது என்பது, சாதி மாறி திருமணம் செய்யும் பிள்ளைகளை தாங்களே கொன்று விட்டு பின்னர் நடிக்கும் பெற்றோர்கள் என படம் முழுக்க ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களை பேசும் காட்சிகள் நம் இதயத்தை ஆட்டம் காண செய்யும்.

இப்படி படம் முழுவதும் தலித் சமூகத்தின் மீதான அவலங்களை பேசிவிட்டு படத்தின் இறுதிக் காட்சியில், “நீங்க நீங்களா இருக்கும் வரை, நான் நாயாகத்தான் இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்ப்பார்க்கும் வரை, இங்கு எதுவுமே மாறாது. இப்படியே தான் இருக்கும்” என்று அந்த படம் முடியும்.

இப்படி அந்த மக்களின் பிரச்சனைகளை, அவலங்களை பேசிய இந்தத் திரைப்படம் அதற்கான தீர்வுகளை பற்றி பேசாமல் போனது மிகவும் வருத்தத்தை அளித்தது.

இதுபோன்று தாழ்த்தப்பட்ட மக்களின் அவலங்களை பார்க்கும் எந்த ஒரு பகுத்தறிவுள்ள மனிதனும் அந்த மக்கள் அதிலிருந்து மீண்டு விடமாட்டார்களா! அவர்களிடமிருந்து அந்த இழிநிலை அகன்று விடாதா! என்று ஆதங்கப்படுவர்.

வெறும் இப்படியொரு வாழ்வியல் இருக்கிறது என்று படம் பிடித்து காட்டி விட்டால் மட்டும் எல்லாம் முடிவுக்கு வந்து விடுமா? அதற்கான தீர்வை சொல்லியிருக்க வேண்டும் அல்லவா! அதுதானே அண்ணல் அம்பேத்கர் அவர்களின் வழிமுறை.

“இப்படியெல்லாம் எங்களுக்கு நடக்கின்றது. இதை கேட்போர் யாருமில்லையா?” என்றெல்லாம் அவர் ஒன்றும் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கவில்லை. தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் நிரந்தரமான விடுதலைக்கான வழிகளை அவர் சொன்னார். சொன்னது மட்டுமில்லாமல் அதை தனது வாழ்விலும் செயல்படுத்திக் காட்டினார்.



ஏனென்றால் அவருக்கு நன்றாக தெரியும், "இந்த இழிநிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளாமல் எந்த சீர்த்திருத்தமும் இங்கே பலனளிக்காது என்று".

நீங்கள் எவ்வளவு பெரிய பதவிகளில் இருந்தாலும் சரி, சாமான்ய மனிதனாக இருந்தாலும் சரி இந்து மதத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளாத வரை உங்களை இந்த சாதீய தீண்டாமைகள் தொடரும். அதற்கு சமகாலத்தில் நடந்த இரண்டு உதாரணங்களை காணலாம்.

## சம்பவம் 1

கர்நாடகா மாநிலத்தின் தும்கூர் மாவட்டத்தில் உள்ள கொல்லாரஹட்டி எனும் கிராமத்திற்கு வளர்ச்சிப் பணிகளை பார்வையிட சென்றுள்ளார் கர்நாடகா எம்.பி. நாராயன சாமி. இவர் ஒரு தலித் சமூகத்தை சார்ந்தவர். பா.ஜ.க.வில் எம்.பி.யாக உள்ளார். அவர் தலித் சமூகத்தைச் சார்ந்தவர் என்பதால் அந்த ஊர் மக்கள் அவரை ஊருக்குள் அனுமதிக்கவில்லை.

எவ்வளவோ போராடிப் பார்த்தும் அந்த ஊர் மக்கள் இவரை ஊருக்குள் அனுமதிக்காததால், திரும்பக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது அவருக்கு. அவர் ஒரு நாடாளுமன்ற எம்.பி. ஆனால் தலித் என்ற ஒரே காரணத்தினால் அவரால் அவருடைய தொகுதிக்குட்பட்ட கிராமத்திற்கு கூட செல்ல முடியவில்லை.

- குமுதம் 30, செப்டர் 2019

அதிகாரத்திற்கு வந்துவிட்டால் எல்லாம் மாறிவிடும். நம் மீது படிந்திருந்த அடிமை முறைகள் ஒழிந்து விடும் என்ற சிந்தனையில் இருப்பவர்களுக்கு, அதிகாரத்தை பிடித்தாலும் தாழ்த்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் தான் என்பதை பறைசாற்றும் விதமாக நவீன டிஜிட்டல் இந்தியாவின் இந்த சம்பவம் நமக்கு உணர்த்துகிறது.

## சம்பவம் 2

கடந்த மே மாதம் ஒடிசாவில் அடித்த பானி புயலால் அந்த மாநிலத்திற்கு புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மக்கள் எல்லோரும் அந்தந்த கிராமங்களில் இருந்த பள்ளிக் கூடங்களில் தஞ்சம் புகுந்தனர். புயல் எச்சரிக்கையைக் கேள்விபட்ட தலித் சமூகத்து மக்களும் அரசு பள்ளிகளுக்கு பாதுகாப்பு வேண்டி சென்றுள்ளனர். ஆனால் அவர்களை பள்ளிக்குள் அனுமதிக்கவில்லை. "நீங்கள் ஹரிஜன்கள். உங்களை சேர்க்க முடியாது" என்று கூறி

விரட்டியுள்ளனர்.

நீண்ட நேரம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதின் பெயரில் அவர்களுக்கு தனியாக ஒரு அறையைக் கொடுத்துள்ளார்கள். அதுவும் இவர்கள் இருக்கும் அறைகளை விட்டு வெகு தூரத்தில் கொடுத்துள்ளனர். அதுவும் தரமற்ற, பாதுகாப்பற்ற அறை.

அதுபற்றி பினிடா கொசாயாத் என்ற தலித் பெண்மணி கூறும் போது;

"நாங்கள் புயல் எச்சரிக்கைக்கு பயந்து பள்ளிக்குள் சென்றோம். அங்கே அவர்கள் எங்களை உள்ளே அனுமதிக்க மறுத்தார்கள். நீங்கள் தாழ்த்தப் பட்டவர்கள் என்று கூறி விரட்டினார்கள். நீண்ட நேரம் கெஞ்சிய பிறகு தூரத்தில் ஒரு தனி அறை கொடுத்தார்கள். ஆனால் அந்த அறை புயலின் கோரத்தை தாங்கவில்லை. மேற்கூரை இடிந்து விழுந்தது. கடவுளே எங்களை எப்படியாவது காப்பாறு என்று கடவுளை வேண்டிக் கொண்டிருந்தோம்" என்று கூறி அழுகிறார்.

"நீங்கள் தாழ்த்தப்பட்டவர்கள். உங்களுக்கு அனுமதி இல்லை என்று ஆபத்து நேரத்தில் கூட சாதீய தீண்டாமைகளை கடைபிடித்த அந்த ஜாதி இந்துக்கள் தஞ்சம் புகுந்திருந்த அந்த பள்ளிக் கூடத்தில் தான் "தீண்டாமை பெரும் பாவம்" என்று எழுதியிருந்தது.

- பி.பி.சி. இணையதளம் - மே 17, 2019

ஆக எவ்வளவுதான் புரட்சி பேசினாலும், எதிர்த்து போராடினாலும் தாழ்த்தப்பட்டவர்கள் தங்களது இழிநிலையிலிருந்து வெளியேற முடியாது என்பதே நிதர்சனமான உண்மையாக உள்ளது.

காரணம் இங்கே சாதியக் கட்டமைப்புகளுக்கு எதிராகத்தான் புரட்சி பேசப்படுகிறது. அந்த சாதிய வரணாசிரமக் கொள்கைகளைத் தாங்கி நிற்கக் கூடிய இந்து மதத்தைப் பற்றிக் கண்டுகொள்ளப்படுவதே இல்லை.

சாதீய தீண்டாமைகளின் அடிப்படைக் கட்டமைப்பே இந்து மதம் தான். அதனால் தான் அண்ணல் அம்பேத்கர், "சாதி ஒழிய வேண்டும் என்றால் இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள். எந்த மதம் உங்களை அரவணைக்கிறதோ அந்த மதத்திற்கு செல்லுங்கள்" என்று கட்டளையிட்டார்.

ஆக இந்து மதத்தை விட்டு வெளியேறாமல் வெறும் புரட்சி பேசுவதாலும், எதிர்த்து போராடுவதாலும் எந்த பயனும் இல்லை. மதமாற்றம் மட்டும் தான் ஒரேத் தீர்வு. அதுதான் அண்ணல் அம்பேத்கர் காட்டித் தந்த வழிமுறையும் கூட. இதை இன்றைய தலித் சமூகத்து மக்களும், அந்த மக்களுக்காக போராடக் கூடியவர்களும் பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

## இஸ்லாம் அழைக்கின்றது

இஸ்லாமிய மார்க்கத்தின் இறை வேதமான அல் குர்ஆன் இதுபோன்ற சாதீயக் கொடுமைகளை வேரோடும், வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிகின்றது. இறைவன் கூறுகின்றான்;

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப் பவனாகவே இருக்கின்றான். (அல்குர்ஆன்:4:1)

மனிதர்கள் அனைவரும் ஒரே தாய் தந்தையர்களிடமிருந்து வந்தவர்கள் தான். அவர்களிடத்தில் எந்த ஏற்றத் தாழ்வுகளும் இல்லை என்று பிரகடனப்படுத்தும் இறைவன், அதை நடைமுறை வாழ்க்கையிலும் செயல்படுத்துங்கள் என்றும் கட்டளையிடுகின்றான். இறைவனின் இந்தக் கட்டளையை முஸ்லிம் சமூகம் செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

தோளில் துண்டு போடாதே! நீ தாழ்த்தப் பட்டவன் என்பதற்கு அடையாளமாக அதை உன் இடுப்பில் கட்டு" என்கிறது இந்து மதம். ஆனால் இஸ்லாமோ, "தோளில் துண்டு போடாதே நீ தான் படைப்புகளிலேயே உயர்ந்தவன் என்பதற்கு அடையாளமாக அதை உன் தலையில் கட்டு" என்கிறது.

- "காலில் செருப்பு அணியாதே நீ தழ்ந்தவன் என்பதற்கு அடையாளமாக அதை கையில் எடு" என்கிறது இந்து மதம். "செருப்பை காலில் அணிந்து செல். அதற்காக உனக்கு நன்மை உண்டு என்கிறது இஸ்லாம்!"

- "நீ தொட்ட தண்ணீர் தீட்டு" என்கிறது இந்து மதம். "உன் சகோதரன் வாய் வைத்து நீர் அருந்திய

குவளையில் நீ வாய் வைத்து நீர் அருந்துவதும், உன் சகோதரனுடன் ஒன்றாக அமர்ந்து ஒரே தட்டில் உணவருந்துவதும் உன் இறைவனிடத்தில் நன்மைகளை பெற்று தரும் செயல்கள்" என்று கூறுகிறது இஸ்லாம்."

- "நீயெல்லாம் வேதம் ஓதக் கூடாது. அதை கேட்கக்கூடாது. கேட்டால் பாவம்" என்று கூறுகிறது இந்து மதம். "இறைவனின் வேதத்தை அனுதினமும் ஓது. ஓதவில்லை என்றால் தான் பாவம்" என்கிறது இஸ்லாம்.

- "நீ எல்லாம் இழிபிறவி. எங்களோடு இருக்க நீ தகுதியற்றவன் என்று ஊருக்கு வெளியே சேரிகளில் வாழ வைத்தது" இந்து மதம். "இறைவனின் படைப்பாகிய மனிதர்களில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் கிடையாது. "இறையச்சம்" மட்டுமே இங்கே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். நீ இறையச்சம் மிகுந்தோனாக இருந்தால் உன்னை தலைவனாக ஏற்றுக் கொண்டு உன் கட்டளைகளுக்கு கீழ்படியத் தயார்" என்று கூறுகிறது இஸ்லாமிய சமூகம்.


இப்படி சமத்துவத்தை, சகோதரத்துவத்தை நடைமுறை வாழ்வியலில் கடைபிடித்துக் கொண்டிருக்கும் இஸ்லாமிய மார்க்கத்தில் தலித்கள் தங்களை இணைத்துக் கொள்ளாத வரை, அவர்களால் அந்த இழிநிலையிலிருந்து விடுபடவே முடியாது.

சிந்தியுங்கள். பரியேறும் பெருமாள் திரைப்படம் சொல்லாத அல்லது சொல்லத் தயங்கிய நிரந்தரத் தீர்வு இதோ உங்கள் முன்னாள். முடிவு உங்கள் கையில்.

"(இந்த நோய்க்கு) ஒரே மருந்துதான். அது இஸ்லாம்தான்! இதைத்தவிர வேறு மருந்து இல்லை. இது இல்லாவிட்டால் வேதனைப்பட வேண்டியதுதான். நோய் தீர்ந்து எழுந்து நடக்க இன்றைய நிலையில் இஸ்லாம் என்னும் மருந்துதான். இதுதான் நாடு கொடுக்கும். வீரம் கொடுக்கும். நிமிர்ந்து நடக்கச் செய்யும் மருந்தாகும்." - தந்தை பெரியார்

**த. அஷ்ரஃப் இஸ்லாம்**



**சாதிய தீண்டாமைகளை உடைத்தெரிந்து வெற்றி கண்ட போராளிகளின் வரலாறுகள். வாங்கிப் படியுங்கள். போன்: 81481 28997**




















# தமிழகத்தில் பாகிஸ்தான் பிரிவினை மாநாடு



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

எஸ். ஏ ரஹீம். 1913இல் கும்பகோணத்தில் பிறந்தவர். தீரர் சத்தியமூர்த்தியின் தோழர். உணர்ச்சி பேச்சாளர். 1942-ல் தென்னிந்தியாவில் பாகிஸ்தான் பிரிவினையை எதிர்த்து மாநாட்டை கூட்டினார். மவுலானா உபைதுல்லா சிந்தி, எம். ஒய். ஷரீபு, ஹாஜி முஹம்மது, திருச்சி மூர்தஜா ஹஸ்ரத், கோவை அப்துல் ரஹீம், வலங்கைமான் அப்துல் சத்தார், வேலூர் உபைதுல்லாஹ், மவுலானா அப்துல் ஹக்கீம் சகோதரர்கள், எண்ணற்ற முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

சின்னாளப்பட்டி மாநாடு

இந்த ஊர் திண்டுக்கல் அருகே உள்ளது. இந்தக் கூட்டம் எஸ்.ஏ. ரஹீம் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் இந்திய பிரிவினையை எதிர்த்து எஸ்.ஏ. ரஹீம் தலைமை உரையாற்றினார். 25.4.1942இல் இந்து பத்திரிக்கை “பிரிவினைக்கு தமிழகத்திலிருந்து வந்த முதல் எதிர்ப்பு குரல்” என இதை குறிப்பிட்டிருந்தது.

1942இல் பாகிஸ்தான் பிரிவினையை ராஜாஜி ஆதரித்த போது அதனை எதிர்த்து ஓட்டைப் படகு என்று ஒரு நூலை எஸ்.ஏ. ரஹீம் எழுதினார். எஸ் ஏ ரஹீம் என்றால் கும்பகோணம் தான் தனக்கு ஞாபகம் வருகிறது என்று தீரர் சத்தியமூர்த்தி காந்தி பூங்காவில் பேசினார் என்றால் நாட்டு விடுதலையில் எஸ். ஏ. ரஹீமின் பங்கு நனிவிளங்கும்.

இறந்த பிணவும் இவரது பேச்சைக் கேட்டு உயிர் பெற்று எழும் என்றபடி வாழ்ந்த எஸ்.ஏ. ரஹீமை வெள்ளையர் ஆட்சி திருச்சி, கடலூர், விழுப்புரம் பெல்லாரி, ஷமோகா போன்ற சிறைகளாக மாற்றி மாற்றி மனம் மாற முயற்சித்தும் முயற்சியில் தோற்றனர்.

எஸ்.ஏ.ரஹீம் வழிகாட்டிய உத்தமர், விடுதலை முழக்கம், புத்த அடிச்சுவட்டில் மாவீரன் வரலாறு, கொடியின் கதை போன்ற புத்தகங்களை எழுதியுள்ளார். 1985 இல் காலமானார். 1936இல் டி.டி. கிருஷ்ணமாச்சாரி, ஜமால் முஹம்மது சாஹிப் காங்கிரஸ் கட்சி தேர்தலில் போட்டியிட்ட தேர்தலில் வகுப்புவாதம் விளையாடியதால் காயிதேமில்லத் காங்கிரசிலிருந்து விலகி முஸ்லிம்லீக் காரராக செயல்பட்டார்.

இந்தியா சுதந்திரம் பெற்ற போது சுதந்திர தினத்தில் தான் தேசியக் கொடியை சட்டையில் அணிந்து பிறரையும் சுதந்திர தின விழாவில் பங்கேற்க தூண்டியவர் காயிதேமில்லத்.

1947 இல் செப்டம்பர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காயிதே மில்லத் இந்திய சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்டார். காந்தியடிகளை பாராட்டி சட்டமன்றத்தில் தீர்மானத்தின் மீது பேசிய பேச்சின் சட்டமன்ற குறிப்புகள் காயிதேமில்லத்-இன் தேசப்பற்றையும், சுதந்திர எண்ணத்தையும் இன்றும் பறைசாற்றுகிறது.

பிரிவினை தீர்மானம் அன்றைய காங்கிரஸ் செயற்குழுவில் வந்தபோது திரு ஆச்சரியக்கிருபளானி தலைமையில் பிரிவினையை ஆதரித்து காந்தி உட்பட காங்கிரஸ் தலைவர்கள் பேசினர். மௌலானா அபுல்கலாம் ஆசாத், ஹஜரத் மொஹானி, புருஷோத்தம் தாஸ், தாண்டன் போன்ற சிலரே பிரிவினையை எதிர்த்து பேசினர்.

நாட்டுப் பிரிவினை இந்திய முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். இந்த நாட்டில் பெரும்பான்மை ஊரில் முஸ்லிம்கள் கணிசமான அளவு வசித்தாலும் வேலைவாய்ப்பு கல்வி போன்றவற்றில் உரிமைக்காக இன்றும் போராட வேண்டியவர்களாக இருக்கின்றோம்

இந்திய அரசியல் நிர்ணய சபையில்

முஸ்லிம்களுக்கு தனித்தொகுதி, வேலைவாய்ப்பில் சிறுபான்மையோருக்குரிய மக்கள் தொகை அடிப்படையில் முன்னுரிமை போன்றவை ஹஜரத் மொஹானி, காயிதே மில்லத், கே.டி.எம். அகமது இப்ராஹிம், போக்கர் சாஹிப் போன்றோர் கேட்டபோது, திரு வல்லபாய் பட்டேல் ஒரு கட்டத்தில் நீங்கள் போராடுவதற்கு நாட்டை பிரித்து சென்றாகிவிட்டது. இங்கே இருக்கும் மனம் இல்லாவிட்டால் பாகிஸ்தானுக்கு செல்வது தானே? என பதில் சொன்னபோது,

அரசியல் நிர்ணய சபையில் காயிதே மில்லத் எழுந்து திரு பட்டேலை நோக்கி, இந்த நாட்டில் பிறந்த ஈ, கொசுவைக் கூட வெளியே போ என்று சொல்ல யாருக்கும் இந்த நாட்டில் உரிமை கிடையாது என்று சுடசுட பதில் சொன்னார்கள்.

நேரு பட்டேல் மௌனம் சாதித்தார். இது அரசியல் நிர்ணய சபையில் நடைபெற்ற நிகழ்வாகும். காயிதே மில்லத்தை போன்ற நம் தலைவர்கள் முஸ்லிம் சிறுபான்மையோருக்கு வேலைவாய்ப்பில் பஞ்சாயத்து, முனிசிபல், கார்ப்பரேஷன், சட்டமன்றம், பாராளுமன்றம் உறுப்பினர் போன்றவற்றில் மக்கள் தொகை அடிப்படையில் கிடைக்காமல் வாடியதை சமுதாயம் என்றும் மறக்கக் கூடாது.

பாகிஸ்தான் பிரிவினையை அன்றும் இன்றும் நம்மவர் எதிர்த்தனர். நாடு என்று வந்தால் இந்தியன் இந்தியன் இந்தியன்! பின்பற்றும் மார்க்கம் என்று வந்தால் முஸ்லிம் முஸ்லிம் முஸ்லிம்! இது லண்டனில் வட்டமேஜை மாநாட்டில் மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் மௌலானா முஹம்மதலி ஜவஹர் இங்கிலாந்து ஆட்சியாளர்களுக்கு முன்னாள் இந்து மகாசபை தலைவர் டாக்டர் மூஞ்சேக்கு ஒருகட்டத்தில் பதிலளித்துப் பேசிய பேச்சு.

என்றும் இந்திய நாட்டில் வாழும் இஸ்லாமியர் கொள்கைப் பிரகடனமாக அலட்சியமாகவும் இது இருக்க வேண்டும்.

**வைகறை வெளிச்சம் வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**

# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான்

# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)



அபூ அப்ரஹ்

## இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப்போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். தம் சொந்த மக்களையும் கூட அவர்கள் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன்முதலில் அவர்களை நோக்கி தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நியாபகப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னாபின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள். நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

▼▼▼

*முஜ்ரிதீன் அளித்த பதிலால் கடுங்கோபமுற்ற நூருத்தீன் ஸங்கி அவர்கள் முஜ்ரிதீன் படையினருக்கு எதிராக போர் தொடுக்க ஆயத்தமானார். ஆனால் ஏதோ சில காரணங்களால் அல்லாஹ் அவர்களை பாதுகாத்தான். கடுமையான மழையை அந்தப்பகுதியில் இறைவன் இறக்கினான். இதன் காரணமாக அவர்களுக்கு எதிராக போர் தொடுப்பதை நூருத்தீன் ஸங்கி அப்போதைக்கு தவிர்த்துக் கொண்டார்கள்.*

*அதுவும் நன்மையாகவே முடிந்தது. முஹர்ரம் மாதத்தின் ஆரம்பத்தில் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கும் டமாஸ்கசின் ஆட்சியாளருக்கும் இடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இதற்கு மற்றொரு முக்கிய காரணம் முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்கிடையே போர் செய்து அதன் காரணமாக இரத்தம் சிந்தப்படுவதை நூருத்தீன் ஸங்கி அவர்கள் வெறுத்தார்கள். இந்த ஒப்பந்தத்திற்கு பிறகு அவர்கள் நூருத்தீன் ஸங்கிக்கு கட்டுப்பட்டார்கள். வெள்ளிக்கிழமை தொழுகையில் அவருக்காக பிரார்த்தித்தார்கள். நூருத்தீன் ஸங்கியின் பெயர் அவர்களுடைய நாணயங்களிலும் பொறிக்கப்பட்டது.*

**அஜ்ஸ்ஸாஸ் வெற்றி**

*முஹர்ரம் 5ல் அஜ்ஸ்ஸாசின் ஆட்சியாளர் ஜோஸ்லினை சில துருக்கிய வீரர்கள் சிறை பிடித்துவிட்டதாக செய்திகள் வெளிவரத் தொடங்கின. ஜோஸ்லினுடன் அவருடைய தோழர்கள் சிலரும் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்கள் அலெப்போ கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். இந்த வெற்றியின் காரணமாக பொதுமக்கள் பெருமகிழ்ச்சி யடைந்தனர். நூருத்தீன் அஜ்ஸாஸை நோக்கி படையெடுத்தார். அதை முற்றுகையிட்டார்.*

அந்த கோட்டை மிகுந்த பாதுகாப்பான போதிலும் அல்லாஹ் நூருத்தீனுக்கு வெற்றியை எளிதாக்கினான். அந்த கோட்டை அவருடைய கைவசம் வந்தது. பின்னர் அவர் தன் நம்பிக்கைக்கு உகந்த சிலரை அங்கு நியமித்து விட்டு ரபியுல் அவ்வலில் அலெப்போவிற்கு திரும்பினார்.

**ஜோஸ்லின் சிறைபிடிக்கப்பட்டதில் நூருத்தீன் அவர்களின் தந்திரம்**

ஜோஸ்லின் சிறைபிடிக்கப்படுவதற்கு முன்னர் நூருத்தீன் அவர்கள் தனது படைகளை அஜ்ஸாஸை கைப்பற்றுவதற்காக அதனை நோக்கி கொண்டு சென்றார். அது அலெப்போவிற்கு வடக்கில் இருந்தது. அஜ்ஸாஸின் அருகிலேயே பஷீர் மலை, அய்ன் தப் போன்ற இடங்களும் இருந்தன. இவை அனைத்தும் ஜோஸ்லினின் கட்டுப் பாட்டிலேயே இருந்தன. இந்த இடங்கள் அனைத்தையும் சேர்த்து தான் நூருத்தீன் முற்றுகையிட்டிருந்தார்.

உடனே ஜோஸ்லின் ஃபிரான்குகளின் உதவியை நாடினார். அவர்களும் கடுமையாக போராடி நூருத்தீன் ஸங்கி அவர்களின் படையை பின்வாங்க செய்தனர். இது பல் வகையான போர் தந்திரங்களை கையாளக்கூடிய மிகக்கூர்மையான போர் அறிவு கொண்ட நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய தொய்வு.

ஒருவேளை நூருத்தீன் அவர்கள் இஸ்லாமிய படையை ஒன்று கூட்டினால் ஃபிரான்குகளும் ஜோஸ்லினுடன் ஒன்று கூடி அவர்களை எதிர்ப்பார்கள். இந்த முயற்சியில் வெற்றி கிட்டினாலும் இரு தரப்பிலும் பேரழிவை ஏற்படுத்தும். எனவே, இதைத் தவிர்த்து வேறொரு முறையை கையாள நூருத்தீன் அவர்கள் முடிவு செய்தார்கள்.

அந்த சமயத்தில் துருக்கிய வீரர்கள் சிலர் இருந்தனர். அவர்கள் பணம் தந்தால் தங்களுக்கு யார் அதிக பணம் தருகிறார்களோ அவர்களுடன் சேர்ந்து போர் செய்வார்கள். கிட்டத்தட்ட கூலிப்படையினரை போன்றவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அந்த துருக்கிய படை வீரர்களை வரவழைத்தார். அவர்களுக்கு தேவையான சன்மானத்தை வழக்கினார். பின்னர் அவர்களிடம் ஜோஸ்லினை எப்படியாவது உயிருடனோ பிணமாகவோ பிடித்துத் தந்தால் இதைப்போன்று பன்மடங்கு சன்மானம் வழங்குவதாக அறிவித்தார். அவர்களும் இதனை ஏற்றுக்கொண்டனர். விரைவில் எப்படியாவது ஜோஸ்லினை பிடித்துத் தருவதாக வாக்களித்து விட்டு கிடைக்கப்பெற்ற சன்மானங்களை எடுத்து சென்றனர்.

அப்படிச் சென்ற துருக்கிய கூலிப்படையினர் ஜோஸ்லினை தங்களிடம் வரவழைக்க சில சேட்டைகளை செய்தனர். அவர்கள் எதிர்பார்த்தபடியே ஜோஸ்லின் அவர்களை பிடிக்க வந்தார். ஜோஸ்லினின் படையினர் துருக்கியர்களை கைது செய்து அவர்களுடைய சொத்துக்களை சூறையாடி எடுத்து சென்றனர். அவர்கள் சிறைபிடித்தவர்களில் மிக அழகான மங்கையும் ஒருத்தி. ஜோஸ்லின் அவள் மீது மையல் கொண்டார். நாடு செல்லும் வரை பொறுமையில்லை அவருக்கு. அவளை உடனடியாக அடைய முயன்றார். அவளை பலவந்தமான ஒரு மரத்தின் கீழே வைத்து வன்புணர்வு செய்ய முயன்றார். இவை அனைத்தும் துருக்கிய கூலிப்படையினரின் ஏற்பாடே. பாதுகாப்பின்றி ஜோஸ்லின் இருந்த இந்த நேரம்தான் சரியான சந்தர்ப்பம் என கருதி, அதுவரை காத்திருந்த துருக்கிய கூலிப் படையினர் ஜோஸ்லினை கைது செய்ய முயன்றனர். ஜோஸ்லின் சுதாரித்துக் கொண்டு தன் குதிரையில் ஏறி அவர்களுடன் போரிட்டார். இறுதியில் அவர் துருக்கிய கூலிப்படையினரால் கைது செய்யப்பட்டார். இவர்கள் கூலிப்படையினர் என்பதை ஜோஸ்லினும் நன்கறிவார். எனவே, தந்திரமாக அவர்களுடன் பேரம் பேச தொடங்கினார். தன்னை விடுதலை செய்தால் அவர்களுக்கு மிகப்பெரிய செல்வத்தை பகரமாக தருவதாக கூறினார். அவர்களுக்கு ஆசைக் காட்டினார். கூலிப்படையினர் தானே அவர்கள். அவருடைய ஆசை வார்த்தைக்கு மயங்கினர். இதற்கு ஒப்புக் கொண்டனர். ஜோஸ்லின் கைது செய்யப் பட்டதை இரகசியமாக வைத்துக்கொண்டனர். ஜோஸ்லின் பிணைத்தொகையை கேட்டு ஆளை அனுப்பினார்.

ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்கள் தந்திரக்காரர்களுக்கு எல்லாம் தந்திரக்காரர். அவர் அந்த கூலிப்படையினருக்கு உள்ளேயே உளவுப் பார்க்க ஒரு நபரை ஏற்பாடு செய்திருந்தார். ஒருவேளை ஏதாவது அவசர செய்திகள் என்றால் உடனடியாக தனக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்தால் அவருக்கு தனியாக பெரும் சன்மானம்

வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார். அந்த உளவாளி நேரடியாக நூருத்தீன் ஸங்கி அவர்களை சந்திக்க முயன்றான். ஆனால் அந்த நேரத்தில் நூருத்தீன் ஹிம்சில் இருந்தார். எனவே, அந்த உளவாளி நூருத்தீன் ஸங்கி அவர்களின் உதவியாளரை அலெப்போவில் சந்தித்து என்ன நடந்தது என்பதை கூறினான். நூருத்தீனின் உதவியாளரும் உடனடியாக சில போர்வீரர்களை அவனுடன் அனுப்பி வைத்தார். அவர்கள் அந்த உளவாளியுடன் சென்று துருக்கிய கூலிப் படையினருடன் சண்டையிட்டு பலவந்தமாக அவர்களிடமிருந்து ஜோஸ்லினை தூக்கி வந்தனர். இவ்வாறு தந்திரக்காரர்களுக்கு எல்லாம் தந்திரக்காரராக நூருத்தீன் அவர்கள் தந்திரம் செய்து ஜோஸ்லினை பெரிய உயிரிழப்புகள் ஏதுமின்றி கைது செய்தார்.

ஜோஸ்லின் கைது செய்யப்பட்டது மிகப்பெரிய வெற்றி. ஏனெனில் அவர் முஸ்லிம்களை பொறுத்தவரையில் மிக மோசமான எதிரி. முஸ்லிம்களுக்கு எதிரான போர்களில் எல்லாம் அவர் ஃபிரான்குகளின் முக்கியமானதொரு தலைவர். முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் எதிரான அவருடைய வெறுப்பு மிக பிரபல்யமானது. அவருடைய கைது நடவடிக்கையால் கிறித்தவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள். இப்போது அவர்களின் கையில் இருந்த நிலங்கள் எல்லாம் முஸ்லிம்களின் இலக்கிற்கு எளிதில் ஆளானது. ஜோஸ்லினின் கைதுக்கு பின்னர் ஃபிரான்குகளின் பாதுகாப்பான கோட்டைகளான அய்ன் தப், அஜ்ஸாஸ், அல் பரா கோட்டை, காலித் மலை, கஃப்ர் லதா, மாராஷ் போன்ற இடங்கள் நூருத்தீனின் வசம் வந்தன.

ஒவ்வொரு இடத்தை கைப்பற்றும் போதும் நூருத்தீன் அவர்கள் அதில் போதுமான அளவு வீரர்களையும் ஆயுதங்களையும் கொண்டு நிரப்புவார். அது 10 ஆண்டுகளுக்கு போதுமான அளவிற்கு இருக்கும். ஃபிரான்குகளின் தாக்குதல் களை மனதில் வைத்தே அவர் இவ்வாறு செய்தார். இந்த செயல் அவருக்கு பெரிதும் உதவியது.

இந்த நேரத்தில் ஈராக் மற்றும் குரசான் பகுதியில் இருந்து புனித யாத்திரைக்காக வந்தவர்கள் இறைமறுப்பாளர்களால் சிறை பிடிக்கப்பட்டனர்.

**– இன்ஷா அல்லாஹ் வளரும்.**

### ஓட்டம் பிடிக்கும் முதலீட்டாளர்கள்

# மோடியின் 100 நாட்களில் ரூ.13 லட்சம் கோடி நஷ்டம்!

புதுதில்லி, செப்.11-

நரேந்திர மோடி இரண்டாவது முறையாக பிரதமர் பதவியேற்ற கடந்த 100 நாட்களில் பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் மட்டும் 13 லட்சம் கோடி ரூபாய் வரை இழப்பைச் சந்தித்திருப்பதாக கூறப்படுகிறது.

நரேந்திர மோடி கடந்த 2019 மே 30-ஆம் தேதி, இரண்டாவது முறையாக பிரதமராக பொறுப்பேற்றார்.

அன்றைய நாளில், மும்பை பங்குச்சந்தையில் உள்ள நிறுவனங்களின் மொத்த பங்குகள் மதிப்பு 1 கோடியே 54 லட்சத்து 43 ஆயிரத்து 363 கோடியே 95 லட்சம் ரூபாயாக இருந்தது.

ஆனால், இதுவே செப்டம்பர் 9-ஆம் தேதி நிலவரப்படி, 13 லட்சத்து




28 ஆயிரத்து 47 கோடியே 56 லட்சம் ரூபாய் சரிந்து, 1 கோடியே 41 லட்சத்து 15 ஆயிரத்து 316 கோடியே 39 லட்சம் ரூபாயாக குறைந்துள்ளது.

மே 30, 2019 முதல் மும்பை பங்குச் சந்தைக் குறியீடான சென்செக்ஸ்™ம் 2,687 புள்ளிகள் சறுக்கியுள்ளது.

அதாவது, மோடியின் 100 நாள் ஆட்சியில் 6.74 சதவிகிதம் குறைந்துள்ளது. தேசிய பங்குச்சந்தைக் குறியீடான நிப்டி 943 புள்ளிகள் வழுக்கி 7.89 சதவிகிதம் அளவிற்கு சரிந்துள்ளது.

ஆட்டோமொபைல் துறையில் நிலவும் மந்தநிலை, மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சி குறைவு ஆகியவையே பங்குச் சந்தைகளை பாதித்துள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால், 2018-19 நிதி ஆண்டின் முதல் காலாண்டிலேயே ஜிடிபி வளர்ச்சி எதிர்பார்த்ததைக் விட, 5 சதவிகிதம் என்று குறைந்ததும், முதலீட்டாளர்கள் ஓட்டம் பிடித்ததன் பின்னணியில் உள்ளதாக, 'ஆக்சிஸ் செக்யூரிட்டீஸ்' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அருண் துக்ரல் குறிப்பிட்டுள்ளார்.



# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்? 15

நான்(கட்டுரையாளர்) ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது என்னுடைய வகுப்பில் இரண்டே பேர் தான் முஸ்லிம்கள். ஒருவன் பெயர் அப்துல்லாஹ். இன்னொருத்தி முபீனா பேகம்.

அப்போது ஒருமுறை விளையாட்டு பிரிவின் போது எங்களுக்கு “யோகா” எடுக்கப்பட்டது. அந்த யோகா பயிற்சியில் அப்துல்லாஹ் மற்றும் முபீனா பேகம் ஆகிய இருவரையும் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆனால் அவர்களுக்கு சேர வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. இதனால் பள்ளி அறைக்கு சென்று முபினா பேகம் அழுதுக் கொண்டிருந்தாள். பயிற்சி முடிந்து எல்லோரும் வகுப்பறைக்கு வந்து பார்த்த போது அவள் சோகமாக உட்கார்ந்திருந்தாள். யாரிடமும் பேசவில்லை.

இதை கவனித்த எங்களது வகுப்பாசிரியர் அவளிடம் என்ன நடந்தது என்று கேட்டார். அதற்கவள் நடந்ததை கூறினாள். நேராக விளையாட்டு ஆசிரியரை வரவழைத்து அனைவர் முன்னிலையிலும் ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டார்.

அதற்கவர், “பொதுவாக முஸ்லிம்கள் ஐந்து வேளை தொழக்கூடியவர்கள். அந்த தொழுகையே ஒரு வகையான யோகா தான். அதை அவர்கள் தினசரி செய்து வருவதால் முஸ்லிம்களுக்கு பிரத்யேகமான பயிற்சி எதுவும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அதனால் தான் அந்த இரண்டு முஸ்லிம் மாணவர்களையும் பயிற்சிக்கு வேண்டாம் என்று சொன்னேன். அது உங்கள் மனதை காயப்படுத்தியிருந்தால் மன்னித்து விடுங்கள்” என்று கூறினார்.

இது என்னுடைய(கட்டுரையாளர்) பள்ளி நாட்களில் நடந்த மறக்க முடியாத நினைவுகளில் ஒன்று.

பொதுவாக நான்(கட்டுரையாளர்) படித்தக் காலங்களில் பள்ளிப்பாடங்களில் பெரும்பாலும் இஸ்லாமிய மன்னர்கள் பற்றி தவறாகத் தான் சித்தரித்திருப்பார்கள். “ஆரியர்கள் வருகை என்றும் முகலாயர்கள் படையெடுப்பு” என்றும் லாவகமாக பிஞ்சு நெஞ்சங்களில் நஞ்சை விதைத்திருப்பார்கள். (இப்போதைய பாசிஸ்டுகள் ஆட்சியில் நேரடியாகவே இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் இழிவுப்படுத்தும் பாடங்கள் போதிக்கப்படுகின்றன.)

அவைகளை எல்லாம் படிக்கும் எங்களுக்கு முஸ்லிம் மன்னர்கள் மீதான, அவர்களின் ஆட்சி முறைமைகள் மீதான வெறுப்புகள் இருக்கவே செய்யும். இது ஒருபுறமிருக்க நம் தமிழ் படங்களில் சில ஹீரோக்கள் ஒவ்வொரு படத்திலும் ஒரு தாடி வைத்த, தொப்பி போட்ட தீவிரவாதியை பிடித்து தங்கள் ஹீரோயிசத்தை நிரூபித்துக் காட்டிக் கொண்டே இருப்பார்கள். இப்படியெல்லாம் விதைக்கப்படும் இதுபோன்ற வெறுப்புகள் அப்படியே சமகால முஸ்லிம்கள் மீதும் பாயும்.

அதனால் தான் முஸ்லிகள் என்றாலே, இஸ்லாம் என்றாலே ஒரு விதமான பய உணர்வு நிறைய பேருக்கு ஏற்படுகின்றது.

(இதன் பின்னால் உள்ள சூழ்ச்சிகளை புரிந்துக் கொள்ள வைகறை வெளிச்சத்தின் சிலுவைப் போர் 2.0 தொடரை ஆரம்பத்தில் இருந்து வாசியுங்கள்).

ஆனால் அவைகளையெல்லாம் கடந்து இஸ்லாம் அப்படி என்னதான் போதிக்கின்றது என்று ஆய்வு செய்யும் மக்கள் இஸ்லாத்தின் உண்மைத் தன்மைகளை அறிந்துக் கொண்டவுடன் இரண்டு செயல்களை தாமதமின்றி செய்வார்கள். ஒன்று இஸ்லாத்தை உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு அதைப் பின்பற்றுவார்கள். இரண்டு தான் கண்டுபிடித்த இஸ்லாத்தின் உண்மைத் தன்மைகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் பணிகளில் ஆர்வமாக ஈடுபடுவார்கள்.

அப்படி இஸ்லாம், முஸ்லிம்கள் என்றாலே ஒருவிதமான பயத்தோடு இருந்த சகோதரி சுபஸ்ரீ - ஆலியாவாக மாறிய கதைக்குள் போவோம் வாருங்கள்....

# சுபஸ்ரீ (எ) ஆலியா

என்னுடைய பெயர் ஆலியா. என்னுடைய பழையப் பெயர் சுபஸ்ரீ. நான் சிறு வயதிலிருந்தே கிறுஸ்தவ மதத்தை பின்பற்றி வந்தேன். நான் விஙிகி படித்துள்ளேன். எனக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன் இஸ்லாம் பற்றி எதுவுமே தெரியாது. இஸ்லாம் என்றாலே எனக்கு பயமாக இருக்கும். தாடி, தொப்பி அணிந்தவர்களை பார்க்கும் போதெல்லாம் எனக்கு பயமாக இருக்கும்.

### ஔரங்க சீப் கொலைகாரரா?

பள்ளிப் பாடங்களில் இஸ்லாமிய ஆட்சிக் காலங்களைப் பற்றிப் படிக்கும் போது கூட ஔரங்கசீப் அவர்களுடைய ஆட்சியில் அவர் தன் அப்பாவை சிறையில் அடைத்து விடுவார். உடன் பிறந்தவர்களை எல்லாம் கொலை செய்து விட்டுத் தான் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவார். என்றெல்லாம் படித்திருக்கின்றேன். அவற்றையெல்லாம் படிக்கும் போது எனக்கு பயமாக இருக்கும். இஸ்லாமிய ஆட்சி என்று கேள்வி பட்டாலே பயமாக இருக்கும். இன்னும் "பம்பாய்" போன்ற படங்களை எல்லாம் பார்த்த போது "இஸ்லாம் ஒரு தீவிரவாத மார்க்கம்" என்ற பயம் எனக்குள் குடிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் நான் பன்னிரெண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது எனக்கு ஒரு முஸ்லிம் தோழி கிடைத்தாள். அவள் மிகவும் அன்பாக நடந்து கொள்வாள். எல்லோரிடமும் மரியாதையாக நடந்துக் கொள்வாள். சிறிய விஷயத்திற்கு கூட பயப்பிடுவாள். பள்ளியில் கொடுக்கப்பட்ட வீட்டுப் பாடங்களை எழுதவில்லை என்றால் அதுபற்றி பொய் சொல்லக் கூட அச்சப்படுவாள். அப்போது நான் அவளிடம் கேட்பேன். ஏன் இவ்வளவு சின்ன விஷயத்திற்கு கூட இப்படி பயப்பிடுகிறாய் என்று. அதற்கவள், "சிறிய பாவமாக இருந்தாலும் அல்லாஹ் தண்டிப்பான்" என்று கூறுவாள். அதைக் கேட்கும் போது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கும்.

இந்த நிலையில் ஒரு நாள் எங்களுடைய தமிழ் வாத்தியார் "இறை பக்தி"யைப் பற்றி ஒரு முறை வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார். அப்போது முஸ்லிம்களின் நோன்பு பற்றி விளக்கிக் கூறினார். அதையெல்லாம் கேட்கும் போது எனக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது.

### சகோதரி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுதல்

இப்படியே என்னுடைய பள்ளிப் படிப்பு முடிந்து, கல்லூரிப் படிப்பும் முடிந்தது. இந்த நிலையில் என்னுடைய அக்கா சில காரணங்களுக்காக இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிமாக மாறிவிட்டாள். அப்போது வீட்டில் ஒரே பிரச்சனையாக இருந்தது. அவள் முஸ்லிமாக மாறியது எங்கள் அப்பாவிற்கு பிடிக்கவில்லை. அவள் பர்தா அணிவதும் எங்கள் அப்பாவிற்கு பிடிக்கவில்லை. ஆனாலும் அவள் விடாப்பிடியாக இஸ்லாத்தில் இருந்தாள்.

அதன் பின் இஸ்லாமிய முறைப்படியே ஒரு முஸ்லிம் ஆண்மகனைத் திருமணம் செய்துக் கொண்டாள். அதையும் எங்கள் தந்தை விரும்பவில்லை. இப்போது கூட அவள் மீது என் தந்தைக்கு வெறுப்புண்டு.

### அல்லாஹ்வா? இயேசுவா?

அக்கா என்னிடம் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறுவாள். ஆனால் நான் காது கொடுத்துக் கேட்கமாட்டேன். அவள் அல்லாஹ் தான் உண்மையான இறைவன் என்று கூறுவாள். நான் இல்லை "இயேசப்பா" தான் உண்மையான கடவுள் என்று வாக்குவாதத்தில் ஈடுபடுவேன்.

அவள் என்னிடம் மிகவும் மென்மையான முறையில் நடந்துக் கொள்வாள். ஆனால் நான் அவளிடம் கோபமாக கத்திவிடுவேன். அவள் அமைதியாக சென்று விடுவாள். என் அக்காவின் கணவர் கூட எனக்கு இஸ்லாத்தைப் பற்றி சொல்லுவார். நிறைய இஸ்லாம் சம்மந்தமான காணொளிகளை செல்போனில் பகிர்வார். ஆனால் நான் அதை எதையுமே பார்க்க மாட்டேன்.

இப்படி ஒரு நாள் அன் அக்கா என்னிடம் அல்லாஹ்வைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தாள். நான் அவளிடம் “இயேசப்பா” தான் உண்மையான கடவுள் என்று பதில் கூறிக் கொண்டிருந்தேன். அப்போது அவள் பைபிளின் ஒரு வசனத்தைக் குறிப்பிட்டுக் காட்டினாள். அந்த வசனம் “இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படும் போது, யாரையோ அழைத்து துஆ கேட்பது போன்று இருக்கும்”( மத்தேயு 27- 45-46). இங்கு இயேசு தான் உண்மையான இறைவன் என்றால் அவர் யாரிடம் துஆ(பிரார்த்தனை) கேட்கிறார்? என்று என் அக்கா என்னிடம் கேட்டாள். இது என்னை சிந்திக்க வைத்தது.

**முஸ்லிம்களின் அரவணைப்பு, பழக்கவழக்கங்கள்**

இந்த நிலையில் என் அக்காவிற்கு பிரசவ நேரத்தில் உதவி செய்ய யாருமில்லாத சூழ்நிலையில் அக்கம் பக்கத்தில் இருந்த முஸ்லிம்கள் ஓடோடி வந்து உதவி செய்தார்கள். அதையெல்லாம் பார்த்த போது எனக்கு இஸ்லாம் மேல் ஒரு ஈடுபாடு வர ஆரம்பித்தது.

என்னுடைய அக்காவுடைய கணவர் என்னை ஏறெடுத்துக் கூட பார்க்க மாட்டார். என்னிடம் பேச நேரிட்டால், முகத்தை கீழே வைத்துக் கொண்டு தான் பேசுவார். இதையெல்லாம் கவனித்த நான் இந்த கண்ணியம், மறியாதை எல்லாம் இஸ்லாம் மார்க்கம் மூலமாகத்தான் வருகிறது என்பது எனக்கு புரிந்தது.

ஆனாலும் எனக்கு நிறைய சந்தேகங்கள் இருந்தது. இஸ்லாத்தில் பெண்களுக்கு அவ்வளவாக உரிமைகள் இல்லை. இஸ்லாம் பெண்களை தாழ்வாகவே நடத்துவதாக சந்தேகம் இருந்தது. இதை என்னுடைய அக்காவிடம் கேட்டேன். அவள் என்னை ஒரு இஸ்லாமிய அழைப்பு மையத்திற்கு அழைத்துச் சென்று அங்கிருக்கும் சகோதர, சகோதரிகளிடம் அறிமுகப்படுத்தி வைத்தாள். அவர்களிடம் என்னுடைய எல்லா சந்தேகங்களையும் கேட்டேன். அவர்கள் எனக்கு பொறுமையாக விளக்கிக் கூறினார்கள்.

அதன் பின் இஸ்லாம் சம்மந்தமான நிறைய புத்தகங்களை படித்தேன். படித்த போது எனக்கு புரிந்து விட்டது அல்லாஹ் தான் உண்மையான இறைவன் என்று. இதுப்பற்றி மேலும் அறிந்து கொள்ள எனக்கு ஆர்வமாக இருந்தது. அதனால் நான் ஒரு இஸ்லாமிய மத்ரஸாவில் சென்று சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன்.

**குர்ஆனும் – விஞ்ஞானமும்**

அங்கு நான் குர்ஆன் கூறும் விஞ்ஞானம் பற்றியெல்லாம் படித்தப் போது எனக்கு வியப்பாக இருந்தது. “இரு கடல்களும் கலக்காதவாறு திரையிடப்பட்டுள்ளது, சூரியன் விளக்காகவும், சந்திரன் ஒளியாகவும் படைக்கப்பட்டுள்ளது, உமது அன்னையரின் கருவறையில் மூன்று அறைகளுக்குள் ஒன்றன் பின் ஒன்றாக உங்களை வடிவமமைத்துக் கொண்டிருந்தோம்” போன்ற பள்ளிக் காலங்களில் படித்த விஞ்ஞான உண்மைகளையெல்லாம் குர்ஆனில் படிக்கும் போது வியப்பாக இருந்தது. என்னுடைய இறைநம்பிக்கையும் அதிகரிக்க ஆரம்பித்தது.

**வரலாறு**

அதன் பின் நிறைய வரலாறுகளை குர்ஆனில் படித்தேன். “பிர்அவ்னின் உடலை பின் வரும் சந்ததிகளுக்கு அத்தாட்சியாக ஆக்குவோம்” என்ற வசனம் படித்தேன். அதேப்போல் இன்றளவும் பிர்அவனின் உடல் பாதுகாக்கப்பட்டு அத்தாட்சியாக உள்ளது. இதையெல்லாம் படிக்க படிக்க எனக்கு இஸ்லாத்தின் மீது ஆர்வம் மிகுதியானது. அல்லாஹ்வின் மீதான ஈமான் உறுதியானது. இஸ்லாத்தை உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கு நன்மைய நாடியுள்ளான். நான் இதுவரை 72 துஆக்களை மனனம் செய்துள்ளேன். 35 சூராக்களை முடித்துள்ளேன். மத்ரஸாக்கு சென்ற சில தினங் களிலேயே இதுவெல்லாம் எனக்கு சாத்தியப் பட்டது. இதுவெல்லாம் அல்லாஹ் எனக்கு நாடியதால் தான் நடந்தது.

எனக்கு ஏதாவது மன வருத்தம் இருக்கும் போது, அப்போது நான் தொழும் போது, சஜ்தா செய்யும் போது என்னுடைய மனம் அமைதியாகி விடும். அதை நான் உணர்ந்திருக்கின்றேன். அல்லாஹ் எப்போதும் என்னுடன் இருக்கின்றான் என்று எனக்கு புரிந்து விட்டது.

என்னைப் போலவே சகோதரச் சமூகத்தைச் சார்ந்தவர்களும் இஸ்லாமிய மார்க்கத்தை புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம். என்னுடைய குடும்பம் முழுவதும் இந்த இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எனக்காக பிரார்த்தியுங்கள். அஸ்ஸலாம்.

ஆதாரம்:
<https://www.youtube.com/watch?v=PUghomUop2s&t=42s>

**த. அஷ்ரஃப் இஸ்லாம்**

**தங்களது கருத்துகளை இந்த வாட்ஸ் ஆப் எண்ணில் பகிருங்கள்**
**9092723753**




# தேர்தல் ஆணையம் மக்களவை தேர்தலுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆதாரப்பூர்வமான தகவல்களை ஏன் இன்னும் பதிவேற்றம் செய்யவில்லை? - தி குவிண்ட்

2019ம் ஆண்டின் மக்களவைத் தேர்தலுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆதாரப்பூர்வமான தகவல்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையப் பக்கத்தில் நீங்கள் தேடினால் ஏமாந்து போவீர்கள். அது உங்களுக்கு கிடைக்காது.

ஒவ்வொரு தொகுதியிலும் எத்தனை வாக்குகள் பதிவாகின? எண்ணப்பட்ட வாக்குகள் எத்தனை? என்ற கேள்விகளுக்கும் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிலில்லை.

இப்போது பதிவிடப்பட்டுள்ள தகவல்கள் தற்காலிகமான தகவல்கள் என்ற அடைமொழியோடு தான் அங்கு காணப்படும். அதாவது இது அங்கீகரிக்கப்பட்ட ஆதாரப்பூர்வமான தகவல் கிடையாது. அப்படி எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதே இதன் பொருள்.

தேர்தல் முடிந்து நான்கு மாதங்களான பின்னரும் உறுதியான தகவல்களை பதிவேற்ற இயலவில்லை என இதற்கு பொருள் கொள்ளலாம்.

பொதுவாக வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட உடனே தகவல்கள் ஆணையத்தின் இணையதளத்தில் தற்காலிகமான தகவல்கள் என்ற அடைமொழியோடு பதியப்படும். அதன் பின்னர் ஒருசில நாட்களில் தகவல்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு தவறுகள் இல்லை என உறுதிபடுத்தப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றப்படும். இதனை அங்கீகரிக்கப்பட்ட ஆதாரப்பூர்வமான தகவல் என்ற அடை மொழியோடு ஆணையம் வெளியிடும். ஆனால் தற்போது நான்கு மாதங்கள் கழிந்து விட்ட நிலையிலும் தகவல்களை இந்திய தேர்தல் ஆணையத்தால் சரிபார்க்கப்பட்டு உறுதிபடுத்த முடியவில்லை என்றே தோன்றுகிறது.

ஜூன் 1 2019ல் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் இந்திய தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்தும் அதிகாரிகளிடமிருந்து இறுதி அறிக்கைகளை கேட்டிருப்பதாக தெரிவித்திருந்தது. தேர்தல் நடத்தும் அதிகாரிகளை வாக்கு எண்ணிக்கை முடிந்த 15 நாட்களுக்குள் அந்த இறுதி அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தியிருந்தது. 23 மே 2019இல் அனைத்து தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிட்டதால் இந்திய தேர்தல்

ஆணையம் தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் அறிக்கைகளை ஜூன் 10ம் தேதிக்குள் பெற்றிருக்க வேண்டும். அப்படி பெற்ற தகவல்களை ஏன் இன்னும் அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை என்பது ஆச்சரியமான ஒன்று என்று இந்த ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ள தி குவின்ட் பத்திரிகை கேள்வி எழுப்பியுள்ளது.

ஜூன்,1 இல் இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்ட பத்திரிகை செய்தியில் ஆதாரப் பூர்வமான அறிக்கைகள் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் வெளியிடப்படும் என்று தெரிவித்திருந்தது. ஆனால் வேண்டுமென்றே இந்த பத்திரிகை செய்தி பதிவேற்றம் செய்யப்படவில்லை. நான்கு மாதங்கள் ஆன பின்னரும் ஆதாரப்பூர்வமான தகவல்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்திலோ வேறு எங்குமோ வெளியிடப் படவில்லை.

முக்கியமான விஷயம் என்னவென்றால் 31 மே 2019இல் குவிண்ட் பத்திரிகை ஒரு ஆய்வறிக்கையை வெளியிட்டிருந்தது. ஈ.வி.எம் எனப்படும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்கு களுக்கும் எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் வித்தியாச மிருப்பது அதில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

அதற்கு பதிலளிக்கும் விதமாகத் தான் இந்திய தேர்தல் ஆணையம் தன்னுடைய பத்திரிகை அறிக்கையில் இந்த தகவல்கள் தற்காலிகமானவை. இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் முறையான அங்கீகரிக்கப்பட்ட தகவல்கள் வெளியிடப்படும் என தெரிவித்திருந்தது. ஆனால் நான்கு மாதங்களுக்கு பின்னரும் இன்னமும் உறுதிப் படுத்தப்பட்ட முறையான அங்கீகரிக்கப்பட்ட தகவல்களை இந்திய தேர்தல் ஆணையத்தில் தேடிப்பார்த்தால் கிடைக்கவில்லை.

இதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால் குவிண்ட் பத்திரிகை இந்த தகவல் முரண்பாட்டை அதாவது பதிவான வாக்குகளுக்கும் எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் உள்ள வித்தியாசத்தை சுட்டிக் காட்டிய சில தினங்களுக்குள் அந்த தகவல்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் இருந்து நீக்கப்பட்டன. பதிவான வாக்குகளும் எண்ணப்பட்ட வாக்குகளும் சரியாக இருக்கும் படியான தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டன. ஆனால் அவை உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் என்ற அடைமொழியோடு இல்லை. மாறாக தற்காலிகமான தகவல்கள் என்ற அடை மொழியோடு.

இப்போது உள்ளது தான் இறுதியான உறுதியான தகவல்கள் என்றால் பின்வரும் கேள்விகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம் பதில் சொல்ல வேண்டும் என்று குவிண்ட் பத்திரிகை கேள்விகளை எழுப்பியுள்ளது.

1. ஏன் இன்னமும் இந்த தகவல்கள் தற்காலிகமான தகவல்கள் என குறிப்பிடப் பட்டுள்ளது?

2. ஏன் இந்திய தேர்தல் ஆணையம் பாராளுமன்ற தொகுதிகள் வாரியாக தகவல்களை அளிக்காமல் மாநிலம் வாரியாக மட்டும் தகவல்களை பதிவேற்றம் செய்துள்ளது?

3. 370 பாராளுமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குகளுக்கும் எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் வித்தியாசம் வந்தது ஏன்?

4. ஏன் இன்னும் இறுதி தகவல்களை இந்திய தேர்தல் ஆணையம் பதிவேற்றம் செய்யவில்லை? நிறுத்தி வைத்திருப்பதற்கான காரணம் என்ன?

5. உலகத்தின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் மக்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட ஆதாரப் பூர்வமான தகவல்கள் கிடைக்கவிடாமல் தடுப்பது யார்? ஏன்?

6. இதற்கு காரணம் அரசு மட்டுமா அல்லது அதற்கும் மேல் யாராவதா?

இந்திய தேர்தல் ஆணையத்தை நோக்கி குவிண்ட் பத்திரிகை எழுப்பியுள்ள இந்த கேள்விகள் எதற்கும் பதிலில்லை.

**நன்றி - தி குவிண்ட்**

<https://www.thequint.com/news/india/ec-not-making-authentic-lok-sabha-election-2019-results-public?

**தங்களது கருத்துகளை**
**+91 9092723753**
**என்ற கைபேசிக்கு**
**வாட்ஸ்ஆப்-இல் பகிரவும்**



# நீதியின் குரல்

# வீரமங்கை தகில் ரமணி

1975 களில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ஒரு நெருக்கடி காலப் பிரகடனத்தைச் செய்தார். அவருடைய பதவிக்கு ஏற்பட்ட நெருக்கடியைத் தான் அவர் நாட்டுக்கே ஏற்பட்ட நெருக்கடியாகக் காட்டினார்.

அந்த நெருக்கடி காலத்தில் அவரை எதிர்த்த எல்லோரையும் சிறைபிடித்தார். சித்திரவதைச் செய்தார். அதில் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அவர்களின் குடும்பம், இப்படி எல்லோருமே பெரிதாக பாதிக்கப்பட்டார்கள். திராவிட முன்னேற்ற கழகத்தவர்கள் அனைவரும் பெரிய பாதிப்புகளுக்கு ஆளானார்கள்.

பின்னர் நெருக்கடி கால அநியாயங்களை விசாரித்து அறிக்கை தர நீதிபதி எம்.எம். இஸ்மாயில் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

நீதிபதி எம்.எம். இஸ்மாயில் அவர்கள் எதையும் ஆழமாக ஆய்வு செய்பவர். அவரும் நெருக்கடி கால கொடுமைகளை ஆய்வு செய்து அறிக்கை தந்தார். அந்த அறிக்கை இந்திரா காந்தியின் கொடுமைகளை ஊரறியச் செய்தது.

நெருக்கடி கால பிரகடனத்திற்குப் பின் இந்திரா காந்தி ஆட்சியை இழந்தார். ஆனால் விரைவிலேயே மீண்டும் ஆட்சியைப் பிடித்தார். ஆட்சிக்கு வந்தவுடன் தன் பழிவாங்கும் படலத்தை நீதிபதி எம்.எம். இஸ்மாயில் அவர்களை கஷ்மீர் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்தார். ஆனால் அதை உச்ச நீதிமன்றத்தின் வழியாக செய்தார்.

நீதித்துறையின் செயல்பாடுகளில் அரசின் தலையீடுகள் கூடாத செயல் என தனது தலைமை நீதிபதி தமிழ்நாடு பதவியை இராஜினமா செய்தார். இதனை உலகமே புகழ்ந்தது அப்போது The Hindu ஆங்கில இதழ் நீதிபதி எம்.எம். இஸ்மாயில் என்றொரு தலையங்கத்தை எழுதியது. இப்போது நீதிபதி தகில் ரமணி விஷயத்தில் அது இல்லாது போலும்.

அதேபோல் தகில் ரமணியின் இராஜினாமாவும் இந்திய நீதித்துறையில் பெருமை சேர்ப்பது. ஆனால் அதை சக நீதிபதிகளே பெருமையாகக் கருதிடவில்லை என்பதும் உச்ச நீதிமன்றம் அதற்கு “ஏதோ உபதேசம்” செய்வது போல் விளக்கங்கள்




சொன்னதும் நீதித்துறையில் அரசியல் தலையீடுகளைத் தாராளமாக அனுமதிப்போம் என்பது போலும் இருக்கின்றது.

இந்த நாட்டின் ஒற்றுமையிலும், ஒருமைப் பாட்டிலும் நம்பிக்கைக் கொண்டவர்களின் எண்ணிக்கை ஏராளம். அவர்கள் அனைவரும் தகில் ரமணியைப் பாராட்டியே இருக்கின்றார்கள். இதில் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி லோகூர் அவர்கள் நேரடியாகவே உச்ச நீதிமன்ற நீதிபதி குழுமத்தை தாக்கி இருந்தார் இங்கிதமான சொற்களால். (ஆதாரம்: Frontline: Oct 11, 2019)

**தகில் ரமணிக்கு ஏன் இந்தத் தண்டனை**

2002 குஜராத் கலவரத்தின் போது ஒரு பெண் தன் மொத்தக் குடும்பத்தை இழந்தார். பலமுறை சங்கப்பரிவாரத்தினரால் கற்பழிக்கப்பட்டார். தன் குழந்தையை தன் கண் முன்னாலேயே கொலை செய்தார்கள். அத்தனையையும் தாண்டி கிழிந்த ஆடைகளோடு கற்களுக்கிடையேயும், பாறைகளுக்கிடையேயும் ஒழிந்தே வாழ்ந்தாள். இறுதியில் எப்படியோ உயிரைத் தக்க வைத்துக் கொண்டாள். இந்த சோகக் கதையை வைகறை வெளிச்சம் வாசகர்களுக்குத் தந்திருக்கின்றோம்.

இந்த நிலையில் இந்தியாவில் வகுப்புவாதத்தை ஒழித்தே ஆக வேண்டும். என வீறு கொண்டெழுந்தாள் ஒரு வீராங்கனை. அவள் தான் டீஸ்டா செட்டல்வாட்.

தனது நீதிக்கான போரில் பல்கிஸ் பிவி-ஐயும் இணைத்தாள். தான் மேற்கொண்ட அயராத உழைப்பின் வழி சங்கப்பரிவார கொலை வெறி கூட்டத்திற்கு தண்டனைகளைப் பெற்றுத் தந்தார்.

2002 இல் தொடங்கிய இந்த நீதிக்கான நீண்ட பயணத்தில் 15 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் நீதியைப் பெற்றிட முடிந்தது. இந்தப் பதினைந்து ஆண்டுகளுக்குள் நீதிமன்றங்கள் பல பாசிஸ்டுகளின் காரிய கூடங்களாக மாறிவிட்டன. எனினும் நீதியின் மீதும் மனசாட்சியின் மீதும் நம்பிக்கை உள்ள நீதிபதிகள் பலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்கள் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் நீதியின் மீதே நிலைத்து நிற்கின்றார்கள். அவர்களில் ஒருவர் தான்





அடங்குவர்.

எங்கள் சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர்களுக்கு தண்டனை அளித்தவர்களை நாங்கள் வாழ விடமாட்டோம் என கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படும் மத்திய பாசிச அரசு அவரை பதவி இறக்கம் செய்து கண்டித்தது. நாட்டிலேயே மூத்த நீதிபதியான அவரை நாட்டிலே உள்ள சிறிய நீதிமன்றத்திற்கு மாற்றினார்கள்.

தன்மானத்தோடு நீதி அரசர் எஸ்.எம். இஸ்மாயில் அவர்கள் பாணியில் இராஜினாமா செய்தார். நீதித்துறையின் மானத்தைக் காப்பாற்றினார். ஆனாலும் விடமாட்டோம் என மத்திய உளவுத்துறை ஐ.பி. வழியாக அறிக்கை பெற்று அவர் மீது சொத்து முறைகேடு வழக்குத் தொடர உள்ளார்கள்.

வீரமங்கை தகில் ரமணி.

பில்கிஸ் பிவி வழக்கில் கீழ் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட 7 குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனையை உறுதி செய்தார். இதில் சாட்சியங்களை அழித்த காவல் துறையினரும் பல்கிஸ் பிவி கற்பழிக்கப் படவில்லை எனப் பொய் சாட்சியங்களை மருத்துவ சான்றிதழாகத் தந்த மருத்துவர்களும் அதையும் அவர் வீரத்தோடு எதிர் கொள்வார். வெல்வார். அவருக்கு தமிழ்நாடு வழக்கறிஞர்களும், மக்களும் இதுவரை ஆதர தெரிவித்துள்ளார்கள். தொடர்ந்து துணை நிற்பார்கள். அவருக்காக நிற்பது நீதிக்கு துணை நிற்பதாகும். பாசிசத்தை மாய்ப்போம். பாரதத்தை மீட்போம்.

**எம்.ஜி.எம்.,**





# இந்தி வேண்டாம்! தமிழில் விருது கொடுங்கள்!



தமிழ் மொழிக்கான தேவையை அழுத்தமாகப் பதிவு செய்யவேண்டிய சூழலில் இருக்கிறோம். அண்மையில் கூட 'ரயில்வே கோட்ட கட்டுப்பாட்டு அதிகாரிகளை நிலைய அதிகாரிகள் தொடர்புகொள்ளும்போது ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே பேச வேண்டும்' எனச் சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டது. பின் வாபஸ் பெறப்பட்டது. மும்மொழிக் கொள்கைக்கு எதிராகவும் தமிழகம் கொந்தளித்தது. 'இந்தி எதிர்ப்புக்கு' எதிராகவும் தமிழ் மொழியின் அவசியத்தையும் பறைசாற்றும் மாநிலங்களில் முக்கியமானது தமிழகம்.

## சாகித்ய அகாடமி மேடையை அதிரவைத்த குளச்சல் முகமது யூசுஃப்

அந்தவகையில், 2018 ம் ஆண்டின் மொழி பெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருது மொழி பெயர்ப்பாளர் குளச்சல் முகமது யூசுஃப்க்கு வழங்கப்பட்டது. வட கிழக்கு மாநிலமான திரிபுராவின் தலைநகர் அகர்தலாவில் 14-6-2019 அன்று இந்நிகழ்வு நடை பெற்றது. விருதுகளை சாகித்ய அகாடமி தலைவர் வழங்கினார். இந்த விருதை பெற்றுக்கொண்ட குளச்சல் யூசுஃப், 'விருதில் பொறிக்கப்பட்ட இந்தி எழுத்துகளை





மாற்றி தமிழில் வழங்கும்படி' கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக அவரிடம் பேசினோம். '13-ம் தேதி திரிபுரா சென்றேன். 14 அன்று எனக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. 15-ம் தேதி அவரவர்களின் மொழிபெயர்ப்பு அனுபவங்கள் மற்றும் படைப்பனுபவங்கள் குறித்து கட்டுரை எழுதச் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து கவி அரங்கம் நடைபெற்றது. இந்தக் கவி அரங்கத்துக்கு தமிழகத்திலிருந்து, கவிஞர் சல்மாவும் வந்திருந்தார். விருது கொடுக்கப் பட்டதும் அதைப்பார்த்தேன். அதில் இந்தி எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த விருதை என் வீட்டில் வைத்துக்கொண்டேன் என்றால், எனக்கும் இந்தி தெரியாது. என் குடும்பத்தில் யாருக்கும் இந்தி தெரியாது. என் நண்பர்களுக்கும் இந்தி தெரியாது.

இந்தியில் எழுத்துகளைப் பார்த்ததும், எனக்கு இந்தி தெரியாது தமிழில் பொறித்துக் கொடுக்கவேண்டும் என்று பொறுப்பாளர்களிடம் கொடுத்தேன். அவர் அதை வாங்கிக்கொண்டு, 'கண்டிப்பாக உங்கள் கோரிக்கையை நிறை வேற்றலாம். பிரச்னை இல்லை. நீங்கள் ஒரு மெயில் போட்டுவிடுங்கள். நாங்கள் அதைப் பரிசீலனை செய்து உங்கள் விருதை தமிழில் மாற்றித் தருகிறோம்' என்றனர். தொடர்ந்து ஏற்கெனவே விருது வாங்கியவர்களிடம், 'உங்களுடைய விருதுகள் இந்தியில் இருக்கிறதா? இல்லை ஆங்கிலத்திலா?' என்று கேட்டேன். அவர்கள், 'எங்களுக்கு இந்தியில்தான் இருக்கிறது' என்றனர்.

தமிழில் மாற்றித்தரவேண்டும் என்ற என் கோரிக்கையை மெயில் மூலம் அனுப்ப இருக்கிறேன். தாய்மொழி என்பது நம் தொடர்பு மொழியல்லவா. அது முக்கியத்துவம் வாய்ந்தது. பொதுவான மொழியான ஆங்கிலத்தில் விருதை கொடுத்திருக்கலாம். அப்படியில்லாமல் தமிழ் மொழிபேசுபவர்களுக்கு இந்தியில் எழுதபட்ட விருதை கொடுத்தால் எப்படி. தமிழில் வாங்கப்பட்ட விருதாக இருந்தால், அது வீட்டில் வைத்திருக்கும்போது, வருபவர்கள் பார்த்துப் படித்து தெரிந்துகொள்வார்கள். இந்தி எழுத்துகள் இருக்கும்போது, அது எனக்கே படிக்க முடியவில்லை. மற்றவர்கள் எப்படி படிப்பார்கள். விருதுக்கான மதிப்பு என்பது, மற்றவர்களிடம் பெருமையாகக் காட்டுவதில் தானே இருக்கிறது. என் பெயரை என்னால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஃபேஸ்புக்கில் புகைப்படத்தை பதிவிட்ட பின், இதுதான் உங்கள் பெயர் என்று ஒருவர் கூறுகிறார். அப்போ விருது வாங்கியவர் களாலே அந்தப் பெயரைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்றால்அப்பறம் என்ன பயன்?

வடமாநிலத்தில் இலக்கிய அமைப்பு நிகழ்ச்சி ஒன்றை நடத்தி, பின்னர் விருது கொடுத்தால், அவர்கள் தாய்மொழியில் கொடுக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளமுடியும். ஆனால், அரசு கொடுக்கும் விருதில் நமக்கு தெரியாத மொழியில் கொடுப்பதை எப்படி ஏற்க முடியும். உலகத்தில் முக்கியமான மொழி தமிழ். அதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் என அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். அந்த மொழியில் எதற்கு ஒர வஞ்சனை. முந்தைய காலத்தில், எழுத்து தெரிந்தவர்களை வைத்து செதுக்க வேண்டும். ஆனால், இப்போது கம்ப்யூட்டரில் டிசைன் செய்கின்றனர். அதை ஆங்கிலத்தில் செய்யலாம் இந்தியில் செய்யலாம் தானே? வருபவர்களிடம் வெறும் சாகித்ய அகாடமி விருது என மட்டும் கூறிக்கொள்ளவேண்டியதுதான். அங்கிருந்த யாருமே இந்தக் கோரிக்கையை முன்வைக்க வில்லை. தாய்மொழி மீது பற்றுக்கொண்டுள்ள காஷ்மீரிகள்கூட இந்தக் கோரிக்கையை முன் வைக்கவில்லை. தமிழில் எழுத்துகளைப் பதித்து கொடுக்கவேண்டும் என்ற என் கோரிக்கையை அவர்கள் பரிசீலிப்பதாகக் கூறியிருக்கிறார்கள் பார்ப்போம்!" என்றார்.

**நன்றி : விகடன்**

*அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்*

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

1. சிறையில் எனது நாட்கள் -
   ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 ரூ. 90.00
2. ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது ரூ. 100.00
3. சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 ரூ. 50.00
4. End of Casteism T.M. Mani பக்கம் -134 ரூ. 50.00
5. அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 ரூ. 10.00
6. டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 ரூ. 10.00
7. நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு
   - மு. குலாம் முஹம்மத் ரூ. 60.00
8. மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 ரூ. 80.00
9. தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 ரூ. 20.00
10. செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 ரூ. 40.00
11. கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 ரூ. 250.00
12. சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 ரூ. 15.00
13. ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 ரூ. 40.00
14. சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 ரூ. 50.00
15. நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 ரூ. 175.00
16. தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 ரூ. 110.00
17. தீண்டாமைக்குத் தீர்வு ரூ. 30.00
18. பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 ரூ. 110.00
19. பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 ரூ. 90.00
20. இஸ்லாமிய நாகரிகம் -
    முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 ரூ. 130.00
21. கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 ரூ. 70.00
22. எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி ரூ. 50.00
23. சாதி ஒழிந்தது - கன்னடம், ரூ. 50.00
24. அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் ரூ. 20.00
25. கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 ரூ. 30.00
26. முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் -
    செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 ரூ. 15.00
27. இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 ரூ. 50.00
28. இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் ரூ. 40.00
29. இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 ரூ. 30.00
30. இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? ரூ. 50.00
31. இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 ரூ. 60.00
32. இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 ரூ. 70.00
33. தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் ரூ. 30.00
34. திருக்குர் ஆன் கூறும் பொறுமை -
    டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி ரூ. 80.00
35. 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? ரூ. 220.00
36. ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் ரூ. 20.00

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்–
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? –
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? –
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்–இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்–
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்–
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் –
ராணா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Email : darultrust@yahoo.com; Website : www.darulislam.in

# உண்மையில் NIA பயங்கரவாத சதித் திட்டத்தை முறியடிக்க முயல்கிறதா?

## வாசகர் கடிதம்

சமீப காலமாக தேசிய புலனாய்வு முகமை என்ற (நரேந்திர மோடியின் ஆட்கள்) தொடர்ந்து இளைஞர்களை அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை கைது செய்து வருகிறது. அதற்கு சொல்லப்படும் காரணம் அவர்கள் பயங்கரவாத இயக்கங்களுடன் இணைந்து அதற்கு (Fund Raising) பணம் திரட்டுவதாகவும் ஆள் சேர்ப்பதாகவும் இன்னும் சில காரணங்களை கூறி அப்பாவி இஸ்லாமிய இளைஞர்களை கைது செய்துவருகிறது. கைது செய்யும் போது அவர்களிடமிருந்து மொபைல் போன்(இது யாரிடமும் இல்லா ஒன்று), சிம் கார்டு(மற்றவர்களிடம் இருப்பதெல்லாம் ஏடிஎம் கார்டு), லேப்டாப்கள், சீடிக்கள், பெண்டிரைவ், புத்தகங்கள் (நல்ல வேளை இது எதுவும் தீபாவளை நேரத்தில் கைப்பற்றாமல் போனது. இல்லையென்றால் பட்டாசுகளை எடுத்துக் கொண்டு வெடிபொருள், துப்பாக்கிகள் எடுக்கப்பட்டது என்று கூறுவார்கள்) இவை அனைத்தும் சர்வதேச தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு உள்ளவர்களிடம் இருந்து எடுத்த அதி நவீன வகை ஆயுதங்கள்! என்ன வேடிக்கை இது. இவைகளை யாருமே பார்த்ததே, பயன்படுத்தியதே இல்லையா? இவைகள் தான் பயங்கரவாதிகளின் ஆயுதம் என்றால் இன்று எத்தனை கோடி மக்களை கைது செய்ய வேண்டும் இவைகள் எல்லாம் ஒரு ஆதாரமா?

சரி ஒரு உதாரணத்திற்கு இவைகளை ஆதாரமாக எடுத்துக் கொள்கிறோம் என வைத்துக் கொள்ளுங்கள். இதுவரை அதில் இருந்து வெளிப் படுத்தியது என்ன? குறிப்பாக லேப்டாப் கைது செய்யப்பட்ட அனைத்து இளைஞர்களிடம் இருந்து பெரும்பாலும் எடுத்தது லேப்டாப் அதில் என்ன பயங்கரவாத சதி திட்டங்கள் தீட்டப்பட்டு இருந்தது. புரோகித்-இன் லேப்டாப்பில் உள்ளதை விட!

உண்மையில் NIA பயங்கரவாதத்தை தடுக்க நினைக்கிறது என்றால் (கலேனல்) புரோகித்-இன் லேப்டாப்பில் உள்ளதையும் இன்னும் திறக்கப்படாமல் இருக்கும் 18 லேப்டாப்புகளையும் ஆய்வு செய்திருக்க வேண்டும். காரணம் அதில் தான் நாட்டின் மொத்த ஆபத்தும் அடங்கி இருக்கு.

**யார் இந்த புரோகித்?**

நமது இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து ஓர் இராணுவ அதிகாரி அதிலும் உள்ள பிரிவில் வேலை பார்த்தவர். இந்த புரோகித் இராணுவத்தில் இருந்து கொண்டே பல கீழறுப்பு வேலைகளை பார்த்தவன்.

இந்தியாவின் அரசியல் நிர்ணயச் சட்டத்தை தூக்கி வீசிவிட்டு அந்த இடத்தில் ஆரியவர்த் இந்து ராஷ்டிராவை நிறுவ வேண்டும் என்று பல வேலைகளை செய்தவன். அதற்காக நமது ராணுவத்தின் செலவிலேயே பலமுறை இஸ்ரேல் சென்று வந்தான். இந்து ராஷ்டிராவிற்கான அலுவலகத்தையும் திறந்து வைத்து விட்டு இஸ்ரேலில் தனது அமைப்பை( அபிநவ் பாரத்) சார்ந்தவர்களுக்கு பயிற்சியும் தர ஒப்பந்தம் அமைத்து வந்தான். ஆரியவர்த் இந்து ராஷ்டிராவை இரத்த புரட்சியின் மூலம், அதாவது மக்களின் பிணங்களின் மீது ஏற்படுத்த முயலுகின்றனர். பல குண்டு வெடிப்பு களையும் நடத்தி மாலேகான் போல மக்களின் உயிரையும் பறித்து விட்டார்கள் அதிலும் பழி முஸ்லிம்கள் மீது. இதை அனைத்தையும் கண்டுபிடித்தவர் தான் ஹேமந்த் கர்கரே என்ற நேர்மையான அதிகாரி. அவரும் பின்னாட்களில் கொல்லப்பட்டார். (விரிவான தகவல்களுக்கு: புரோகித் - இன் லேப்டாப்பில் இருந்தது என்ன? - வேர்கள் வெளியீடு)

தொடர்ந்து ஒரு கூட்டம் மதத் துவேஷ பேச்சுகளிலும், பயங்கரவாத செயல்களிலும் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றது. இவர்கள் செய்வது எல்லாம் பயங்கரவாத செயல்கள் இல்லையா? இதுவரை இந்த ஆர்.எஸ்.எஸ்., அபிநவ் பாரத், வந்தே மாதரம் போன்ற தீவிரவாத அமைப்புகள் மீதும், அதை சார்ந்தவர்கள் மீது எம்.ஐ.ஏ. எத்துனை முறை சோதனை நடத்தியிருகின்றது? இதுதான் சோதனை செய்யும் முறையா? என்.ஐ.ஏ.வின் பார்வையில் தொப்பியும், தாடியும் தான் பயங்கரமானவர்கள். ஆனால் மேற்சொன்ன இயக்கங்களை சார்ந்தவர்கள் செய்யும் செயல்கள் எல்லாம் பயங்கரவாதம் இல்லையா? எதை செய்ய நினைக்கிறது என்.ஐ.ஏ. பயங்கரவாதத்தை ஒழிக்கவா? அல்லது பயங்கரவாதத்தை ஒழிக்க நினைப்பவர்களையா? என்.ஐ.ஏ. போன்ற அமைப்புகள் எதற்காக உருவாக்கப்பட்டது? அதற்கு சிறப்பு சட்டங்களும், சலுகைகளும் ஏன் வழங்கப்படுகின்றன என்பதை எல்லாம் நாம் நன்றாகவே அறிவோம். அது ஓர் ஆரியவர்த் இந்து ராஷ்டிராவிற்கான முழு நேரப் பணியைச் செய்கிறது.

நாம் ஒன்று படுவோம். பாசிசத்தை வேரறுப்போம். நாட்டைப் பாதுகாப்போம்.

**யாசர் அராபத்**
**திருப்பூர்**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002